# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report

# 2013



කර්මාන්ත හා වාණිජ කටයුතු අමාත්‍යාංශය

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

**Ministry of Industry & Commerce**

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2013

## கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

*இந்த அறிக்கையின் மொழிபெயர்ப்பு ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் கிடைக்கும்.*

# மஹிந்த சிந்தனையின் நோக்கு



வர்த்தக சேவைகள், சர்வதேச வங்கியல் மற்றும் சர்வதேச முதலீடு ஆகிய துறைகளில் இலங்கையை ஆசியாவின் முதன்மையான வர்த்தக மையங்களில் ஒன்றாக தாபிப்பதற்கு நான் உத்தேசத்துள்ளேன்.

# தலைமைத்துவமும் வழிகாட்டல்களும்



**மாண்புமிகு றிஸாட் பதியுதீன்**
கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர்



**மாண்புமிகு லக்ஷ்மன் வசந்த பெரேரா**
கைத்தொழில் மற்றும் வணிக பிரதி அமைச்சர்



**திரு. அநுர சிறிவர்தன**
செயலாளர் - கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

# முகவுரை

இந்த கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் 2013ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை திறைசேரியின் 2001 செப்டெம்பர் 12ம் திகதி மற்றும் 402ம் இலக்க சுற்றுநிறுபத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின் முதல் பகுதி, அமைச்சின் கைத்தொழில் துறையின் கீழ் உள்ள பிரிவுகள் மற்றும் நிறுவனங்களினால் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளின் முன்னேற்றத்தினை வெளிப்படுத்துகின்றது. இந்த அறிக்கையின் இரண்டாம் பகுதி வணிகத் துறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளின் முன்னேற்றத்தினை வெளிப்படுத்துகின்றது.

இந்த அறிக்கையின் மூன்றாம் பகுதியில் அமைச்சின் பொதுத் தகவல்கள் மற்றும் முழுமையான நிதி முன்னேற்றம் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது.

## தொலைநோக்கு

*‘‘சக்தி மிக்க வணிகச் சூழலின் மூலம் சர்வதேச போட்டியையேற்படுத்தும் வல்லமையுள்ள கைத்தொழில்துறையினை இலங்கையினுள் உருவாக்கல்.’’*

## செயற்பணி

*"மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தக் கூடியதும், உயர் பெறுமதி சேர்த்த உற்பத்திகளை மேற்கொள்ளுகின்றதும், தொடர்ந்து மாறுகின்ற வர்த்தகப் பரிபாலனத்தையுடையதும், நிலைத்திருக்குகக் கூடியதும் மற்றும் போட்டியையேற்படுத்தும் வல்லமையுள்ளதுமான நிறுவனத்தின் அபிவிருத்திக்கு உகந்த சூழலை உருவாக்குதல்"*

### அமைச்சின் பிரதான நோக்கங்கள்

- சர்வதேச போட்டித்தன்மையுள்ள மற்றும் அறிவுசார் தயாரிப்புக் கைத்தொழிற்துறையை உருவாக்கல்.
- பெறுமதி சேர் ஏற்றுமதியை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஊக்குவித்தல் என்பவற்றின் மூலம் ஏற்றுமதி வருமானத்தை உச்சப்படுத்தல்.
- ஆரோக்கியமான வணிகச் சூழலை உருவாக்கல்

# அமைச்சின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள்

22.11.2010ம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சுக்குச் சாட்டப்பட்டுள்ள பணிகள் பின்வருமாறு அமையும்

1. மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு மற்றும் அரசினால் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் ஏனைய தேசிய கொள்கைகளின் அடிப்படையில் கைத்தொழில் மற்றும் வணிக விடயத்திற்கு மற்றும் அதற்கு சமாந்தரமான திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவன விடயங்களுக்கு உரிய கொள்கை, நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கருத்திட்டம் என்பவற்றை ஒருங்கிணைத்தல்.

2. உரிய நோக்கத்தினை பூர்த்தி செய்வதற்காக தேசிய திட்டமிடல் அதிகாரிகளுடன் இணக்கப்பாட்டுக்கு வந்து கால எல்லை மற்றும் வரவுசெலவுத்திட்ட வள எல்லைக்குள் மேற்குறித்த கொள்கை, நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.

3. அமைச்சின் விடயப்பரப்புக்குள் உள்ளங்கும் பொது மக்கள் சேவையினை வினைத்திறன் மற்றும் மக்கள் விரும்பும் வகையில் வழங்குதல்.

4. வீணாக்குதல் மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றை ஒழித்து, அமைச்சின் பணிகள் பூர்த்திசெய்வதை உறுதிப்படுத்தவதற்கு ஏற்றவகையில் புதிய முகாமைத்துவ தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் அனைத்து முறைகளையும் மீள்நிர்மாணம் செய்தல்.

5. புலமைச் சொத்துக்கள் பற்றிய சர்வதேச உடனபடிக்கையை நிர்வகிப்பதற்கு உரிய பணிகளின் வெளியிடல் உரிமை மற்றும் உலக புலமைச் சொத்துக் காரியாலயத்தின் வெளியிடல் உரிமை

6. ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் ஆலோசனைச் சேவை

7. சர்வதேச வியாபாரத் தொடர்புகள்

8. வெளிநாடுகளில் இலங்கை வியாபார நடவடிக்கைகளின் பிரதிநிதித்துவம்

9. போட்டித்தன்மை உருவாக்கல்

10. கைத்தொழில் மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி

# கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படும் பிரிவுகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்

## கைத்தொழில் துறை

பேரினக் கொள்கைப் பிரிவு

கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

அபிவிருத்திப் பிரிவு 1

அபிவிருத்திப் பிரிவு 2

அபிவிருத்திப் பிரிவு 3

கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவு

உற்பத்தித்திறன் முன்னேற்றப் பிரிவு

இராசயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபை

கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டபூர்வ சபைகள் பிரிவு
வரையறுக்கப்பட்ட இலங்கை கஹட்டகஹ காரியக் கம்பனி

வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

புடவைக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

புடவைக் கைத்தொழில் திணைக்களம்

இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்

## வணிகப் பிரிவு

வணிகத் திணைக்களம்

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

இலங்கைத் தேசிய புலமைச் சொத்துக் காரியாலயம்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

# உள்ளடக்கம்



| | பக்கம் |
|---|---|
| **கைத்தொழில் துறை** | |
| பேரினக் கொள்கைப் பிரிவு | 1 |
| கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு | 2 |
| அபிவிருத்திப் பிரிவு 1 | 5 |
| அபிவிருத்திப் பிரிவு 2 | 6 |
| அபிவிருத்திப் பிரிவு 3 | 8 |
| கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவு | 10 |
| உற்பத்தித்திறன் முன்னேற்றப் பிரிவு | 12 |
| இராசயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபை | 13 |
| கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டபூர்வ சபைகள் பிரிவு | 16 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கஹுட்டகஹ காரியக் கம்பனி | 20 |
| வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி | 21 |
| தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை | 23 |
| புடவைக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு | 27 |
| புடவைக் கைத்தொழில் திணைக்களம் | 31 |
| இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் | 32 |
| **வணிகத் துறை** | |
| வணிகத் திணைக்களம் | 35 |
| கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | 48 |
| இலங்கைத் தேசிய புலமைச் சொத்துக் காரியாலயம் | 51 |
| இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை | 55 |
| **அமைச்சின் பொதுத் தகவல்கள்** | 69 |
| **நிதி முன்னேற்றம்** | 75 |

# கைத்தொழில் துறை

# கைத்தொழில் கொள்கை மற்றும் அபிவிருத்திப் பிரிவு

## அறிமுகம்

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் பேரினக் கொள்கைப் பிரிவு கைத்தொழில் அபிவிருத்திக்காக தேசிய கொள்கைச் சட்டகத்திற்கு இசைவாக வர்த்தக மற்றும் தீர்வைக் கொள்கைகளை உருவாக்குவதற்கு பங்களிப்பினை வழங்குகின்றது

**சர்வதேச வர்த்தகம் தொடர்பான பணிகள்**

சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் ஏற்றுமதி சார்ந்த கைத்தொழிற்துறைக்கான ஏற்றுமதிச் வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்கு உதவுவதுடன், தேசிய கைத்தொழிற்சாலைகளைப் பாதுகாப்பதற்காக வணிகத் திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

**தீர்வைகள் தொடர்பான பணிகள்**

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, வணிகத் திணைக்களம், தீர்வைகள் மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களம், பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய சபை என்பவற்றுடன் இணைந்து பேரினக் கொள்கைப் பிரிவு தேசிய கைத்தொழிற்துறை எதிர்கொள்ளும் தீர்வைகள் தொடர்பான பிரச்சனைகளை தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

**2013 டிசம்பர் 31 வரையிலான முன்னேற்றங்கள்**

**தேசிய கைத்தொழில் துறையின் முன்னேற்றத்திற்காக இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

பேரினக் கொள்கைப் பிரிவு கைத்தொழிற்சாலையாளர்களின் தீர்வைகள் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதற்கு சுங்கத்தீர்வைகள் மற்றும்.். அல்லது செஸ் வரியினை மாற்றுவதற்கு விதப்புரைகளை வழங்கியதன் மூலம் பங்களிப்பினை வழங்கியது.

- கைத்தொழிற்துறைக்கு பொறுப்பாக உள்ள அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைக்கு அமைய, 30% வீதத்திற்கு மேற்பட்ட உள்ளூர் பெறுமதி சேர்த்தல்களை மேற்கொள்ளுகின்ற உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அல்லது ஒன்றிணைக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் கலால் வரியில் இருந்து விலக்குப் பெறும் உள்நாட்டு பெறுமதி சேர்ப்பு, ஆகுசெலவு கட்டமைப்புத் தயாரிப்பு மற்றும் தொடர்புடைய ஆவணங்கள், ஒன்றிணைக்கப்பட்ட வாகன பரீட்சிப்பு என்பக எல்பிடிடியால் (LPDD) மேற்கொள்ளப்படும்.

ஏழு கம்பனிகள் வாகனங்களை ஒன்றினைக்கும் வியபாரத்தில் ஈடுபட்டுள்ளதுடன், முதன்முதலில் 2008ஆம் ஆண்டு முதல்தொகுதி வாகனங்கள் வரியில் இருந்து விலக்குப் பெற்றன. 2008ஆம் ஆண்டில் இருந்து 2013வரை ஏழு கம்பனிகள், 30% மேற்பட்ட பெறுமதி சேர்த்தலுடன் 17 வகையான சுமார் 6000 வாகனங்களை ஒன்றிணைத்துள்ளன.

அத்தோடு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மின்சாரப் பொருட்களை உற்பத்தி செய்யும் ஒரு உள்நாட்டு கம்பனி, 30% வீதத்திற்கு மேற்பட்ட உள்ளூர் பெறுமதி சேர்த்தல்களை மேற்கொண்டு சலவை இயந்திரங்களை உற்பத்தி செய்து கலால் வரியில் இருந்து விலக்குப் பெற்றது. சலவை இயந்திரத்தோடு, இரு கம்பனிகளினால் அதி உறை குளிர்சாதனம் மற்றும் போத்தல் குளிர்விக்கும் இயந்திரங்கள் என்பனவும் 30% வீதத்திற்கு மேற்பட்ட உள்ளூர் பெறுமதி சேர்த்தல்களை மேற்கொண்டு தயாரிக்கப்படுகின்றது.

- வரவுசெலவுத் திட்டம் 2014 தொடர்பான ‘இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சிக்கான உபாயமார்க்கம் பற்றிய கருத்தரங்கு மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்’ டிசம்பர் 17ம் திகதி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சர் கலாநிதி பீ பி ஜயசுந்தரவின் தலைமையின் கீழ் கைத்தொழில் கொள்கை மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் ஒழுங்குசெய்யப்பட்டதுடன். இதில் கைத்தொழிற்சாலையாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் வர்த்தகச் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் என இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றினர்.
- கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு மற்றும் அதன் கீழ் செயற்படும் நிறுவனங்களால் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் தொடர்பான கையேடு கைத்தொழில் கொள்கை மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் இலங்கையின் பிரதிபலிப்புக் கண்காட்சியில் வெளியிடப்பட்டது.

# பிரதேசக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

**அறிமுகம்**

தேசிய வருமானத்திற்கு பங்களிப்பினை நல்கும், அபிவிருத்தி அடைந்த பகுதிகளில் அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகளை நகரங்களில் இருந்து விலகி வியாப்பிப்பதற்கு கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் அமைந்துள்ள பிரதேசக் கைத்தொழில் அபிவிருத்தி அலகு பாரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றது. இந்தப் பிரிவின் பிரதான குறிக்கோளாக அமைவது, பிரதேச ரீதியில் கைத்தொழிற்துறைக்கான முதலீடுகளை ஊக்குவித்தல், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல் மற்றும் தொழில்நுட்ப மற்றும் ஆலோசனை உதவிகளை வழங்குதல் ஆகும்.

**பிரதேசக் கைத்தொழில் சேவைக் குழுக்கள்**

மேற்குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்காக, 1990ஆம் ஆண்டு 46ஆம் இலக்க கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தின் கீழ் பிரதேச கைத்தொழில் சேவைக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளது. இக்குழுக்களின் பணிகளாக அமைவது, மாகாணங்களில் உள்ள கைத்தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு செயற்பாட்டுத் திட்டம் உட்படத் திட்டங்களைத் தயாரித்தல், கைத்தொழிற்சாலைகளுக்கு அவசியமான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் முதலீட்டுத் தீர்மானங்களை அமுலபடுத்துவதற்கு கைத்தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு உதவுதல் என்பனவாகும்

**பிரதேசக் கைத்தொழில் சேவை நிலையங்கள் (RISCs)**

இக் குழுக்களின் தலைவராக தனியார்துறையைச் சேர்ந்த வியாபாரியொருவர் கௌரவ கைத்தொழில் அமைச்சரினால், அந்த மாகாணத்திற்குரிய மாகாண சபையின் முதலமைச்சருடனான கலந்தாலோசனையின் பின்னர் நியமிக்கப்படுவார். ஏனைய 15 அங்கத்தவர்களும் அந்த மாகாணத்தில் அமைந்துள்ள கைத்தொழிலாளர்கள் மற்றும் சிரேஸ்ட அரச அலுவலர்களில் இருந்து நியமிக்கப்படுவர். இந்தக் குழுக்களின் பணிகளை மேற்கொள்வதற்காக, இக்குழுவின் செயலாளராக பிராந்தியப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டு, உதவிக்கு ஒரு ஊழியருடன் ஒவ்வொரு மாகணத்திற்கும் ஒரு சேவை நிலையத்தின் அடிப்படையில் ஒன்பது பிரதேச கைத்தொழில் சேவை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளது.

பிரதேச கைத்தொழில் சேவை நிலையத்திற்கு கிடைக்கும், கைத்தொழில் பேட்டையில் கைத்தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான அவசியமான காணிகளை வேண்டி வழங்கப்படும் புதிய கருத்திட்ட முன்மொழிவுகள் 1990ஆம் ஆண்டு 46ஆம் இலக்க கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பிரதேச கைத்தொழில் சேவைக் குழுக்களினால் மதிப்பிடப்படும். இக்குழு, பிரதேச மட்டத்தில் புதிய கைத்தொழிற்சாலையாளர்களை தேர்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். பிரதேச கைத்தொழில் சேவைக் குழுக்களினால் சிபாரிசு செய்யப்பட்ட கருத்திட்டங்கள், அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவினால் நோக்கப்படும். கருத்திட்டங்கள் உற்பத்திப் படிமுறை, பெறுமதி சேர்க்கையின் வீதம், உருவாக்கப்படும் தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கை, சூழல் தாக்கம் மற்றும் நிதி நிலைமை என்பவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

இதற்கு மேலதிகமாக, புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதினால் சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தைக் குறைப்பதற்காக, சூழல் சார்ந்த கருத்திட்டங்களுக்கான விதப்புரையை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. குழுவினால் விதப்புரை செய்யப்பட்ட கருத்திட்டங்கள் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்படும். ஒப்புதல் வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு 35 வருடகால குத்தகை அடிப்படையில் அமைச்சினால் காணிகள் ஒதுக்கப்படும்.

**31 டிசம்பர் 2013 வரையிலான முன்னேற்றம்**

இவ்வருடம் பிரதேச கைத்தொழில் சேவை நிலையத்திற்கு, புதிய கருத்திட்ட யோசனைகளுடன் 56 விண்ணப்பப்படிவங்கள் கிடைத்ததுடன், இதில் 39 கருத்திட்ட யோசனைகள் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வக் குழுவினால் காணிகளை ஒதுக்குவதற்கு பொருத்தமான கருத்திட்டங்களாக சிபாரிசு செய்யப்பட்டது. அத்தோடு 17 புதிய கைத்தொழிலாளர்கள் தங்கள் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்ததுடன், இதன் மூலம் 3,104 தொழில்வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டது

**எம்பிலிப்பிட்டிய கைத்தொழில் பேட்டை**

எம்பிலிப்பிட்டிய கைத்தொழில் பேட்டை 25 ஏக்கரில் எம்பிலிப்பிட்டிய மின்வலு நிலையத்துடன் அவசியமான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. அத்தோடு, நிலத்துண்டுகள் இரு முதலீட்டாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் வர்த்தக உற்பத்தியினை ஆரம்பித்துள்ளனர். அத்தோடு, உலர்த்தப்பட்ட தேங்காய் மற்றும் ஏனைய தேங்காய் உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் கைத்தொழிற்சாலையொன்றினை நிறுவுவதற்கான கருத்திட்ட யோசனையொன்று கிடைத்துள்ளது.

**மத்துகம கைத்தொழில் பேட்டை (கட்டம் - 1 மற்றும் 11)**

மத்துகம கைத்தொழில் பேட்டையின் முதலாம் கட்டம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், மத்திய மற்றும் பாரிய அளவிலான கைத்தொழிற்சாலைகளுக்காக நிலத்துண்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகள் உற்பத்தி நிறுவனமொன்று வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன், ஏனைய இரு கைத்தொழிற்சாலைகள் கட்டுமானப் பணிகளை ஆரம்பித்துள்ளன.
மத்துகம கைத்தொழில் பேட்டையின் இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் முதலாம் கட்ட நடவடிக்கைகள் பூர்த்திசெய்ததன் பின்னருடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**திருகோணமலை கைத்தொழில் பேட்டை**


'கிழக்கின் உதயம்' நிகழ்ச்சித்திட்டத்துடன், திருகோணமலை கைத்தொழில் பேட்டையின் முதலாம் கட்டம் 25 ஏக்கரில் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன், 09 கைத்தொழிற்சாலைகள் தெரிவுசெய்யப்பட்டன. தற்போது ஐந்து கைத்தொழிற்சாலைகள் 850 தொழிலாளர்களுடன் தங்கள் வணிகப் பணிகளை ஆரம்பித்துள்ளது. ஏனைய தேர்வு செய்யப்பட்ட கைத்தொழிற்சாலைகள் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.
இரண்டாம் கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்வதுடன், காணி அபிவிருத்தியில் 70%வீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**மன்னார் கைத்தொழில் பேட்டை**

'வடக்கின் வசந்தம்' நிகழ்ச்சித்திட்டத்தோடு இணைந்ததாக மன்னாரில் முதவாது கைத்தொழிற் பேட்டை அபிவிருத்தி நிகழ்ச்சிகள், மன்னார் தீவில் 25 ஏக்கரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு கைத்தொழில் முதலீட்டுச் சபையினால் அங்கீகாரமளிக்கப்பட்ட இரு ஆடைக் கைத்தொழிற்சாலைகளின் கட்டங்களின் நவீன வசதிகளுடனான நிர்மாணப்பணிகள் நிறைவடைந்துள்ளன. தற்கொது அவை பரீட்சாத்தமான பணிகளை ஆரம்பித்துள்ளதுடன், இக்கருத்திட்டதின் கீழ் 450 தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.

**மட்டக்களப்பு கைத்தொழில் பேட்டை**

மண்முனைப் பிரதேசச் செயலகப் பிரிவில் திரைமடு கிராமத்தில் 24 ஏக்கர் நிலத்தில் கைத்தொழில் பேட்டையினை நிறுவுவதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. அமைச்சு தற்போது மதிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், மத்திய பொறியியலாளர் கட்டுமான முகவர் நிலையத்திற்கு நிர்மாணப் பணிகள் கையளிக்கப்பட்டுள்ளது. 2013 இல் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.




*மத்துகம மற்றும் திருகோணமலை கைத்தொழில் பேட்டையின் -II ம் கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்கின்றது*

# அபிவிருத்திப் பிரிவு 1

### அறிமுகம்

இந்த பிரிவுகளின் பிரதான நோக்கமாக அமைவது, போட்டித்தன்மையுள்ள சர்வதேசச் சந்தைக்கு தரமான பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உள்நாட்டு கைத்தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதுடன், உள்நாட்டு சந்தைத் தேவையை பூர்த்திசெய்யக்கூடிய வகையில் கைத்தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதாகும்.

### இப்பிரிவின் கீழ் உள்ள கைத்தொழில்துறைகள்

- கூட்டுப் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக் கைத்தொழில்
- கூட்டுப் பெறுமதி சேர்க்கப்பட்ட தும்புக் கைத்தொழில்
- பதனிட்ட உணவுக் கைத்தொழில்
- பொதியிடல் கைத்தொழிற்துறை
- வாசனைத் திரவியம் சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்

### கூட்டுப் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக் கைத்தொழில்துறை

தேயிலைக்கான கூட்டுப் பெறுமதிச் சேர்ப்பு பிரதானமாக பொதியிடல் செயன்முறையினூடாகவும் மற்றும் நறுமணங்கள், மூலிகைகைகள் மற்றும் பழத்துண்டுகளைச் சேர்ப்பதன் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தச் செயன்முறையை ஊக்குவிப்பதற்காக கைத்தொழிற்துறையினருக்கு இறக்குமதிப் பொருட்கள் மற்றும் தொழில்நுட்பத்திற்கு தீர்வைகள் விலக்களிக்கப்படுகின்றது. இதுவரை 10 தேயிலைக் கைத்தொழிற்சாலைகள் ஏற்றுமதிச் செயன்முறைக்கான தற்காலிக இறக்குமதி வசதிகளைப் பெற்றுள்ளன.

### உணவுப் பதனிடல் கைத்தொழிற்துறை

பதனிட்ட உணவு மற்றும் பதனிட்ட பொதி (Pro food / Pro Pack) சர்வதேசக் கண்காட்சி 12வது வருடமாக இவ்வருடமும் 2013 ஒகஸ்ட் மாதம் வெற்றிகரமாக நடாத்தப்பட்டதுடன் இதில் 340 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கைத்தொழிற்சாலையாளர்கள் பங்குபற்றினர். ஏற்றுமதியினை ஊக்குவிப்பதற்காக, ஏற்றுமதி செயன்முறைக்காக தற்காலிக இறக்குமதி தீர்வை சலுகைத்திட்டத்தின் கீழ் 116 பெறுமதி சேர் உற்பத்தியாளர்களுக்கு வசதியளிக்கப்பட்டது.

- தேசிய தரச்சான்றிதழ் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உணவினைப் பாதுகாப்பாக பேணுவது தொடர்பான சர்வதேசச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்காக 15 கைத்தொழிற்சாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இந்நதிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் உணவுக் கைத்தொழிலில் ஈடுபடும் நிறுவனங்கள், தேசிய மற்றும் சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ISO, HACCP, SLS மற்றும் GMP போன்ற உணவுப் பாதுகாப்பு, சுகாதாரத் தரம் தொடர்பான சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதும், இதன் மூலம் அவர்கள் தரமானதும் பாதுகாப்பானதும் உணவினைத் தயாரிப்பதற்கு அவர்களை ஊக்குவிப்பதுமாகும்.
- உணவுப் பாதுகாப்பு, உணவு சட்ட விதிமுறைகள், உணவு பன்முகப்படுத்தல்கள், புதிய தலைமுறையினருக்கான உணவு, போசணை மற்றும் உணவுப் பழக்கவழக்கங்கள் எனும் தலைப்புகளில் கைத்தொழிற்சாலைகளுக்கு விழிப்பூட்டும் நிகழ்சித்திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நடைமுறைகள் தொடர்பாக கைத்தொழிற்சாலையாளர்களை அறிவூட்டுவதாகும்.

### பொதியிடல் கைத்தொழிற்துறை

- பொதியிடல் கைத்தொழிற்துறையைச் சேர்ந்த 15 பங்குபற்றுனர்களுக்கு ( தொழில்நுட்பவியலாளர்), இந்தியாவின் பொதியிடல் நிறுவனத்தினால் (IIP), தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பான விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. இலங்கை பொதியிடல் நிறுவனத்தினால் (SLPI) மேற்கொள்ளப்படும் உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளின் போது, இந்த வெற்றிகரமான பயிலுனர்கள் வளநபர்களாகப் பயன்படுத்தப்படுகின்றனர்.
- கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற .தயட கிருள கண்காட்சியில் சிறிய மற்றும் மத்திய தர தொழில்முயற்சியாளர்களுக்காக பொதியிடல் தொழில்நுட்பம் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.
- திறன் மட்டத்தினை அதிகரித்தல் மற்றும் புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தல் என்பவற்றிற்காக பிராந்திய கைத்தொழில் சம்மேளனங்களின் உதவியுடன், பொதியிடல் தொழில்நுட்பவியலாளர்களுக்கான சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்குசெய்யப்பட்டது.

# அபிவிருத்திப் பிரிவு - II

**அறிமுகம்**

இப்பிரிவின் நோக்கமாக போட்டித் தன்மையுள்ள சந்தைச் சூழலுக்கு அமைவாக, உயர் தரமுடைய பொருள்களை உற்பத்தி செய்தவதற்கு தற்போதுள்ள கைத்தொழில்களின் அபிவிருத்தி மற்றும் புதிய முதலீட்டு ஊக்குவிப்பு என்பவற்றிற்கு வசதிகளை வழங்குதல் அமைகின்றது.

**இப்பிரிவின் அதிகாரத்திற்கு உட்பட்ட கைத்தொழில் பிரிவுகள்**

- அச்சு மற்றும் வார்ப்புக் கைத்தொழில்
- இறப்பர் சம்பந்தமான கைத்தொழில்
- உலோக அடிப்படைப் பொருட்கள் மற்றும் பொறிகள் கைத்தொழில்
- படகு கட்டுமானக் கைத்தொழில்
- மோட்டார் வாகனத் தயாரிப்பு மற்றும் போக்குவரத்து உபகரணங்கள் தயாரிப்புக் கைத்தொழில்
- மரமும் மரம் சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்
- பிளாஸ்டிக் சார்ந்த உற்பத்திக் கைத்தொழில்
- ஒளியியல் மற்றும் புகைப்பட உபகரணக்கைத்தொழில்

**31 டிசம்பர் 2013 வரையான முன்னேற்றம்**

**அச்சு மற்றும் வார்ப்பு அச்சு கைத்தொழில்**

அச்சு மற்றும் வார்ப்பு கைத்தொழிற்துறையின் மேம்பாட்டுக்கு, அந்த உற்பத்திததுறையின் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு, அச்சு மற்றும் வார்ப்பு வசதியளிப்பு மற்றும் அபிவிருத்தி நிலையம் மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டதுடன், இக்கருத்திட்டத்திற்கு அமைச்சு ரூபா 85 மில்லியனை வழங்கிதுடன் மொரட்டுவைப் பல்கலைக்கழகம் மற்றும் தனியார் துறை ரூபா 30மில்லியனுக்கான பங்களிப்பை வழங்கியது.

இந்நிறுவனம் முழு நேர மற்றும் பகுதி நேர பயிற்சிப் பாடநெறிகள், இயந்திரத் தொழிற்பாடுகள், வடிவமைப்பு மற்றும் பகுப்பாய்வு மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குகின்றது.

இந்நிலையமானது வெற்றிகரமாகத் தொழிற்படுதவதுடன், 131 மாணவர்கள் பயிற்றப்பட்டு, 192 கைத்தொழிற்துறைகளுக்கு சேவைகளை வழங்கியதன் மூலம் ரூபா 9 மில்லியனை பெற்றுக்கொண்டது.

**அச்சு மற்றும் வார்ப்பு வசதியளிப்பு நிறுவனத்தில் உள்ள வடிவமைப்பு உற்பத்தி மற்றும் ஆலோசனை வேலை வாய்ப்புகள்**

*மூலவளம் - அபிவிருத்திப் பிரிவு 2*

**அச்சு மற்றும் வார்ப்பு வசதியளிப்பு நிறுவனத்தில் உள்ள**

| | அச்சு மற்றும் வார்ப்பு வசதியளிப்பு நிறுவனத்தில் உள்ள வடிவமைப்பு உற்பத்தி மற்றும் ஆலோசனை வேலை வாய்ப்புகள் | | |
|---|---|---|---|
| | வேலை வாய்ப்புகள் | வாடிக்கையாளர்கள் | வருமானம் (ரூபா) |
| **2011** | 60 | 24 | 2,888,272 |
| **2012** | 95 | 30 | 2,551,904 |
| **2013** | 96 | 34 | 2,078,150 |
| **மொத்தம்** | **251** | **88** | **7,518,326** |

**பகுதிநேர பாட நெறிகள்**

*மூலவளம் - அபிவிருத்திப் பிரிவு 2*

**இறப்பர் சார்ந்த கைத்தொழில்கள்**

| | பகுதிநேர பாட நெறிகள் | | |
|---|---|---|---|
| | பாடநெறிகள் | பங்குபற்றுனர்கள் | வருமானம் (ரூபா) |
| **2011** | 03 | 51 | 1,751,080 |
| **2012** | 04 | 56 | 1,335,790 |
| **2013** | 04 | 51 | 1,651,890 |
| **மொத்தம்** | **11** | **158** | **4,738,760** |

இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களில் இறப்பர் தனக்கென தனியிடத்தைக் கொண்டுள்ளதுடன், திண்ம இறப்பரை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் ஆறாவது இடத்தையும் தன்வசம் வைத்துக் கொண்டுள்ளது. அத்துடன், இறப்பர் சார் உற்பத்திகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் ஏனைய உற்பத்திகளுடன் ஒப்பிடும் பொழுது உயர் பெறுமதி சேர்த்லை மேற்கொள்ளுகின்றது. அதனால், இறப்பர் நார்ந்த உற்பத்தி கைத்தொழிற்துறைகளுக்கு முகாமைத்துவ தகவல் முறைமையொன்றினை நிறுவுவதற்கு அமைச்சு திட்டமிட்டுள்ளது. இதற்காக ஈஎம்எல் கென்ஸல்டன் நிறுவனத்துடன் விஞ்ஞாபன உடன்பாட்டு ஒப்பந்தத்துக்கு வந்துள்ளதுடன், அதன் ஆரம்பப்படியாக மேற்கு மாகாணத்தில் இறப்பர் சார் உற்பத்திகளை மேற்கொள்ளும் 75 உற்பத்தியாளர்களிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளது.

**மரம் மற்றும் மரம் சார்ந்த கைத்தொழிற்துறை மூங்கில் சார் தயாரிப்புத் துறை**

தற்போது, வர்த்தக மரங்களின் பற்றாக்குறை மற்றும் மரம் சார்ந்த பொருட்களின் அதிகூடிய விலை என்பனவற்றின் விளைவாக மரம் மற்றும் மரம் சார்ந்த கைத்தொழிற்துறையானது பாரிய பிரச்சனைகளுக்கு முகம்கொடுக்கின்றது. அதனால் இதற்குத் தீர்வாக, இப்பிரிவு ஐக்கிய நாடுகளின் கைத்தொழில் அபிவிருந்தி நிறுவனத்துடன் (UNIDO) இணைந்து, இலங்கையின் காலநிலைக்குப் பொருத்தமான மூங்கில் வளர்ப்பினை பிரபல்யப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

**முன்னேற்றம்**

தற்சமயம், பெருந்தோட்டக் கைத்தொழிற்துறை அமைச்சின் ஒத்துழைப்போடு, மூங்கில் வளர்ப்புக்கு உகந்த நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்தோடு மூதலீட்டாளர்கள் சுயமாக மூங்கில் வளர்ப்பினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அதேசமயம், ஒரு தனியார் கைத்தொழிற்துறை நிறுவனம் மூங்கில் சார்ந்த உற்பத்திகளை ஆரம்பித்துள்ளது.

**பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

இந்த கைத்தொழிற்துறைக்கு உழைப்பாளர்களை வழங்குவதற்காக, இக்கைத்தொழிற்துறையில் இருந்து 15 உழைப்பாளர்கள் பயிற்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சியினை மொரட்டுவையில் அமைந்துள்ள பயிலுனர் பயிற்சி நிறுவனத்தின் ஊடாக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

# அபிவிருத்திப் பிரிவு - III

**அறிமுகம்**

இந்தப் பிரிவின் நோக்கம், சர்வதேச சந்தையில் போட்டியிடுவதற்கு வல்லமையுள்ள தரத்தில் உயர்ந்த பொருட்களை உற்பத்தி செய்வதற்கு கைத்தொழிற்துறைகளுக்கு ஊக்குவிப்புகளையும், வசதிகளையும் வழங்குதல் ஆகும்.

**இப்பிரிவின் கீழ் அமைந்துள்ள உப கைத்தொழில் பிரிவுகள்**

- பாதணிக் கைத்தொழிற்துறை
- தோல் பொருட்கள் கைத்தொழிற்துறை
- மட்பாண்டப் பொருட்கள் கைத்தொழிற்துறை
- மின் மற்றும் மின்னிலத்திரனியல் கைத்தொழிற்துறை ஔதடம் மற்றும் அழகுசாதன பொருட்கள் கைத்தொழிற்துறை
- வர்ணப்பூச்சு மற்றும் அச்சுக் கைத்தொழிற்துறை

**31 டிசம்பர் 2013 வரையிலான முன்னேற்றம்.**

**பாதணி மற்றும் தோல்பொருட்கள் கண்காட்சி - 2013**

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் இணைந்து 5வது தடவையாகவும், பாதணி மற்றும் தோற்பொருட்கள் கண்காட்சியினை 2013 பெப்பரவரியில் நடாத்தியது. இந்தக் கண்காட்சி, சர்வதேசமட்டத்தில் கைத்தொழிற்துறைக்கு அங்கீகாரத்தினைப் பெற்றுத்தரக்கூடிய சிறந்த நிகழ்வாகும். இதன் மூலம் வெளிநாட்டுச் சந்தைக்குள் உள்நுழைவதற்கும் மற்றும் புதிய நவீன தொழில்நுட்பங்களையும் வடிவமைப்புகளையும் பாதணி மற்றும் தோற்பொருட்கள் கைத்தொழிற்துறையில் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

**தோல் சார்ந்த உற்பத்திகளுக்கான கூட்டுத்தொகுதி**

தோல் பதனிடும் கைத்தொழிற்துறையினை மீள்நிறுவதற்கு, மன்னார் மாவட்டத்தில் உள்ள மறிச்சுக்கட்டுவை எனும் இடத்தில் 75 ஏக்கர் நிலப்பரப்பை தேர்வுசெய்துள்ளதுடன், இதில் தோல் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கான கைத்தொழில் பேட்டையை (தோல் சார்ந்த உற்பத்திகளுக்கான கூட்டுத்தொகுதி ) நிறுவவுள்ளது. நில ஆய்வு மற்றும் சூழல் பாதுப்பு தொடர்பான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

**மட்பாண்ட கைத்தொழில்**

**மட்பாண்டக் கைத்தொழிற்துறைக்கான கயோலின் / பந்துக்களி மற்றும் ஏனைய கனியப் படிவங்களை அடையாளம் காணுதல்**

கைத்தொழிற்துறை எதிர்நோக்கியுள்ள மூலப்பொருள் பற்றாக்குறைக்கு தீர்வாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் பந்துக்களிமண் மற்றும் கனிய தாதுக்களை கண்டறிவதற்கான ஆய்வுகளை மேற்கொள்ள புவியியல் மற்றும் சுரங்க காரியாலயத்திற்கு அமைச்சானது ரூபா 8 மில்லியனை வழங்கியுள்ளது.

இதன் கீழ், கம்பஹா மற்றும் புத்தளம் மாவட்டங்களில் 197 இடங்கள் ஆய்வு செய்யப்பட்டதுடன், இக்கருத்திட்டத்தின் கீழ் 27 வர்த்தக ரீதியாக பொருத்தமான கனியப் படிவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்தோடு, உரிய கைத்தொழிற்சாலையாளர்களுக்கு, அடையளாம் காணப்பட்ட படிவுகள் தொடர்பாக, அவர்களுக்கு அவசியமான மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளுமாறு மட்பாண்டத்துறை ஆலோசனைக் குழுக்களின் ஊடாக அமைச்சு அறிவித்துள்ளது.

**மின் மற்றும் மின்னிலத்திரனியல் கைத்தொழிற்துறைக்கு தொழில்நுட்ப பேணிவைத்தலறை**

மின் மற்றும் மின்னிலத்திரனியல் கைத்தொழிற்துறையில் இருக்கும் சிறிய வளர்ந்து வரும் கைத்தொழிலாளர்கள் மற்றும் புதிய

உற்பத்தியாளர்கள் என்போருக்கு தொழில்நுட்ப வசதிகளை வழங்கும் மத்தியநிலையமொன்றினை மொரட்டுவைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து, அப்பல்கலைகழகத்தினுள் நிறுவுவப்பட்டுள்ளது. பயிற்சி நிகழ்ச்சிகள் உள்ளிட்ட தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதற்கு, 10 வளர்ந்து வரும் கைத்தொழிற்சாலையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**ஔதட கைத்தொழில்**

**இலங்கை ஔதட ஆய்வுகூடத்தை நிறுவுதல்**

இந்த கைத்தொழிற்துறை 200 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஔதட தயாரிப்பாளர்களை கொண்டிருப்பதுடன், இதில் அண்ணளவாக 10 பெரிய கம்பனிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஔதட ஆய்வுகூடம் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ளது. 2013 ஆண்டு 618 பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளதுடன், இதன் மொத்தப் புரள்வு ரூபா 4 மில்லியன் ஆகும்.

ஆய்வு கூடத்திற்கு இரண்டாம் கட்டமாக அவசியமான உபகரணங்களைக் கொள்வனவு செய்யப்பட்டது. 8 தொழில்நுட்பவியலாளர்களுக்கும் 14 தொழிற்படுத்துனர்களுக்கும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது.

**பாதணி மற்றும் தோற் பொருட்கள் பயிற்சி அலகு**

தேசியப் பாதணி மற்றும் தோற் பொருட்கள் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக இந்த அமைச்சு, இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனத்துடன் இணைந்து பாதணி மற்றும் தோற் பொருட்கள் பயிற்சி அலகொன்று இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனத்தினுள் நிறுவியுள்ளது. இதன் மூலம் பாதணி மற்றும் தோற் பொருட்கள் கைத்தொழில் மேற்கொள்வோரின் திறன் மற்றும் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்வதற்கும், புதிய தொழில்நுட்பங்கைள அறிமுகப்படுத்துவதற்கும் உதவுவதன் மூலம் தேசியப் பொருட்களின் தரம் உயர்வடைவதுடன், சர்வதேசச் சந்தையில் போட்டியிடும் வல்லமையை அதிகரிக்கும்.

**தோல் கைத்தொழிற்துறை**

ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் பயிற்சி உபகரணங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டது.

குறுகியகாலப் பாடநெறிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 11 மாணவர்களுக்கு தோல் மற்றும் பாதணித் தொழில்நுட்பத்திற்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.

பயிற்சி அலகின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்கின்றன.

**தயட கிருள 2013ற்கு சமாந்தரமாக பாதணி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

2013ஆம் ஆண்டு தயட கிருள நிகழ்ச்சிக்கு சமாந்தரமாக, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உதவியுடன், கிழக்கு மாகாணத்தின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு பாதணி உற்பத்தி மற்றம் வடிவமைப்பு அபிவிருத்தி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்குசெய்தப்பட்டதுடன், இதில் 15 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

# கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவு

**அறிமுகம்**

1990ம் ஆண்டு 46ம் இலக்க கைத்தொழில் முன்னேற்றச் சட்டதிற்கு ஏற்ப உற்பத்தித் தொழிற்சாலைகளை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் பதிவு செய்தலுக்கான பிரதான பொறுப்பு தகவல் முகாமைத்துவ அலகிற்கு வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு இப்பிரிவு, பதிவு செய்த கைத்தொழிற்சாலைகளின் தகவல்களை அடிப்படையக் கொண்டு தரவுத்தளம் ஒன்றினைப் பேணுகின்றது. இத் தகவல் தளத்தில் பதிவு செய்யப்பட்ட கைத்தொழிற்சாலைகளின் அடிப்படைத் தகவல்களான, உற்பத்திப் பொருட்கள், இருப்பிடம், முதலீடு மற்றும் தொடர்பு கொள்ளல் வழிமுறைகள் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இக்கைத்தொழிற்காலைகளின் வருடாந்த உற்பத்தி விபரங்கள் மற்றத் தரவுத் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதேவேளை வாடிக்கையாளர்கள் பதிவுசெய்யப்பட்ட கைத்தொழிற்சாலைகள் பற்றிய தகவல்களைப் ஒன்-லைன் ( on-line) சேவை மூலம் இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சின் இணையத்தளமான www.industry.gov.lkல் வெப்தள தரவுகளாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவினால் பகுப்பாய்வு செய்யப்பட்டதன் பின்னர் கொள்கை தயாரிப்பாளர்கள், ஆராய்சியாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் மாணவர்கள் போன்ற வெளிவாரி நபர்களுக்கும், அமைச்சின் உள்ளக நிர்வாக நடவடிக்கைகளுக்கும் தேவைக்கேற்ப தகவல்கள் வழங்குகின்றது. மேலும் இப்பிரிவு தேசிய மட்டத்தில் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகையினை, ஏனைய துறைகளுடன் ஒப்பிடுவதற்காக இலக்க மற்றும் வரைபு வடிவிலான தகவல்களை பரந்தளவிலான தரவுத் தளமொன்றையும் பேணுகின்றது.

**31 டிசம்பர் 2013 வரையிலான முன்னேற்றம்**

**கைத்தொழிற்சாலை பதிவுசெய்தல் தரவுத்தளம்**

பதிவு செய்வதற்கு வழங்கப்படும் விண்ணப்பத்தில் உள்ள தகவல்களுக்கு அமைவாக கைத்தொழிற்சாலை பதிவுத் தரவுத்தளம் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுகின்றது. இது தொழிற்சாலை அமைந்துள்ள இடம், தொடர்பு கொள்ளல் விபரங்கள், உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் ஊழியர் போன்ற அடிப்படை விபரங்களை உள்ளடக்கியிருக்கும்.

**கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்படும் கைத்தொழில் உற்பத்தி நிறுவனங்கள் - 2013**

| | பிரிவு | மொத்தக் கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | உணவு, குடி பானம் மற்றும் புகையிலை | 08 |
| 2 | துணி, ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள் | 04 |
| 3 | மரம், மரம் சார்ந்த பொருட்கள் | 02 |
| 4 | கடதாசி மற்றும் கடதாசிப் பொருட்கள் | 08 |
| 5 | இரசாயன, பெற்றோலியம், இறப்பர், பிளாஸ்டிக் பொருட்கள் | 12 |
| 6 | உலோகம் அல்லாத பொருட்கள் மற்றும் கனியப் பொருட்கள் | 09 |
| 7 | உலோக அடிப்படைப் பொருட்கள் | 01 |
| 8 | உலோக நிர்மாணப் பொருட்கள் | 19 |
| 9 | ஏனையவை | 02 |
| | **மொத்தம** | 60 |

*மூலம்: கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவு*

| மாவட்டம் | கைத்அதாழிற்சாலைகளின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 1293 |
| கம்பஹா | 360 |
| களுத்துறை | 108 |
| காலி | 37 |
| புத்தளம் | 40 |
| கண்டி | 82 |
| குருநாகல் | 37 |
| மாத்தறை | 40 |
| ஹம்பாந்தோட்டை | 15 |
| நுவரேலியா | 6 |
| இரத்தினபுரி | 12 |
| அனுராதபுரம் | 10 |
| பதுளை | 7 |
| கேகாலை | 16 |
| மாத்தளை | 15 |
| மொனராகரலை | 2 |
| பொலனறுவை | 4 |
| அம்பாறை | 6 |
| திருகோணமலை | 3 |
| மட்டக்களப்பு | 2 |
| வவுனியா | 1 |
| யாழ்ப்பாணம் | 3 |
| மன்னார் | 1 |
| மொத்தம் | 2100 |

*மூலம்: கைத்தொழில் பதிவு மற்றும் தகவல் முகாமைத்துவப் பிரிவு*

## வெப்தள வசதிகள்

**உள்ளக கணணி வலையமைப்பு (LAN)**

அமைச்சினுள் நிறுவப்பட்டுள்ள உள்ளக கணணி வலையமைப்பினை பேணுவதுடன் பாவனையாளர் வளங்களை பகிர்ந்துகொள்ள, இணைய வசதிகளை பெற்றுக்கொள்ள வசதிகளை வழங்குதல். மற்றும் அமைச்சினுள் உள்ள 50 கணணிகளை உள்ளடக்கிய உள்ளக கணணி (Host Computer) வலையமைப்பு (LAN) பேணப்படுவதுடன், ADSL இணைப்பு மூலம் இணையத்தளத்தினை உபயோகிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது. அண்மையில் வை – ∴பை (Wi-Fi) முறைமையினை அமைச்சினுள் நிறுவியதன் மூலம் ஊழியர்களும், வாடிக்கையாளர்களும் வை – ∴பை (Wi-Fi) சார்ந்த தொகுதியகளை உபயோகிக்க முடியும். இது நாளாந்த வேலைகளை கம்பிகள் ஊடான இணைப்பினை போலல்லாது இலகுவாக மேற்கொள்ள உதவும்.

அத்தோடு நிறுவுப்பட்ட புதிய சேவைவழங்கி கணிணியின் திறந்த வலையமைப்பு தொழிற்பாட்டு முறைமையான Linex, கோப்பு சேவர் (File Server), அஞ்சல் சேவர் (main server). இணைந்த வைரஸ் பாதுகாப்பு மென்பொருள் என்பன சிறந்த செயற்பாட்டிற்கு உதவின.

## நூலக சேவைகள்

அமைச்சின் தேவைகளுக்கும் மற்றும் ஏனைய உசாத் துணைகளுக்குமாக கைத்தொழில் தொடர்பான புதிய புத்தகங்கள், சஞ்சிகைகள், வெளியீடுகள் என்பன நூலகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அத்தோடு பயனாளிகள் தங்களுக்கு தேவையான புத்தகங்களையும், மாதச் சஞ்சிகைகளையும் சுலபமாக தேர்ந்தெடுக்கத்தக்க வகையில் நூலகம் மீளொழுங்கு செய்யப்பட்டுள்ளது

## வெப்தள அபிவிருத்தி

அமைச்சின் வெப்தளம் வெப் 2 தரத்துடன் முற்று முழுதாக மீளமைப்பு செய்யப்பட்டது. இதன் மூலம் திறந்த வரிசையூடாக (on line) விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் வசதி, தற்போதுள்ள தகவல்களில் மாற்றங்கள் காணப்படின் அதனை திறந்த வரிசையூடாக (on line) அறிவிப்பதற்கான வசதி, வெப் தளத்தில் உள்ள தரவுகளை தங்கள் தேவைக்கேற்ப பல்வேறு விதமான தரவுக் களங்களை தேர்ந்தெடுத்து தேவையான புள்ளிவிபர அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கான போன்ற வசதிகள் கிடைத்துள்ளன.

# உற்பத்தித்திறன் மேம்படுத்தல் பிரிவு

**அறிமுகம்**

தொடர்ச்சியாக மாறும் உலகச் சந்தையின் போட்டித்தன்மையை எதிர்கொள்ளக்கூடிய வகையில், கைத்தொழில் உற்பத்திகளின் தரம் மற்றும் நியமத்தை இற்றைப்படுத்துவன் ஊடாக கைத்தொழில் உற்பத்தித் துறையின் உற்பத்தித் திறனை உயர்துவதற்கான சூழலை உருவாக்கல் இப்பிரிவின் நோக்கமாகும்.

**31 டிசம்பர் 2013 வரையிலான முன்னேற்றம்**

**வலுச்சக்திப் பாவனையின் செயற்திறனை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம்**

2011ஆம் ஆண்டு வலுச்சக்திப் பாவனையின் செயற்திறனை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் 15 கைத்தொழிற்சாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மற்றும் கைத்தொழில் துறையின் கழிவுப் பரிமாற்றல் ஊடக கைத்தொழில் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டம் 2012 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன், அது 2013ஆம் ஆண்டும் தொடரப்பட்டது.

- வழிகாட்டல் குழு நிறுவப்பட்டுள்ளது.
- 27 கைத்தொழில் நிறுவனங்களின் ஆரம்ப வலுப்பாவனைத் தரவுகள் மற்றும் தகவல்களைப் பெற்று மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட 15 நிறுவனங்களின் 30 முகாமையாளர்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டது.
- இந்த அமைச்சின் வலுச்சக்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்தித்திட்டத்தில் பங்குபெறும் 14 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- வலுச்சக்தி ஆலோசகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 நிறுவனங்களில் ஆரம்ப வலுச்சக்தி ஆய்வினை நிறைவு செய்துள்ளனர்.
- வலுச்சக்தி ஆலோசகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட 7 நிறுவனங்களில் ஆரம்ப வலுச்சக்தி ஆய்வ அறிக்கையினை நிறைவு செய்துள்ளனர்.

**கைத்தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவுகளை முகாமைத்துவத்தினை ஒழுங்கமைத்தல் நிகழ்ச்சித்திட்டம்**

இந்நிகழ்ச்சித்திட்டம் வடமேல், வடமேற்கு, தெற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் செயற்படுத்தப்படுவதுடன், அதன் மூலம் உள்நாட்டு நிறுவனங்களுடன் :மாகாணசபை நிறுவனங்கள், மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை, வர்த்தக சம்மேளனம், உற்பத்தியாளர்களின் அமைப்பு) என்பவற்க்கிடையிலான தொடர்புகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் கைத்தொழில் உற்பத்தி நிறுவனங்களை தொடர்புபடுத்துவதன் மூலம் தரவு மற்றும் தகவல் வலையமைப்பொன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

- தேசிய சுத்திமிகு உற்பத்தி மற்றும் மொரட்டுவை பல்கலைகழகத்தின் தொழில்நுட்ப உதவியுடன் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் தங்கொட்டுவை கைத்தொழில் பேட்டையில் ஆரம்பிக்கப்பட்டது. .
- தங்கொட்டுவை கைத்தொழில் பேட்டையில் ஆரம்பிக்கப்பட்ட கழிவு நீர் மதிப்பீட்டு அறிக்கை தேசிய சுத்திமிகு உற்பத்தி நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**கொங்கிறீட் மற்றும் சீமெந்து சார்ந்த உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம்.**

- இந்த கருத்திட்டம் மேல், வட மேற்கு, தென் மற்றும் மத்திய மாகாணங்களை பூர்த்திசெய்கிள்றது.
- கொங்கிறீட் மற்றும் சீமெந்து சார்ந்த உற்பத்திகளில் ஈடுபட்டுள்ள 40 உற்பத்தியளர்களின் தரவு மற்றும் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளது.
- கொங்கிறீட் மற்றும் சீமெந்து சார்ந்த உற்பத்தித்துறைக்கு இலங்கை தர நியம நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள தர நியமம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இலங்கைத் தர நிறுவனம், அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம், தேசிய பொறியியலாளர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்தியநிலையம், மற்றும் கட்டுமானப் பயிற்சி வழங்கல் மற்றும் அபிவிருத்தி நிறுவனம் போன்றவற்றினை தொடர்புடுத்துவதன் மூலம் கொங்கிறீட் மற்றும் சீமெந்து சார்ந்த உற்பத்தித்துறையினை மேம்படுத்தக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல். (தேசிய பொறியியலாளர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மத்தியநிலையம் தற்போது அது மாதிரியான நிகழ்ச்சித்திட்டமொன்றினை தயாரித்துள்ளது)

# இராசயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபை

**அறிமுகம**

இரசாயன ஆயுதங்களை விருத்தி செய்தல், உற்பத்தி செய்தல், களஞ்சியப்படுத்தல், உபயோகித்தல் என்பவற்றோடு அதனால் ஏற்படும் அழிவுகளையும் தடை செய்வதற்காக உருவாக்கப்பட்ட சர்வதேச உடன்படிக்கையே இரசாயன ஆயுத உடன்படிக்கை ஆகும். இது 1993ல் பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் எல்லா வகையான ஆயுதங்களையும் முற்றாகத் தடை செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஆகும்.

2007ஆம் ஆண்டு 58ம் இலக்க இரசாயன ஆயுத உடன்படிக்கையானது 2008 ஒகஸ்ட் 15ம் திகதி தொடக்கம் அமுலுக்குவருமாறு அமைச்சரினால் அமுல்படுத்தப்பட்டது.

இரசாயன ஆயுத உடன்படிக்கையினை செயற்படுத்தும் தேசிய அதிகாரசபையானது, உடன்படிக்கைக்கு உரிய தேசிய அமுலாக்கத்தின் செயற்பணிகளினை மேற்கொள்வதற்காக நெதர்லாந்தில் அமைந்துள்ள இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்யும் அமைப்புடனும் மற்றும் ஏனைய அங்கத்தவ அரசுகளுடன் தொடர்புகளைப் பேணுவதற்காகவும் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட அமைப்பாகும்.

**31 டிசம்பர் 3013 வரையிலான முன்னேற்றம்**

**கைத்தொழிற்சாலைளை பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கல்**

தேசிய அதிகாரசபையின் கீழ் ஆறு (06) இரசாயனப் பொருட்கள் ஏற்றுமதியாளர்/ இறக்குமதியாளர்களை புதிதாக பதிவுசெய்துள்ளதுடன், இருபத்தியொரு கைத்தொழிற்சாலைகளின் பதிவு புதுப்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையினுள் அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்யும் 61 நபர்களுக்கு இரசாயனப் பொருட்களினை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரம் தேசிய அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளது.

- **வருடாந்த ஆவணங்களை OPCW விற்கு சமர்ப்பித்தல்**

  இரசாயன ஆயுத உடன்படிக்கையின் VI சரத்திற்கு அமைவாக, 2012ம் ஆண்டுக்கான பிரகடனம் மற்றும் இரசாயன ஆயுத உடன்படிக்கையின் X சரத்திற்கு அமைவாக, இரசாயன ஆயுதத்திற்கு எதிரான பாதுகாப்புக்கான தேசிய நிகழச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள் OPCW ற்கு சமர்ப்பிக்கப்பட்டது

- **களுத்துறை கைத்தொழில் பேட்டையில் அனர்த்தம் விளைவிக்கும் இரசாயனப் பொருட்களுக்கான அவசரகால நிகழ்ச்சித்திட்டத்தை அபிவிருத்தி செய்தல்**

  இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தியின் உறுதிப்பாட்டக்காக, தொழில்புரியும் இடத்தின் இடர்காப்பு மற்றும் பாதுகாப்புக்கு உதவுவதற்காக களுத்துறை கைத்தொழில் பேட்டையில் ஆய்வொன்றை தேசிய அதிகாரசபை மேற்கொண்டது. இந்த கைத்தொழில் ஆய்வு 2012 ஜுலை மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதன் போது இக்கைத்தொழில் பேட்டையில் 23 கைத்தொழிற்சாலைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. ஆய்வின் போது, கைத்தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருட்களைக் கையாளும் போது அவர்களின் பாதுகாப்பு மற்றும் உடல்நலம் தொடர்பாக பாதுகாப்பு அளவீடுகளை தேசிய அதிகாரசபை அவதானித்தது.. மேற்குறித்த அவதானிப்புகள் தொடர்பான விதப்புரை அறிக்கை 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கைத்தொழிற்சாலையாளர்களிக்கு விநியோகிக்கப்பட்டது.

**தீ, இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம**

களுத்துறை கைத்தொழில் போட்டையில் மேற்கொள்ளப்பட்ட இரசாயனப் பொருட்களின் அனர்த்தத்தின் போது உடனடியாக செயற்படும் நிகழ்ச்சித் திட்ட அபிவிருத்தியின் இரண்டாம் கட்டத்தின் போது, தேசிய அதிகாரசபையினால் தீயை ஏற்படுத்தும் இரசாயனம், மற்றும் தீக்கான காரணங்கள்,, தீயிலிருந்து முற்பாதுகாப்பு, தீயை எதிர்த்து போராடும் நுட்பங்கள், ஆரம்ப பாதுகாப்பு மற்றும் இடர்பாதுகாப்பு தீயைக் கையாளும் முறைகள் மற்றும் நெருப்புக்கு எதிராக போராடும் செயன்முறை பயிற்சி தொடர்பான அறிவினை மேம்படுத்துவதற்காக, ஊழியர்களுக்கான பாதுகாப்பு மற்றும் காப்பு அடிப்படை நிகழ்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

- **வேலைத்தளத்தில் அபாய முகாமைத்துவம் - 06 செப்டெம்பர் 2013**
- களுத்துறை கைத்தொழில் போட்டையில் வேலைத்தளத்தில் ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான அறிவினை மேம்படுத்துவதற்காக வேலைத்தளத்தில் அபாய முகாமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் தேசிய அதிகாரசபையினால் நடாத்தப்பட்டது, இந்தப் பயிற்சிப்பட்டறையில் அவசரகால மருத்துவ உதவிகள் பற்றி கோட்பாடு ரீதியான அறிவு விரிவுரை மூலம் வழங்கப்பட்டதுடன், செயன்முறைப் பயிற்சியினையும் உள்ளடக்கியிருந்தது.
- **ISO நியமங்கள் தொடர்பான பயற்சிக் கருத்தரங்கு**
- தேசிய அதிகாரசபை, மனிதவள மேம்படுத்தல் நிறுவனத்துடன் இணைந்து மனிதவள மேம்படுத்தல் நிறுவனத்தில் கைத்தொழிற்துறையின் நிலையான அபிவிருத்திக்கு அவசியமான ISO நியமங்கள் பற்றிய அடிப்படை அறிவு, வியாபாரத்திற்கு நியமங்களைப் பயன்படுத்தவதன் நன்மைகள், பிரபல்யமான நியமங்களை பயன்படுத்துவதற்கு அவசியமானவை மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றை உள்ளடக்கி கைத்தொழிற்துறைக்கான ISO நியமங்கள் பற்றிய பயிற்சி கருத்தரங்கினை நடத்தியது. இதில் 12 கம்பனிகள்/ நிறுவனங்களைச் சேர்ந்த 25 பங்குபற்றுனர்கள் பங்குபற்றினர்.
- **இரசாயன ஆயுத உடன்படிக்கை மற்றும் இரசாயன விளைவு அவசரகால நிலமை முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்**

  பொலிஸ் பயிற்சிக் கல்லுரியின் வேண்டுகோளுக்கு அமைவாக இரசாயன ஆயுத உடன்படிக்கை மற்றும் இரசாயன விளைவு அவசரகால நிலமை முகாமைத்துவம் பற்றிய மூன்று நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் கட்டுகுருந்த பொலிஸ் பயிற்சிக் கல்லுரியில் தேசிய அதிகாரசபையினால் நடத்தப்பட்டது. இதில் ஏறத்தாள 250 பொலிஸ் உத்தியோகத்தளர்கள் பங்குபற்றினர்.

- **நிலையான கைத்தொழிற்துறை அபிவிருத்திக்கு தீங்குவிளைவிக்கும் இரசாயனங்களை முகைாமைத்துவம் செய்தல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி**

- தேசிய அதிகாரசபை, மனிதவள மேம்படுத்தல் நிறுவனத்துடன் இணைந்து மனிதவள மேம்படுத்தல் நிறுவனத்தில் தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருட்களைக் கையாளுதல், கைத்தொழிற்துறையின் நிலையான அபிவிருத்திக்கு ஊழியர்களின் சுகாதாரம், முற்பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவம் செய்தல் தொடர்பான அடிப்படை வழங்குவதற்காக கைத்தொழிற்துறையின் நிலையான அபிவிருத்திக்கு தீங்குவிளைவிக்கும் இரசாயனங்களை முகைாமைத்துவம் செய்தல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்சியை வழங்கியது. இதில் 23 கம்பனிகளைச் சேர்ந்த 51 பங்குபற்றுனர்கள் பங்குபற்றினர்.

- **வேலைத்தளத்தில் தீங்கு முகாமைத்துவம் பற்றிய விழிப்புனர்வு நிகழ்ச்சி**

  தேசிய அதிகாரசபை, மனிதவள மேம்படுத்தல் நிறுவனத்துடன் இணைந்து, வேலைத்தளத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்துவதற்காக

வேலைத்தளத்தில் தீங்கு முகாமைத்துவம் பற்றிய ஒரு நாள் விழிப்புனர்வு நிகழ்ச்சியை வெள்ளவத்தையில் அமைந்துள்ள தீ மற்றும் இடர்மீட்பு பயிற்சி கல்வி நிலையத்தில் நடத்தியது.

**உணவுகளில் இரசாயனப் பாதுகாப்பு பற்றிய நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய அதிகாரசபை, மனிதவள மேம்படுத்தல் நிறுவனத்துடன் இணைந்து, உணவு மற்றும் உணவு நடைமுறைகளில் உள்ள இரசாயனப் பதார்த்தங்கள், உணவுப் பதார்த்தங்களின் துப்பரவு மற்றும் சுகாரதாரம், உணவுக் கைத்தொழிற்துறையில் பயன்படுத்தப்படும் உயிரங்கிகளின் எதிர்விளைவு, இலங்கையில் உள்ள உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு விதிமுறைகள் மற்றும் உணவுக் கைத்தொழிற்துறையில் இரசாயனப் பதார்த்தங்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தல் போன்ற அடிப்படை அறிவினை வழங்குவதற்கா உணவுகளில் இரசாயனப் பாதுகாப்பு பற்றிய நிகழ்ச்சித்திட்டம் மனிதவள மேம்படுத்தல் நிறுவனத்தில் நடாத்தப்பட்டது. இதில் உணவுத் தயாரிப்பு மற்றும் அதேனோடு சார்ந்த 35 நிறுவனங்களைச் சேர்ந்த 51 உணவு உற்பத்தியாளர்கள் பங்குபற்றினர்.

- **CHOGM -2013 நிகழ்வின் போது அவசரகால இரசாய விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு**

  பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் அரச மகாநாட்டுக்கான செயலாளர் குழுவின் வேண்டுகோளுக்கு அமைவாக, CHOGM மகாநாடு நடைபெறும் இடங்களில் தேசியப் பேரவை மிக அவதானமான தேடுதல்களை மேற்கொண்டுள்ளது. இதன் போது தேசியப் பேரவையின் விசேட வல்லுனர்கள் ஹம்பாந்தோட்டை, காலி, நீர்கொழும்பு, ஜா-எல, பத்தரமுல்லை மற்றும் கொழும்புப் பகுதிகளில் தேடுதல்களைப் பூர்த்திசெய்தனர்.

- **வெளிநாட்டுப் பயிற்சிகள்**

  இலங்கை சுங்கம், அரச பகுப்பாய்வுத் திணைக்களம் மற்றும் நீர் விநியோகம் மற்றும் வடிகால் சபை என்பற்றின் ஊழியர்களுக்கு, அவர்களின் துறைசார்ந்த திறன் மற்றும் பணிபுரியம் திறமை என்பவற்றினை அபிவிருத்தி செய்வதற்காக வெளிநாட்டுப் பயிற்சி கற்றைநெறிகள் வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சி நிகழ்ச்சி மலேசியா, சுவிஸ்ஸர்லாந்து மற்றும் பின்லாந்து அரசுகளுடன் இணைந்து OPCW வினால் ஒழுங்குசெய்யப்பட்டது.

  **ஹொட்டல் துறைகளின் உணவுகளில் இரசாயனப் பாதுகாப்பு பற்றிய நிகழ்ச்சித்திட்டம்**

தேசிய அதிகாரசபை, மனிதவள மேம்படுத்தல் நிறுவனத்துடன் இணைந்து, ஹோட்டல்துறைக்கான உணவுகளில் இரசாயனப் பாதுகாப்பு பற்றிய நிகழ்ச்சித்திட்டம் 31 ஒக்டோபர் 2013ம் திகதி நடாத்தப்பட்டதுடன், இதில் ஹொட்டல் துறையைச் சேர்ந்த 25 நபர்கள் பங்குபற்றினர்.

- **இலங்கையில் இரசாயனப் பொருட்களை ஏற்றுமதி /இறக்குமதி செய்பவர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்.**

  அனேக அட்டவணைப்படுத்தப்பட்ட இரசாயனப்பொருள் இறக்குமதியாளர்கள் தேசிய அதிகாரசபையில் பதிவினை மேற்கொள்ளாததனால், இரசாயன ஆயுத உடன்படிக்கை தேவைகள் பற்றி விழிப்பூட்டுவதற்கும் அவர்களைப் பதிவுசெய்வதற்காகவும் அவர்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் அமைச்சின் தேசிய அதிகாரசபை கேட்போர்கூடத்தில் நடாத்தப்பட்டது.

- **தீங்கு விளைவிக்கும் பொருட்களை போக்குவதரத்து செய்வது தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம்**

  மனிதவள மேம்படுத்தல் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் ஹொல்சிம் நிறுவுனத்தின் தீங்கு விளைவிக்கும் பொருட்களை போக்குவதரத்து செய்வது தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டம் 21 டிசம்பர் 2013ம் திகதி நடாத்தப்பட்டது.

# வரையறுக்கப் பட்ட மாந்தை உப்புக் கம்பனி

**அறிமுகம்**

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் மேற்பார்வையின் கீழ் செயற்படும் கூட்டுத்தாபனம் மற்றும் சட்டபூர்வசபைகள் பிரிவு, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் செயற்படும் அனைத்து கூட்டுத்தாபனங்களையும் சட்டபூர்வசபைகளையும் மேலும் வலுவூட்டி நிரந்தர நிறுவனமாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது. இந்நோக்கத்தினை பூரத்திசெய்வதற்காக இப்பிரிவினால் அரச நிறுவனங்கள் அனைத்தினதும் வளங்களின் செயற்திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் வருமானத்தினை உச்சமாக்குதல், தந்திரோபாய வியாபாரத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் வியாபாரச் செயற்பாட்டினை விரிவுபடுத்தும் முறையினை அறிமுகப்படுத்துதல் என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இப்பிரிவினால் இச்சட்டபூர்வ சபைகளின் நித்திய செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

கீழ்வருவன கூட்டுத்தாபனம் மற்றும் சட்டபூர்வ சபைகள் பிரிவின் கீழ் செயற்படும் அரச நிறுவனங்கள் ஆகும்.

1. வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி
2. வரையறுக்கப்பட்ட கஹட்டகஹ காரீயக் கம்பனி
3. இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்
4. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை
5. இலங்கை லேலன்ட் கம்பனி
6. இலங்கை அசோக் லேலன்ட் கம்பனி

மாந்தை உப்புக் கம்பனி திறைசேரியினை தனிப் பங்குரிமையாளராகக் கொண்ட ஒரு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஆகும். இக்கம்பனி உப்பு உற்பத்தி மற்றும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது. தற்போது, மன்னார் உப்பளம், செம்மணி உப்பளம் என்பன இக்கம்பனியின் கீழ் உள்ளதுடன், மன்னார் உப்பளத்தில் இருந்து சாதாரண உப்பு, தூள் உப்பு மற்றும் அயடின் சேர்க்கப்பட்ட உப்பு என்பன தயாரிக்கப்படுகின்றது. பொருளாதார நிலமை காரணமாக செம்மணி உப்பளத்தின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. மன்னார் உப்பள அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் 110 ஏக்கர்களுக்கு மேலதிகமாக 53 ஏக்கர் அபிவிருத்தி செய்யப்பட்டது. இதன் மொத்த ஆகு செலவு ரூபா 25 மில்லியன் ஆவதுடன், 2012இல் சராசரி உப்பு உற்பத்தி 4000 மெற்றிக்தொன்னாக இருந்ததுடன், இந்த அபிவிருத்தியின் ஊடாக இத்தொகை 5000 – 6000 மெற்றிக்தொன்னாக அதிகரிக்கப்பட்டது. இந்தக் கம்பனி ‘ராஜா உப்பு’ எனும் பெயர் அடையாளத்தின் கீழ் 1கி.கி லமினேட் செய்யப்பட்ட உப்பை உற்பத்தி செய்து விநியோகிக்கின்றது. இந்தக் கம்பனி 35 மில்லியன் பெறுமதியான புதிய உப்பு உற்பத்தி பொறியொன்றை (அயடின் சேர்க்கப்பட்ட கட்டி உப்பு) நிறுவுவதற்கு திட்டமிட்டுள்ளது. அத்தோடு, உப்பு உற்பத்திக்கான பொறியொன்றைக் (அயடின் சேர்த்தல், மேசை உப்பு உற்பத்தி, துகள்கலாக்கல் என்பவற்றுக்கான) கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், இதன் பெறுமதி ரூபா 20 மில்லியன் ஆகும். 2013ஆம் ஆண்டு 4,527 மெற்றிக் தொன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டதுடன், 3,771 மெற்றிக் தொன் உப்பு விற்பனை மூலம் ரூபா 42.7 மில்லியன் உழைக்கப்பட்டது.

**வரையறுக்கப்பட்ட கஹட்டகஹ காரீயக் கம்பனி**

வரையறுக்கப்பட்ட கஹட்டகஹ காரீயக் கம்பனி ஒரு முற்று முழுதான அரசாங்கத்திற்கு சொந்தமான கம்பனியாகும்.. இது இலங்கையில் 2000 அடி ஆழத்தில் இருந்து காரியத்தினை அகழ்ந்தெடுக்கும் மிகப் பெரிய நிறுவனமாகும். அத்தோடு காரியத்தினை அகழந்தெடுக்கும் இயலளவினையும் பலத்தினையும் கொண்ட ஒரே ஒரு அரச நிறுவனமாக இது திகழ்கின்றது. 2013ஆம் ஆண்டு, 959.47 மெற்றிக் தொன் காரியம் உற்பத்தி செய்யப்பட்டதுடன், இதில் 794.5 மெற்றிக் தொன் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மூலம் மொத்த

வருமானம் ரூபா 194 மில்லியன் ஆகும். புதிய காரியப் படிவுகள் கண்டுபிடிப்பதற்கும் மற்றும் பொறுமதி சேர்க்கப்பட்ட அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம்**

இலங்கை புடவை மற்றும் ஆடைகள் நிறுவனம் புடவைக் கைத்தொழிலோடு சார்ந்த நபர்களை பயிற்றுவித்தல் மற்றும் ஆடை உற்பத்தித்துறைக்கு அவசியமான பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைச் சேவைகளை மேற்கொள்ளுகின்றது. இந்த வருடம் 2,253 பயிலுனர்களுக்கு 120 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது. இதன் மூலம் நிறுவனம் ரூபா 146.39 மில்லியனை உழைத்ததுடன், நிகர இலாபத் ரூபா 20.04 மில்லியன் ஆகும்.

**தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை**

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் பங்களிப்பு மிக முக்கியமானது என அடையாம் காணப்பட்டதுடன், நாட்டில் அமைந்துள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித்துறையினை மேம்படுத்தல் உதவுதல், ஊக்குவித்தல், மற்றும் வசதிகயை வழங்குதல் என்பவற்றிற்காக தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை 2006ஆம் ஆண்டு 17ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. இதன் கீழ் பிரதேச செயலகப் பிரிவு மற்றும் மாவட்ட மட்டத்தில் தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்கு மாவட்ட தொழில்முயற்சி மன்றங்களை அமைத்தல், 'கமட ஒப்பன வியாபார', மற்றும் கொத்தணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அதிகாரசபை மேற்கொள்ளுகின்றது.

**வரையறுக்கப்பட்ட லங்கா லேலண்ட் கம்பனி**

வரையறுக்கப்பட்ட லங்கா லேலண்ட் கம்பனி 2008ஆம் ஆண்டில் இருந்து கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் கீழ் அமைந்த அரசுக்கு 100 வீதம் சொந்தமான வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஆகும். அரசாங்கத்தினால் முதலீடு செய்யப்பட்ட 42 வீதத்தினை முகாமைத்துவம் செய்வதன்றி, எவ்வித தொழிற்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை.

**வரையறுக்கப்பட்ட லங்கா அசோக் லேலண்ட் கம்பனி**

வரையறுக்கப்பட்ட லங்கா அசோக் லேலன்ட் கம்பனியானது ஒரு பொதுக் கம்பனியாக இலங்கையில் நிறுவப்பட்டது. அது 1982ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரசாங்கத்துடன் கூட்டு முயற்சியாக இலங்கை அரசாங்கத்தின் (இலங்கை அரசாங்கத்தின் 100% பங்குகளைக் கொண்டு லங்கா லேலன்ட் நிறுவனதம் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது.) 42% உரிமையையும், இந்தியா வின் அசோக் லேலன்ட் நிறுவனம் 28% உரிமையையும், பொது மக்களின் 30% உரிமையையும் கொண்டு செயற்படுகின்றது.. இந்தக் கம்பனி.அசோக் லேலன்டின் வர்த்தக வாகனங்களை பொருத்துவதுடன், அசோக் லேலன்டின் முழுமையான பஸ், ட்ரக், ட்ரக் செஸி, உதிரிப் பாகங்கள், ஜெனரேட்டர் மற்றும் துணைப் பொருட்களை இறக்குமதி செய்து விறபனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. புதிய அசோக் லேலன்ட் பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து வாகனங்களுக்கான பொடி பப்ரிகேசன் (body fabrication) உட்பட வர்த்தக வாகனங்களின் திருத்தங்கள் மற்றம் மீளப்புதுப்பித்தல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுகின்றது.

**சிறிய மற்றும் நுண்நிலைக் கைத்தொழிற்சாலைத் தலைவர் மற்றும் தொழில்முயற்சியாளர் ஊக்குவிப்புக் கருத்திட்டம் 111 –**
**சுழற்சி நிதியம் ( SMILE III)**

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு, நிதித் திட்டமிடல் அமைச்சின் ஆலோசனையுடன், கீழ்வரும் நோக்கங்களை நிறைவு செய்வதற்காக, கருத்திட்ட முகாமைத்துவ அலகின் ஊடாக SMILE III கருத்திட்டத்தை 2012 மே 01ம் திகதியில் இருந்து செயற்படுமாறு நடைமுறைப்படுத்தியது.

புதிய தொழில் முயற்களை தொடங்குவதற்கு, அவற்களின் உற்பத்தித்திறனை அல்லது உற்பத்தியினை அதிகரிப்பதற்கு ,உற்பத்திப் பொருட்களின் தரத்தினை அதிகரிப்பதற்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன்களை வழங்குவதற்கு SMILE III சுழற்ச்சிநிதியம் ,உருவாக்கப்பட்டுள்ளது. அத்தோடு இக்கடன்திட்டம், நிறுவனத்தின் இயலளவினையும் ,உற்பத்தித்திறன் அபிவிருத்தினையும் சிறிய மற்றும்

நுண்நிலைத் தொழில்முயற்சியாளர்கள் மேற்கொள்வதற்கும் உதவும்..

இந்தக் கருத்திட்டம், பங்குபற்றும் கடன் நிறுவனங்களின் (இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, கொமர்ஷல் வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி, செலான் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, சம்பத் வங்கி மற்றும் DFCC வங்கி) ஊடாக 09 உப கடன்களை வழங்கியதுடன், துணை கடன் ஒப்பந்தங்களையும் 09 பங்குபற்றும் கடன் நிறுவனங்களுடன் கைச்சாத்திட்டுள்ளதுடன், செலவழிப்பு 2013 ஜூலை மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுன்னது.

***Progress as at 31st December 2013 as follows,***

2013ம் ஆண்டு 992 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், இதன் பெறுமதி ரூபா 3,200 மில்லயன் ஆகும். இதில் 524 விண்ணப்பங்கள் தகுதியுடையதாக தேர்ந்தெடுக்கப்பட்டு உபகருத்திட்டங்களுக்கு நிதியளிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் பங்குபற்றும் நிதி வழங்கும் நிறுவனங்களினால் ரூபா 343.828 மில்லியன் மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது.

| பங்குபற்றும் கடன் நிறுவனங்களின் பெயர் | விண்ணப்பங்கிள் எண்ணிக்கை | | | மீள்நிதியளிப்பு | | செலவீடு | |
|---|---|---|---|---|---|---|---|
| | கிடைக்கப்பெற்றது | தகுதி வாய்ந்த கருத்திட்டமாக ஒப்புதல் அளிக்கப்பட்ட உப கருத்திட்டங்கள் | தகுதியற்றவை | மீள்நிதியளிப்பு செய்யப்பட்ட உப கருத்திட்டங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா. மில்லியன்) | உப கருத்திட்டங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா. மில்லியன்) |
| ஹட்டன் நஷனல் வங்கி | 246 | 131 | 115 | 35 | 98.68 | 25 | **66.5** |
| தேசிய அபிவிருத்தி வங்கி | 51 | 34 | 17 | 14 | 46.72 | 05 | **14.4** |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 54 | 33 | 21 | 06 | 7.81704 | 04 | **5.76** |
| டிஎப்சிசிDFCC | 286 | 131 | 155 | 21 | 58.6 | 13 | **36.1** |
| சம்பத் வங்கி | 167 | 64 | 103 | 17 | 46.58 | 04 | **13.84** |
| செலான் வங்கி | 66 | 57 | 9 | 18 | 54.76 | 13 | **37.95** |
| இலங்கை வங்க | 77 | 44 | 33 | 02 | 5.6 | - | **-** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மக்கள் வங்கி** | 23 | 15 | 8 | 07 | 10.831 | 01 | **2.4** |
| **கொமர்ஷல் வங்கி** | 22 | 15 | 7 | 04 | 14.24 | 02 | **8.0** |
| **மொத்தம்** | **992** | **524** | **468** | **124** | **343.828** | **67** | **184.95** |

**சுழற்சி நிதியம் ( SMILE III) - 31 டிசம்பர் 2013 வரையிலான முன்னேற்றங்கள்**

*மூலம் - கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சபைகள் பிரிவு*

# கஹடகஹ கிறபைட் லங்கா பிறைவேட் லிமிடெட

**அறிமுகம்**

கஹடகஹவின் அகழ்வுகள் இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் குருணாகல் மாவட்டத்தில் மதுரகொட, தொடங்கஸ்லந்தலவில் கொழும்பு பிரதான நகரத்திலிருந்து சுமார் 90 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருப்பதுடன், கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டினால் முகாமை செய்யப்படுகின்றது. இது முழுவதுமாக அரசாங்கத்தின் உடமையான பொது வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனி என்பதுடன் கைத்தொழில், வாணிப அமைச்சின் அதிகாரத்திற்குட்பட்டதுடன், பங்குதாரராக திறைசேரியின் செயலாளர் இருக்கின்றார். கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட்டின் பிரதான கொள்கை ஆக்க அமைப்பாக நிறைவேற்றுத் தவிசாளரினால் தலைமை வகிக்கப்படுகின்ற பணிப்பாளர்கள் சபை என்பதுடன், கஹடகஹ கிறபைட் லங்கா லிமிடெட் அதனது நேர் வரிசை அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரியிடமிருந்து அதனது கூட்டிணைந்த கொள்கைகளைப் பெற்றுக்கொள்கின்றது.

**31 டிசம்பர் 2013 வரையிலான உற்பத்தி உற்பத்தி**

2013ஆம் ஆண்டு டிசம்பர் வரை மொத்த காரீய உற்பத்தி (அகழும் காரீயம்) 957.47 மெற்றிக்.தொன் ஆகும். 2007 ஆம் ஆண்டிலிருந்து அகழ்வு புத்துயிர் பெற்றதன் பின்னர் இன்று வரை மொத்த உற்பத்தி 5310.02 மெற்றிக் தொன் ஆகும் கடந்த 10 ஆண்களை ஒப்பிடும் பொழுது 0.138 மெற்றிக்தொன் இலிருந்து 1.37 மெற்றிக்தொன்களாக அதிகரித்துள்ளது.

**உற்பத்தித் திறன்**

கடந்த 10 ஆண்களை ஒப்பிடும் பொழுது மனிதத்தலைக்கு 50.18 கிலோ கிராமில் இலிருந்து 55 கிலோ கிராமாக அதிகரித்துள்ளது.

**விற்பனை**

வழமையான பாரம்பரிய கொள்வன வாளர்களான அமெரிக்காவின் அஸ்பெரி கிரபெட் மில்ஸ் இன். மற்றும் யப்பான் எஸ்.கரோ ரூ கம்பனியுடன் 2007/2008 காலப்பகுதியில் காரீய ஏற்றுமதிச் சந்தை செயற்படுத்தப் பட்டிருந்தது.

அகழ்வு புத்துயிர் பெற்றதன் பின்னர் 2007 ஆம் ஆண்டிலிருந்து 2013 டிசம்பது வரை ரூபா 619 மில்லியனை உழைத்ததுடன், வழமையான வருமானம் ரூபா 142.2 மில்லியன் ஆகும்.

சுரங்கத்திற்கான செலவுகள் திறைசேரியிடமிருந்து பெறப்படுவதில்லை. அத்துடன் 2013 டிசம்பர் மாத இறுதியில் வங்கி மற்றும் காசு மீதி ரூபா 20.4 மில்லியன் ஆகும்.
ரூபா 5.0மில்லியன் பணிக்கொடை நிதியாக முதலிடப்பட்டுள்ளது.

**கையிருப்பு**

2013 டிசம்பர் மாத இறுதியில் தற்போதைய கையிருப்பு 877. 881 மெற்றிக்தொன் ஆவதுடன், இதன் பெறுமதி ரூபா 194 மில்லியன் ஆகும்.

**தொழில் படை**

தேர்ச்சியுள்ள அகழ்வு வேலையாளர்கள், ஏனைய உரிய தொழில்நுணுக்க அனுவலர்கள் உள்ளடங்கலாக 119 பேர் அகழ்வு வேலையில் ஈடுபடுகின்றனர். ஒரு பொறியியலாளர் ஒருவரும், சிரேஷ்ட தொழில்நுட்ப அலுவலரும், லங்கா பொஸ்பேட் லிமிடெட் மற்றும் புவியியற் சரிதவியல் ஆய்வு, அகழ்வு பணியகம் போன்றவை வெளி வள ஆளர்களாகப் பெறப்பட்டிருந்தனர். தகைமையுள்ள பட்டய பொறியாக்கப் பொறியியலாளர் பகுதி நேர அடிப்படையில் ஆண்டு காலப்பகுதியில் நியமிக்கப்பட்டிருந்தார்.

# வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி

**அறிமுகம்**

மாந்தை உப்புக் கம்பனி, இலங்கை வரலாற்றில் நீண்ட காலமாக உப்பு உற்பத்தில் ஈடுபட்டு வருகின்றது. இது சாதாரண கறியுப்புபை உற்பத்தி செய்வதுடன், அயடீன் கலந்த உப்பு அரைத்த உப்பு, கைத்தொழில் பாவனைக்குரிய உப்பு போன்ற வடிவங்களில் விநியோகித்து வருகின்றது.

| வருடம் | | நிர்வாக நிறுவனம் |
|---|---|---|
| **இருந்து** | **இருந்து** | |
| **1938** | 1965 | உப்புத் திணைக்களம் |
| **1966** | 1990 | இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் |
| **1991** | 1996 | இலங்கை உப்புக் கம்பனி |
| **1997** | 2001/செப்டெம்பர் | மன்னார் உப்பளம் (மன்னார் அரசாங்க அதிபர் மேற்பார்வையில்) |
| 2001/ ஒக்டோபர் | இன்று வரை | வரையறுக்கப்பட்ட மாந்தை உப்புக் கம்பனி |

**மன்னார் உப்பளம**

மன்னார் உப்பளத்தின் பரப்பளவு 240 ஏக்கர் ஆகும். இதில் 2010ம் ஆண்டு வரை 110 ஏக்கரில் உப்பு உற்பத்தி நடைபெற்றது. 2011ம் ஆண்டு 53 ஏக்கர் பரப்பளவுகொண்ட பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டு இன்று 163 ஏக்கர் பகுதியில் உப்பு உற்பத்தி செய்யச் கூடியதாகவுள்ளது. அபிவிருத்திக்கு முன் சராசரியாக 4000 மெற்றிக்தொன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. இது உற்பத்தியில் இலங்கையின் மொத்த உற்பத்தியில் 2.6% ஆகும். இந்த 2.6% சந்தைப் பங்கு வீதமானது 2012/2013 இல் 5%மாக உயர்வடைவதனால், 2012இன் இறுதியில் உப்பளத்தின் அபிவிருதியின் பின்னர் உற்பத்தி 4007 மெற்றிக்தொன்னாக அதிகரித்து.

**செம்மணி உப்பளம்**

செம்மணி உப்பளத்தின் பரப்பளவு 200 ஏக்கராகும். இதில் 80 ஏக்கர் பகுதியில் உப்பு உற்பத்தி மேற்க்கொள்ளப்பட்டது. மேற்படி உப்பு உற்பத்தியில் செம்மணி உப்பள ஊழியர்கள் தங்களது அதிகூடிய வினைத்திறைனை பயன்படுத்தி ஒவ்வொரு வருடமும் உப்பு உற்பத்தியினை மேற்க்கொண்டார்கள். ஆனால் அவர்களினால் எதிர் பார்க்கப்பட்ட உப்பு உற்பத்தியை பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதற்கு காரணம் அங்கு காணப்பட்ட தரமற்ற கழிமண்ணின் தன்மையாகும். மற்றும் அந்தப் பகுதியில் உள்ள ஏரியில் இருந்து வரும் நன்னீர் கசிவுத்தம்மை காரணமாகவும் உப்பு உற்பத்தி நிலம் பாதிக்கப்பட்டு உப்பு உற்பத்தி செய்ய முடியாமல் போனது..

இதனால் ஒவ்வொரு வருடமும் நிதி சுழற்சியில் பாரிய நட்டம் ஏற்பட்டது இதற்கு காரணம் குறைவான உப்பு உற்பத்தி ஆகும். இதனால் 2012ம் ஆண்டு தொடக்கம் அங்கு உப்பு உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இருந்தும் அங்கு பொருத்தமான மாற்றுத்திட்டங்கள் ஆராயப்பட்டு வருகின்றது.

**மாந்தை உப்பின் அபிவிருத்தி செயற்பாடுகள்**

திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட ரூபா 25 மில்லியனைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் 100% முடிடைந்துள்ளது.

**அயடீன் கலந்த உப்பு 1 கி.கி பக்கற்**

“ரஜ“ உப்பு என்னும் பெயரில் 1 கி.கி. எடை கொண்ட பொலித்தின் பையில் இடப்பட்ட உப்பு மாதாந்தம் வினியோகிக்கப்படுகின்றது. இந்த உப்பு

மாதாந்தம் 50,000 பக்கற் எனும் இலக்கினைப் பூர்த்திசெய்வதுடன், அதற்கான கேள்வி அதிகரித்து வருகின்றது.

**தரம்**

இலங்கை தரக்கட்டுபாட்டு சான்றிதழ் பெறுவதற்கான வேலைகள் முற்றுப் பெற்றுள்ளது. தற்போது தரக்கட்டுபாட்டு சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்காக காத்திருக்கப்படுகின்றது.

**நிதி**

இந்த நிறுவனம் இலாபநோக்கத்துடன் முன்னேறிக் கொண்டிருக்கின்றது. இதன் உற்பத்தி விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தில் இயங்கிக் கொண்டு திறைசேரிக்கும் சிறிய பங்கு இலாபத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

**உற்பத்தி**

| வருடம் | உற்பத்தி (மெ.தொ) | | |
|---|---|---|---|
| | மன்னார் | செம்மணி | மொத்தம் |
| **2011/2012** | 4,147 | 135 | 4,282 |
| **2012/2013** | 4,527 | - | 4,527 |

**விற்பனை**

| ஆண்டு | விற்பனை | வருமானம் (மில்லியன்) | இலாபம் (மில்லியன்) |
|---|---|---|---|
| **2011/2012** | 4,016 | 43.5 | 3.8 |
| **2012/2013** | 3,801 | 38.9 | 0.8 |
| **2013/2014** | 3,771 | 42.7 | 3.8 |

# தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

### 2013ஆம் ஆண்டின் அபிவிருத்தி முன்னேற்றங்கள்

#### சிறிய மற்றும் மத்திய தர தொழில்முயற்சியாளர்களுக்கான கொள்கைத் திட்டமிடல்கள்

சிறிய மற்றும் மத்திய தர தொழில்முயற்சியாளர்களுக்கான கொள்கைகளை உருவாக்கல் மற்றும் கொள்கைகளை மீளாய்வு செய்வதற்கு உதவுதல் இதன் பிரதான பணிகளில் ஒன்றாகும். தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை கீழ்வரும் கொள்கை நடவடிக்கைகளை 2013ஆம் ஆண்டினுள் மேற்கொண்டது.

#### சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான கொள்கைத் தயாரிப்பு

ஜேர்மன் மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கு இடையிலான 2016 வரையான சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இது செயற்படுத்தப்படுகின்றது. இது பிரதானமாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான கொள்கைகளைத் தயாரிப்பதில் தன் கவனத்தைச் செலுத்தும். தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சகைகளை கண்டறியும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது. GIZ SME அபிவிருத்தி கருத்திட்டத்தின் ஒத்துழைப்புடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான கொள்கை வரைபுகளைத் தயாரிப்பதற்கு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான கொள்கை தொடர்பான நான்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

#### தேசிய மனித வளங்கள் மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கை (NHREP)

தேசிய மனித வளங்கள் மற்றும் தொழில்வாய்ப்புக் கொள்கை சிரேஸ்ட அமைச்சரவைக் காரியாலயத்தினால் வெளியிடப்பட்டதுடன், இதற்கான செயற்பாட்டுப் பங்களிப்பை தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை வழங்கியது. இக்கொள்கையின் முதல் பகுதி 2013ஆம் ஆண்டு நிறுவப்பட்டதுடன், இதன் பிரதான நலன்விரும்பிகளை குவித்து செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டது. தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர் துறைக்கு அவசியமான மனித வள அபிவிருத்தி தேவை மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர் துறையில் இருந்து வினைத்திறன் மிக்க ஊழியவாய்ப்புகளை உருவாக்கல் தொடர்பாக தன் கவனத்தை செலுத்தியது. பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறிய தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு அமுல்படுத்தும் அமைச்சாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையும் அமுல்படுத்தல் பங்களிப்பாளராக தொழிற்படுகின்றது.

#### மாவட்ட தொழில்முயற்சி மன்றம்

மாவட்ட தொழில்முயற்சி மன்றங்கள் தொழில்முயற்சியாளர்களுக்கு வியாபார அபிவிருத்தி சேவைகளை வழங்குவதற்காக நிறுவப்பட்டுள்ளது. மாவட்ட தொழில்முயற்சி மன்றங்கள் அம்மாவட்டத்தின் அரசாங்க மற்றும் அரசாங்க சார்பற்ற வியாபார சேவை வழங்குனர்கள், சம்மேளனம் மற்றும் வர்த்தக அல்லது வியாபார சங்கங்களின் உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது.

2010இல் இருந்து 2013 வரை குருநாகல், அனுராதபுரம், மாத்தறை, களுத்துறை, ஹம்பாந்தோட்டை, புத்தளம், கேகலை, கண்டி, மாத்தளை, பதுளை, மட்டக்களப்பு மற்றும் மன்னார் மாவட்டங்களில் உள்ள மாவட்டத் தொழில்முயற்சி மன்றங்களின் செயற்பாடுகளில் பங்குபற்றுகின்றது. அத்துடன் பிரதேச தொழில்முயற்சி மன்றங்களை பிரதேச செயலாளர் மட்டத்தில் நிறுவியுள்ளது.

#### தேசிய வியாபார அபிவிருத்தி சேவைகள் வழங்குனர் விபரகொத்து வெளியீடு மற்றும் வியாபார அபிவிருத்தி சேவைகள் வழங்குனர்களைப் பலப்படுத்தல்

வியாபார அபிவிருத்தி சேவைகள் வழங்குனர்கள் தொழில்முயற்சியாளர்களுக்கு சேவைகளை வழங்குபதில் பிரதான வகிபாகத்தை வகிக்கின்றது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி அபிவிருத்திக்கு பல்வேறுபட்ட வியாபார அபிவிருத்தி சேவைகள் வழங்குனர்கள் சேவைகளை வழங்குவதுடன், சந்தைப்படுத்தல், தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் பரிமாற்றம், நிதியியல், தொழில்முயற்சி அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்பம் என்பவற்றுக்கு பிரதானமாக உதவுகின்றனர்.

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை தசிய வியாபார அபிவிருத்தி சேவைகள் வழங்குனர் விபரகொத்தினை அச்சிடும் நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்துள்ளதுடன், தேசிய வெளியிடல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பிராந்திய வெளியிடல் நிகழ்ச்சித்திட்டம் தெற்கிலும் மற்றும் மத்தியமாகாணத்திலும் வெளியிடப்பட்டது. மிகுதி நடிவக்கைகள் 2014இல் தொடர்கின்றது.

**துறை ரீதியான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

**அலங்கார மலர் பயிர்ச்செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - வடமேற்கு மாகாணம்.**

| மாவட்டம் | Beneficiaries Trained |
|---|---|
| காலி | 75 |
| மாத்தறை | 296 |
| குருநாகல் | 262 |
| மாத்தளை | 98 |
| நுவரெலியா | 106 |
| முல்லைத்தீவு | 72 |
| மட்டக்களப்பு | 214 |
| மொத்தம் | **1124** |

'கிராமத்திற்கு பொருத்தமான வியாபாரம்' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், இதற்கான கற்கைநெறிகள் குருநாகல் மாவட்டத்தில மேற்கொள்ளப்பட்டதுடன், வடமேற்கு மாகாண சபையில் போட்டித் தன்மையுள்ள துறையாக, அலங்கார மலர் பயிர்ச் செய்கைப் பிரிவு அடையாளம் காணப்பட்டுள்ளது. ஒரு துறை பங்களிப்பு வழங்க வேண்டிய துறையாக அடையாளம் காணப்பட்டவுடன், தேசிய தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி அதிகாரசபை, நலன்விரும்பிகளின் பிரதிநிதித்துவத்துடனான கலந்துரையாடல் வேலைப்பட்டறையொன்றை மேற்கொள்ளும். இந்த வேலைப் பட்டறையில், தேசிய தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி அதிகாரசபை, இந்தத்துறையின் அபிவிருத்திக்கு அவசியமான உபாயமார்க்கங்களைத் தயாரிக்கும். அத்தோடு, இத்துறைக்கான வழிகாட்டல் குழு நிறுவப்பட்டதுடன்,மலர்ப்பயிர்ச் செய்கை சங்கத்தின் பிரதான செயற்பாட்டாளர்கள், ஏற்றுமதியாளர்கள், அரச நிறுவனத்தினர் மற்றும் வங்கியாளர்கள் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர்

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் தேசிய தொழில்முயற்சி அதிகாரசபை மலர்ச்செய்கை தொடர்பான பிரச்சனைகளை இனம் கண்டுள்ளது.

013ஆம் ஆண்டில், தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை (68 பயன்பெறுநர்களுக்கு) வளர்ந்துவரும் தொழில்முயற்சியாளர்களின் அறிவு மற்றும் திறன்களை அபிவிருத்தி செய்வதற்காக நடாத்தியது. அத்தோடு, அவர்களின் சந்தைப்படுத்தல் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்காக, ஒரு நாள் சந்தைப்படுத்தல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை தேசிய தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி அதிகாரசபை நடாத்தியது.

தேசிய தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி அதிகாரசபை, திருகோணமலை மாவட்டத்தில் உள்ள வன்னிகம பயிற்சி நிலையத்தில் பிரதேசத்தின் 30 பாற்பண்ணை விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை நடாத்தியது.

**திவிநெகும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி சபையை திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் அமுல்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டது. இந்த குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தி நிகழச்சித்திட்டத்தின் கீழ தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி சபை பயிற்சிசி நிகழ்ச்சித்திட்டங்கள், வங்கி ஆலோசனைகள், பொறிவழங்கல் மற்றும் ஏனைய செயற்பாடுகளை தேர்ந்தெடுக்கப்பட்ட பயன்பெறுநர்களுக்கு வழங்கியது. அத்துடன் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறிய தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து ஊதுபத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

2013ஆம் ஆண்டில் தேசிய தொழில்முயற்சி அதிகாரசபை கீழ்வரும் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை பூர்த்திசெய்துது.

**கீழ்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.**

**புதிய வியாபார உருவாக்கம் மற்றும் விரிவுபடுத்தல்**

நிதிநிறுவனங்கள், நம்பிக்கையான வாடிக்கையாளர்களுடன் பணியாற்றவும், உத்தரவாதத்தின் அடிப்படையில் கடன்களை வழங்குவதற்கும் விரும்புகின்றன. வியாபாரம் நன்றாக நடந்தால் கடன்கள் மீளச் செலுத்தப்படும் என தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை நம்புகின்றது. வியாபாரத்தின் நிலைத்திருப்புக்கு தொழில்முயற்சியாளரின் திறன் மற்றும் நிதிசார் அறிவு முக்கியபங்கினை வகிக்கின்றது. அதனால், தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை, பிராந்திய மட்டத்தில், தற்போதுள்ள தொழில்முயற்சியாளர்கள் மற்றும் அடித்தளமுள்ள தொழில்முயற்சியாளர்களுக்கு புதிய தொழில்களை தொடங்குவதற்கு அல்லது

இருக்கும் வியாபாரத்தினை விரிவுபடுத்துவதற்கு, நிதிநிறுவனங்களுடன் கைகோர்க்கின்றது. இந்நிகழச்சித்திட்டங்கள் வங்கிகளை விழிப்பூட்டல், பயன்பெறுனர்களை தேர்ந்தெடுத்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட பயன்பெறுனர்களுக்கு விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், பயன்பெறுநர்களுக்கான இயலளவு அபிவிருத்தி, நிதி உதவி மற்றும் பின்னூட்டல் எனும் பத்து நிகழ்ச்சித்திட்டங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் அமுல்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

**2013 இல் தொழில்முயற்சி அபிவிருத்தியின் முன்னேற்றம்**

| மாவட்டம் | பிரதேச செயலாகப் பிரிவு | பயன்பெறுனர்களின் எண்ணிக்கை | தொழில்நுட்ப பயிற்சி |
|---|---|---|---|
| **பதுளை** | மீகஹகிவுல | 28 | - |
| **மாத்தறை** | ஹக்மன | 38 | - |
| **கொழும்பு** | மொரட்டுவை | 50 | 45 |
| **களுத்துறை** | மத்துகம | 41 | 41 |
| | பானந்துறை | 74 | 21 |
| | ஹோரணை | 57 | 57 |
| | அகலவத்த | 30 | 30 |
| **குருநாகல்** | குளியாபிட்டிய மேற்கு | 41 | 36 |
| **கேகாலை** | வரக்காபொல | 27 | 30 |
| | ரம்புக்கன | 30 | 36 |
| | ருவன்வெல | 30 | - |
| **மாத்தளை** | மாத்தளை | 20 | 20 |
| **கம்பஹா** | அத்தனகல்ல | 31 | 31 |
| **மொத்தப் பயன்பெறுனர்கள்** | | | 347 |

| பிரதேசம் | பங்குபெறுனர்கள் | புதிய வியாபாரம் | தற்போதுள்ள வியாபாரம் | கடன் விநியோகிக்கப்பட்டது | தோகை (ருகா) | கோரப்பட்ட கடன் | புயன்பெறுனரினால் கோரப்பட்ட கடன் |
|---|---|---|---|---|---|---|---|
| நீர்கொழும்பு | 35 | - | 35 | - | - | 27 | 2.7 Mn |
| பானந்துறை | 27 | - | 27 | 27 | 1.35 Mn | - | - |
| **Horana** | 30 | - | 30 | 10 | 2.425 Mn | 1 | 7 Mn |
| கெப்பத்திகொல்லாவ | 40 | - | 40 | 2 | 0.15 Mn | - | - |
| தொடுவாவெல | 30 | - | 30 | 01 | 0.25 Mn | 02 | 0.45 Mn |
| கம்பஹா | 30 | 01 | 29 | 04 | 1.35 Mn | 02 | 0.5 Mn |
| பிலியன்தல | 29 | - | 10 | 30 | 16.2114 Mn | - | - |
| அம்பலாங்கொடை | 33 | - | 33 | - | - | 02 | 1.775 Mn |
| கண்டி பிலிமத்தலாவ | 30 | 03 | 26 | 26 | 3.465 Mn | 03 | 0.275 Mn |
| பொல்காஹவெல | 30 | 08 | 22 | 22 | 2.975 Mn | 07 | 0.85 Mn |
| வென்னப்புவ (சிலாபம்) | 28 | 01 | 27 | 27 | 8.6401 Mn | 01 | 0.1 Mn |
| போலொன்னறுவை (கெக்கிராவ) | 30 | 07 | 23 | 19 | 3.675 Mn | 10 | 1 Mn |
| கந்தளாய் | 33 | 08 | 25 | 25 | 2.1 Mn | 08 | 8 Mn |
| யாழ்ப்பாணம் | 28 | - | 28 | 27 | 3.219218 Mn | 02 | 25 Mn |
| கண்டி | 40 | - | 40 | 31 | 229.78 Mn | 06 | 12.7 Mn |
| மவுன்லவெனியா | 42 | 02 | 40 | - | - | - | - |
| மொத்தம் | 542 | 30 | 512 | 251 | 275.6 Mn | 71 | 53.1Mn |

**பெண் தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (WEDP)**

'மகிந்த சிந்தனை' யின் எதிர்கால நோக்கில், பெண்களுக்கான தொழில்முயற்சி பற்றி விசேடமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. அவர்களின் சுய தேவைக்கான தொழில்முயற்சியாளர்களுக்கான சந்தர்ப்பங்கள் திறந்துள்ளன. இந்த நன்மைகள் அவர்களுக்கு மட்டுமன்றி அவர்களின் குடும்பத்திற்கும் பேருதவியாகும். ஆதனால் தேசிய தொழில்முயற்சி அதிகார சபை அவர்களின் தொழில்முயற்சி அறிவு மற்றும் திறனை மேம்படுத்தல், நிதி உதவிகளுக்கு நிதி நிறுவனங்களுடன் தொடர்புறல், தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன் விருத்தியை மேம்படுத்தல், சந்தைப்படுத்தலுக்கான வசதிகளை வழங்குதல். ஏன்பவற்றை உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டத்தை வடிவமைத்துள்ளது. 2013 ஆண்டு நான்கு மாவட்டங்களில் (குருநாகல், ஹம்பாந்தோட்டை, மொனராகலை மற்றும் கண்டி) இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துகின்றது. தேசிய தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி அதிகாரசபையின வழிகாட்டலின் கீழ் பெண்கள் சம்மேளனத்தின் உதவியுடன் பயன்பெறுனர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர், வியாபாரக் குழு அமைக்கப்பட்டு அவர்களுக்கான தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும், தொழில்நுட்ப பயிற்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது.மொனராகலை மாவட்டத்தில் பயன்பெறுனர் தேர்ந்தெடுப்பு, வியாபாரக் குழு அமைத்தல் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் என்பன பயன்பெறுநர்களுக்கு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில், குருநாகல் பெண்கள் சம்மேளத்தினால் பெண்கள் தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சிதிட்டங்கள் நடாத்தப்படுவதுடன், 30 பெண் தொழில்முயற்சியாளர்கள் (அழகுக்கலை) தேர்ந்தெடுக்கப்பட்டு, வியாபாரக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

# புடவைக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

**அறிமுகம்**

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின், புடவைக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு, கைத்தெறி, வலுத்தறிகளை வலுவூட்டி வசதியளிப்பதுடன், ஆடைக் கைதொழிற்துறைக்கு அவசியமான கொள்கைகள், உபாயமார்க்கங்களை உருவாக்குவதுடன், மனித வள அபிவிருத்தி, வினைத்திறன் மற்றும் தர மேன்மைப்படுத்தல் என்பவற்றுக்கு அவசியமான நிதி உதவிகளையும் வழங்குகின்றது. இந்த அமைச்சு தனியார் துறைகள், உயர் மட்ட நிறுவனங்கள் மற்றும் மாகாணசபைகளுடன் இணைந்து மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கினை எட்டுவதற்கு பணிபுரிகின்றது.

**கைத்தறி கைத்தொழிற்துறை**

கைத்தறித்துறைக்கு நிதி, தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் வடிவங்களில் உதவிகள் வழங்கப்படுதல் வேண்டும். அதனால், கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு, கைத்தறித்துறையின் நிலையான அபிவிருத்திக்கு அவசியமான வியபார மாதிரியினை வரைவதற்காவும் அதிலுள்ள பிரச்சனைகளை அடையாளம் காண்பதற்காகவும் இலக்குக் குழுவை நியமித்துள்ளது. இலக்குக் குழு சந்தைப்படுத்தல், பயிற்சி, வடிவமைப்பு தொழில்நுட்பம் மற்றும் தொழில்முயற்சியாண்மை போன்ற முக்கிய பரப்புகளை ஆராய்கின்றது. இவ்வமைச்சு, கைத்தொழிற்துறையின் பிரதான நலன்விரும்பிகளான கீழ் வரும் துறைகளுக்கு சில கருத்திட்டங்கைளயும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அமுல்படுத்தியுள்ளது.

- தனியார் – கம்பனிகள், தனியார் தொழில்முயற்சியாளர்கள், சுயதொழில் செய்பவர்கள்
- அரசாங்கம் - மாகாண சபைகளினால் நிர்வகிக்கப்படும் உற்பத்தி மத்தியநிலையங்கள்
- கூட்டுறவுச் சங்கங்கள்

இலக்குக் குழுவினால், கைத்தறி அபிவிருத்திக்கு அவசியமென சிபாரிசு செய்யப்பட்ட கீழவரும நிகழ்ச்சித்திட்டங்கள் 2013 ஆண்டு அமுல்படுத்தப்பட்டது..

கைத்தெறி கைத்தொழிற்துறையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அமைச்சு 2013ம் ஆண்டு, ரூபா 90 மில்லியனை ஒதுக்கியுள்ளதுடன், ரூபா 30 மில்லியனை கைத்தெறிக் கிராம அபிவிருத்தி நிகழச்சித்திட்டத்திற்காக 'திவநெகும' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கியுள்ளது.

இந்நிகழச்சித்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மத்தியநிலையத்திற்கும் 35 நெசவுத்தறிகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதில் பயிற்சித் தேவைக்காக 15 நெசவுத்தறிகள் பயிற்சி மத்திய நிலையங்களில் நிறுவப்பட்டுள்ளது. இதில் 20 நெசவுத் தறிகள், அதன் உதிரிப்பாகங்கள் மற்றும் நூல்களுடன் பயிற்சியினை வெற்றிகரமான நிறைவுசெய்த பின்னர் நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கைத்தறி சார் குடிசைக் கைத்தொழிலின் கீழ் 300 புதிய தொழில்வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. (20 கைத்தறி நெசவாளர்கள் X 15 மாவட்டங்கள் =300)

**முன்னோடிக் கருத்திட்டம்**

மாகாண சபையின் ஆலோசனையுடன் கீழ்வரும் பிரதேசங்கள் முன்னோடிக் கருத்திட்டத்தை அமுல்படுத்தவதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச் செயலாளர் பிரிவு | கிராமம் |
|---|---|---|---|
| மேல் | கொழும்பு | பாதுக்க | அருகாவத்தை |
| கிழக்கு | அம்பாறை | கல்முனை | நற்பெட்டிமுறை |
| ஊவா | மொனராகலை | புத்தல | ஒக்கம்பிட்டிய |
| வடக்கு | மன்னார் | மன்னார் | எரிக்களம்பிட்டிய |
| தெற்கு | ஹம்பாந்தோட்டை | அம்பலாந்தோட்டை | பொலயார்வத்த |

**திவிநெகும கருத்திட்டம்**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் மாகாண சபையுடன் இணைந்து 'திவிநெகும' அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இந்நிகழச்சித்திட்டம் கீழ்வரும் பிரதேசங்களில் அமுல்கடுத்தப்படவுள்ளது.

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச் செயலாளர் பிரிவு | கிராமம் |
|---|---|---|---|
| வட மத்திய | அனுராதபுரம் | பலுகஸ்வவ | நாமல்புர |
| சப்ரகமுவ | கேகாலை | ரூவன்வெல | துனுமல |
| வட மேல் | புத்தளம் | நாத்தாண்டிய | நாராவில |
| வட மேல் | குருநாகல் | வீரமுகெதர | களுகமுவ |
| தென் | காலி | அம்பலாங்கொட | கலபொட |
| மேல் | களுத்துறை | புளத்சிங்கள | மஹகம |
| ஊவா | பதுளை | சோரணாதொட | கந்தேகெதர |
| கிழக்கு | மட்டக்களப்பு | ஏறாவூர் | ஐயங்கேணி |
| மத்திய | கண்டி | மினிபே | அம்பகஹபலஸ்ஸ |
| வடக்கு | முல்லைத் தீவு | கரையோரப்பற்று | முள்ளியவளை |

இந்த நிகழ்ச்சித்திட்டத்னின் கீழ் செயற்படாத நெசவுத்திறகள் திருத்தப்பட்டு மீள்ளியக்கப்பட்டன. ஒன்பது மாகாணங்களில் இருந்த செயற்படாத தறிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் அடையளங்காளப்பட்டதுடன், அவசியமான ஒதுக்கீடுகள் மாகாண சபைக்கு வழங்கப்பட்டது.

இந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், கைத்தறி உற்பத்திப் பொருட்களை உற்பத்திப் பொருள் பன்முகப்படுத்தல், நூல் சாயமிடுதல் மற்றும் வர்ணங்களை இணைத்தல் போன்ற பயிற்சிகள் கோட்பாடு 175 பயிலுனர்களுக்கு 08 பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக பயிற்சி அளிக்கப்பட்டது.

கைத்தறி வடிவமைப்பு மற்றும் பொருள் அபிவிருத்தி தொடர்பான பயிற்சிகள் நெசவாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்இந்தியாவின் கேரள மானிலத்தில் அமைந்துள்ள கன்னூார் - இந்திய கைத்தறி கைத்தொழில் நிறுனத்தில் வழங்குப்பட்டது இதில் 11 நபர்கள் பயிற்சி பெற்றனர்.

**வலுத்தறி கைத்தொழிற்துறை (அரசாங்க நிறுவனங்களுக்கு சீருடைகளை விநியோகித்தல்)**

அமைச்சு, உள்நாட்டு புடவைப் பங்கீட்டுக் குழுவின் ஊடாக உள்நாட்டு புடவைக் கைத்தொழிற்துறையினை மீளப்புதுப்பிக்கும் எண்ணத்துடன், முப்படையினர், பொலிஸ் திணைக்களம், விசேட அதிரடிப் படையினர், சிவில் பாதுகாப்புத் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம் மற்றும் தேசிய படையினர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு புடவைகளை விநியோகிப்பதற்கு திட்டமிட்டுள்ளது. 11 மில்லியன் பாடசாலை சீறுடைகளுக்கான தேவையின் 100% உள்நாட்டு புடவை உற்பத்தியாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**முப்படையினர், பொலிஸ் திணைக்களம், விசேட அதிரடிப் படையினர், சிவில் பாதுகாப்புத் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம் மற்றும் தேசிய படையினர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு அவசியமான சீருடைத் துணிகள் - 2013**

| வகை | விநியோகிக்கப்பட்ட அளவு (மீற்றர் / அலகு) |
|---|---|
| முப்படையினர், பொலிஸ் திணைக்களம், விசேட அதிரடிப் படையினர், சிவில் பாதுகாப்புத் திணைக்களம், சிறைச்சாலைத் திணைக்களம் மற்றும் தேசிய படையினர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு அவசியமான சீருடைத் துணிகள் | 5,230,700 மீற்றர்<br>மீற்றர் / சோடி<br>1,981,504 |
| பாடசாலை சீறுடைத் தேவைகள் | 11,011,000 மீற்றர் |

**உற்பத்தித்திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்**

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா 5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் இலக்குகளைத் தீர்மானிப்பதற்கு வதிவிட பயிற்சிகளை வழங்குவதற்கும் மற்றும் அடி மட்டத்திற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கும் 12 தொழிற்சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

**திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்**

அமைச்சு, இலங்கை நெசவு மற்றும் ஆடை நிறுவனத்தினூடன் இணைந்து, போட்டித்தன்மையுள்ள கைத்தொழிற்துறைச் சூழலை எதிர்கொள்வதற்காக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் திறனை அபிவிருத்தி செய்வதற்காக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி ஆடைக் கைத்தொழற்துறையைச் சேர்ந்த ஊழியர்களின் முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப திறன்களை அபிவிருத்தி செய்வதற்ககு பொருத்தமான பயிற்சிகள் வழங்கப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கு ரூபா 15 மில்லியன் ஒதுக்கப்பட்டது. 20 சிறிய மற்றும் நடுத்தர கைத்தறி துறையைச் சேர்ந்த 845 ஊழியர்களுக்கு 20 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது.

**உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரதிவிம்பத்தினை மேலுயர்த்துதல் நிகழ்ச்சித்திட்டம் (JAAF)**

இந்தப் பிரிவு, ஒன்றிணைக்கப்பட்ட ஆடை சங்க பேரவையுடன் இணைந்து ஆடைக் கைத்தொழிற்துறை பற்றிய நேர்தறை பிரதிவிம்பம், உலகத் தரம்வாய்ந்த உற்பத்தியாளர்களை உருவாக்கல், இலங்கையை ஆடை விநியோகத்தின் உச்ச நிலைக்கு கொண்டுவருதல் என்பவற்றிற்காக கொள்வனவாளர்கள் மற்றும் உலக நுகாவர்கள் என்பவர்களுடன் இணையத்தளம், சந்தை நிகழ்வுகளின், மற்றும் மாநாடுகள் மற்றும் நேரடி சந்தைப்படுத்தல் என்பவற்றின் உடாகசர்வதேச சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் பிரதிவிம்பத்தினை கட்டியெழுப்பல் நிகழச்சித்திட்டத்தினை நாடாத்தியது. அத்தோடு, தயட கிருள நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றல், ஊழியற்களுக்கான நலன்புரி நடவடிக்கைகள் என்பவற்றின் ஊடாக பொது மக்களிடையே சிறந்த பிரதிவிம்பத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டஉள்ளதுடன், இதற்காக 2013ம் ஆண்டு ரூபா 15 மில்லியன் ஒதுக்கப்பட்டஉள்ளது.

**ஆடைகள் ஏற்றுமதிச் சேவைகள் பிரிவு**

ஆடைகள் ஏற்றுமதிச் சேவைகள் பிரிவு, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் புடவைக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவின் உப பிரிக தொழிற்படுவதுடன், இதன் பிரதான பணி இந்நாட்டிலிருந்து ஆடை மற்றும் துணிவகைகளை ஏற்றுமதி செய்யும் ஆடை உற்பத்தியாளர்களுக்கும், உற்பத்திசெய்யாத ஏற்றுமதியாளர்களுக்கும் அவசியமான கீழ்வரும் சேவைகளை வழங்குவதாகும்.

இப்பிரிவு, ஏற்றுமதியளர்களின் நேரம் மற்றும் வள வீளாக்கலை தவிர்ப்பதற்காக. ஏற்றுமதி ஆவணப்படுத்தல் நடைமுறையினை இலகுவாக்குவதற்காக, இலங்கை சுங்கத்துடன் இணைந்து ASYCUDA முறைமையின் கீழ் ஆடை ஏற்றுமதி ஆவணங்கள் முறைமையினை ஒன்லைன் ஊடாக அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**31 டிசம்பர் 2013 வரையிலான முன்னேற்றங்கள்**

| | |
|---|---|
| பதிவுசெய்யப்பட்ட கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | 20 |
| பதிவுசெய்த கொள்வனவு செய்யும் காரியாலயம், தொடர்புபடுத்தும் காரியாலயம் என்பவற்றின் எண்ணிக்கை | 01 |
| வெளிநாட்டவருக்கான தங்குமிட விசாவிற்கான சிபாரிசுகளின் எண்ணிக்கை | 42 |
| பதிவுசெய்யத உற்பத்தியில் ஈடுபடாத ஆடை ஏற்றுமதி நிறுவனங்களின் எண்ணிக்கை | 06 |
| ஐரோப்பிய ஏற்றுமதி வலயத்திற்கான ஏற்றுமதிக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை | 29,000 |

**31 டிசம்பர் 2013 வரை ஏற்றுமதிப் பிரிவினால் அனுமதி வழங்கப்பட்ட ஏற்றுமதிகள்**

| ஏற்றுமதியாளர்களின் வகைப்படுத்தல் | ஆடைகள் (டசின்) | பெறுமதி (அ.டொ மில்லியன்) |
|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளர்கள் | 1,564,129.4 | 51,221,339 |
| பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளர்கள் | 105,059.8 | 3,067,783.99 |
| **மொத்தம்** | **1,669,189.2** | **54,289,123.52** |

# நெசவுக் கைத்தொழில் திணைக்களம்

**அறிமுகம்**

இலங்கை யாப்பின் 13ம் திருத்தச் சட்டமூலத்தின்படி கைத்தறி நெசவுக் கைத்தொழிற்துறை விடயமானது மாகாண சபைக்குரியதாகும். அதன்படி நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்குரிய பணியாக அமைவது, இவ்விடயதிற்குரிய கொள்கைத் தீர்மானங்களை எடுப்பதும், மாகாண சபைக்குரிய நெசவுப்பிரிவுடன் இணைந்து கைத்தொழிற்துறையின் அபிவிருத்திக்குரிய சேவைகளை வழங்குதலாகும்.

**2013-12-31 வரையிலான முன்னேற்றம்**

**கைத்தறி நெசவுப் பாடசாலைகள்**

- குட்டம்பே மற்றும் நல்லூர் நெசவுப் பாடசாலைகளின் திருத்தப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், அதன் வசதிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.
- நெசவுப் பாடசாலையைச் சேர்ந்த 150 மாணவர்களுக்கு சீறுடைகள் வழங்கப்பட்டுள்ளது.
- நெசவுப் பாடசாலையைச் சேர்ந்த 151 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றினர்.

**தேசிய கண்காட்சி மற்றும் வர்த்தச் சந்தை**

- 80 தொழில்முயற்சியாளர்களுக்கு சந்தை வாய்ப்பினை வழங்குவதற்கு, 2013 டிசம்பர் 17 – 19ம் திகதிவரையில் கண்காட்சி ஒழுங்குசெய்யப்பட்டு நடாத்தப்பட்டது.

**நெசவுக் கைத்துறையில் உள்ள தொழில்நுட்பவியலாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

138 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர்

**வடிவமைப்பாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

24 மாணவர்கள் பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டனர்

**பணியின் போது பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்**

27 பயிற்சி நெறிகள் மூலம் 512 மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

# இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம்

**அறிமுகம்**

2009 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம், 2009 ஜுன் 15ம் திகதியில் இருந்து செயற்பட ஆரம்பித்தது. இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் இலங்கையில் புடவை, ஆடை, பாதணி மற்றும் அதனோடு சேர்ந்த கைத்தொழிற்துறையினரை பயிற்றுவிக்கும் முக்கிய நிறுவனங்களில் ஒன்றாகும். அத்தோடு, பயிற்சிகளுக்கு மேலதிகமாக, ஆலோசனைச் சேவைகளையும் மற்றும் பௌதீக மற்றும் இரசாயனவியல் பரிசோதனைகள் மற்றும் ஆடைப் பரிசோதனைகளையும் மேற்கொள்ளுகின்றது. இந்நிறுவனம் புடவைத்துறை மற்றும் புடவைத் தொழில்நுட்ப முகாமைத்துவம் போன்ற துறைகளுக்கு நீண்ட கால, குறுகிய கால மற்றும் தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்றது. இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் பரிசோதனைக்கூடம் ISO 17025 சான்றிதழ் பரிசோதனைக்காக ஒத்தியல்புடையதாக்கப்பட்டுள்ளது. ஆடைக் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் (CITI) மற்றும் புடவைத்தொழில் பயிற்சி மற்றும் சேவைகள் மத்தியநிலையம் (TT & SC)இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனமாக ஒன்றிணைக்கப்பட்ட இத்தந்திரோபாயத்தினால் இருக்கும் மனித வளம், இயந்திரங்கள், நிலம் என்பனவற்றை உபயோகித்து வினைத்திறனுள்ள மற்றும் செயற்திறனுள்ள சேவையினை வழங்க முடிந்தது. அத்தோடு, ஆறு திணைக்களங்களை மீள் ஒழுங்குபடுத்தி நிறுவனத்தின் அமைப்பினை மீளமைப்பு செய்வதினால் வியாபார சவால்களில் இருந்து இலங்கை புடவை மற்றும் ஆடைகள் துறையினை காக்க முடியும். இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் மீளமைக்கப்பட்ட முகாமைத்துவத்தில் ஒவ்வவொரு அலகிற்கும் ஒவ்வொரு நபருக்கும் பொறுப்புகளும் அதிகாரங்களும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதனால், அதன் வியாபார தொடர்ச்சிக்கு வருமானத்தை உழைத்துக்கொள்ள முடியும்.

**பயிற்சியளித்தல்**

புடவை மற்றும் ஆடைத்துறை இவ்வருடம் சாதக வளர்ச்சியினைக் காட்டியதனால், 2013ம் ஆண்டின் பயிற்சி நடவடிக்கைகளும் வளர்ச்சினைக் காட்டுகின்றது. அத்தோடு, கட்டமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக, இந்நிறுவனம் புதிய விற்பனை முகாமைத்துவம் மற்றும் ஆடைத் தொழில்நுட்ப டிப்ளோமாக் கற்கைநெறியினையும் நவநாகரீக வடிவமைப்பு மற்றும் பண்ட அபிவிருத்தி சான்றிதழ் கற்கைநெறியினையும் ஆரம்பித்துள்ளது. கட்டமைக்கப்பட்ட பிரதான நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ள முழு நேர டிப்ளோமா பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது, புடவை மற்றும் ஆடைத் துறையில் உள்ள மத்திய முகாமைத்துவ ஊழியர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யுமாறும் அபிவிருத்தி செய்யப்பட்டள்ளது. இக்காலப்பகுதியில், நீண்ட கால டிப்ளோமா கற்கைநெறிகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தவிலை, இலங்கை திறந்த பல்கலைக்கழகம் இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் டிப்ளோமாதாரிகளை அங்கீகரித்து, அவர்களுக்கு புடவை மற்றும் ஆடை தொழில்நுட்பம் தொடர்பான பட்டக்கல்விகளை மேற்கொள்வதற்கான விலக்களிப்புகளை வழங்கியது. அதேவேளை, நிறுவனம் டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் வைபவத்தை ஏப்பிரல் மாதம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தியது, இதில் 194 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

டிப்ளோமா கற்கைநெறிகளுக்கு உள்வாங்கியவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் விளைவாக, நிறுவனம் பிரசித்திபெற்ற புடவை மற்றும் ஆடை நிறுவனங்களில், கற்கைநெறியினை பூர்த்திசெய்ததன் பின்னர் தொழில்களைப் பெற்றுக்கொள்வதற்காக, தொழில் திறப்பு நாளை டிப்ளோமாதாரிகளுக்கு ஒழுங்கு செய்தது. இக்காலப்பகுதியல், 84 நீண்ட கால கற்ககைநெறிகளும், குறுகிய கால மற்றும் விசேடமாக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளும் 1904 பாடசாலை விட்டு நீங்கிள பங்குபற்றுனர்களுக்காகவும் கைத்தொழிற்துறைக்காவும் நடாத்தப்பட்டது. நீண்ட

கால டிப்ளோமா கற்கைநெறி மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், இதில் ஒரு குழுவிற்கு 60 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன், இவர்கள் தங்கள் கற்கையினை நிறுவனத்தில் தொடர்வார்கள். நீண்ட கால பயிற்சிநெறிகளை ஆரம்பித்ததனால், கல்விசார் ஊழியர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஊழியர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கப்பட்டது. பயிற்சியில் இருந்து மொத்த வருமானமாக ரூபா 46.34 மில்லியன் பெறப்பட்டதுடன், இது கடந்த வருடம் இதே காலப்பகுதியோடு ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்கள வளர்ச்சியைக் காட்டுகின்றது.

**பரிசோதனை**

இலங்கை சான்றழிப்பு சபையின் அனுகூலத்தின்படி இவ்வாண்டும் ISO 17025 சான்றிதழ் பரிசோதனைகூடத்திற்கான சான்றளிப்பு தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் வருமானத்தைப் பெற்றுத்தரும் பரிசோதனை நடவடிக்கைகள் இவ்வருடம் வருமானத்தைப் பெற்றுத்தருவதில் கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது. இது மாதிரிகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக, அரச துறை நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட வருமானங்கள் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி பரிசோதனை நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ளது என்பதைப் காட்டுகின்றது. எனினும் பரிசோதனைக் கூடத்தினால் ரூபா 75.43 மில்லியனை, அரச மற்றும் தனியார் துறையினருக்கு மேற்கொண்ட 60,965 பௌதீக மற்றும் இரசாயனவியல் பரிசோதனைகளில் இருந்து பெற்றுக்கொள்ள முடிந்தது. தோல் மற்றும் பாதணிக் கைத்துறையினருக்கான தோல் மற்றும் பாதணிப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஆரம்பநடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் விளைவாக, இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் ஆய்வுகூடம், பாதணி கைத்தொழிற்துறைக்கு அவசியமான தர மேம்படுத்தலுக்கான தொழில்நுட்ப சேவையினை வழங்கியது.

**ஆலோசனைச் சேவை**

தேசிய புடவை உற்பத்திக் கைத்தொழிலின் தரத்தினை உயர்த்துவதற்காக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சினால் நிதியளிக்கப்பட்ட, புடவை மற்றும் கைத்தறி கருத்திட்டத்திற்கு, அவற்றினை மீள் கட்டமைப்பு செய்வதற்காக புடவைக் கைத்தொழிற்துறை திணைக்களத்தின் உதவியுடன் அவசியமான தொழில்நுட்ப சேவை வழங்கப்பட்டது. இதன் ஆரம்பத்தின் கீழ் வட மேற்கு மற்றும் கிழக்கு மாகணங்களில் உள்ள புடவை மற்றும் கைத்தறி கைத்தொழிற்துறைக்கு பயிற்சி மற்றும் ஆலோசனை சேவைகள் வழங்கப்பட்டது. அத்தோடு, ஆடைக் கைத்துறைக்கான துணித் தொழில்நுட்பம் மற்றும் கைத்தொழிற்றை பொறியியல் பணிகள் தொடர்பான ஆலோசனைச் சேவைகள் தனியார் மற்றும் அரச சேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்டது.

**உற்பத்தித்திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு, இலங்கை ஆடை ஏற்றுமதிச் சம்மேளனம், உள்நாட்டு ஆடை தயாரிப்பாளர் சங்கம் மற்றம் இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் என்பன சிறிய மற்றும் நடுத்தர புடவை மற்றும் ஆடைக் கைத்தொழிற்சாலைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு உதவும் உற்பத்தி திறன் மேற்படுத்தல் நிகழ்சித்திட்டத்தின் நலன் விரும்பிகளாவர். இவ்வருடம் 07 சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிற்சாலைகள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டதுடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் போட்டியிடுவதற்கு அவர்களின் தரம் மற்றும் வினைத்திறனை மேம்படுத்தவதற்காக இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தினால் ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், தயாரிப்பு மேற்கொள்ளப்படும் தரைகள் வினைத்திறனுடல் இல்லை எனும் பிரச்சனையை ஆலோசனையாளர்கள் வெளிப்படுத்தினார்கள். பயன்பெறும் தொழிற்சாலைகள் நிகழ்ச்சித்திட்டத்தினை நிறைவு செய்வதற்கு 04 இலக்கு மைல்கற்களைக் கடக்கவேண்டியுள்ளதுடன், பயிற்சிக் காலத்தில் பயிற்சியினூடாக எவ்வாறு என அறிந்துகொள்ளும் தொழில்நுட்ப பரிமாற்றம் ஆலோசனையாளர்களினால் மேற்கொள்ளப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம் அனைத்து நலன்பிரும்பஜகளையும் உள்ளடக்கிய வழிகாட்டிக் குழுவினால் மீள்நோக்கு செய்யப்பட்டது. இரண்டாவது குழுவில் 05 சிறிய மற்றும் நடுத்தர அளவான கைத்தொழிற்சாலைகள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், 2013 ஒகஸ்ட் மாதத்தில் இருந்து ஆலோசனைகள்

வழங்கப்படுகின்றது. இதற்காக ரூபா 15 மில்லியனை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு ஒதுக்கியுள்ளது.

**ஆடைத்துறைக்கான திறன் அபிவிருத்தி பயிற்சித்திட்டம்**

உற்பத்தித் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் சார்ந்த விடயப் பரப்புகளில் மனித வளத்தின் திறனை மேம்படுத்துவதே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்காகும். கடந்த வருடம் 14 உள்ளக மற்றும் நிறுவன பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் 831 பயிற்சியாளர்களை இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் பயிற்றுவித்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், தொழிற்சாலைகளின் பயிற்சித் தேவை கண்டறியப்படுவதற்காக, தொழிற்சாலைகளின் விருப்பத்துடன் tailor-made பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. இதன் போது உற்பத்தித்திறகை அதிகரிப்பதற்கு அவசியமான திறன் பிரச்சனைகள் அடையாளம் காணப்பட்டது. இதற்காக ரூபா 5 மில்லியனை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு ஒதுக்கியுள்ளதுடன், இதில் ரூபா 5 மில்லியன் 2013 முதல் அரையாண்டுக்கு இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டது.

**தோல் மற்றும் பாதணிப் பயிற்சி**

எதிர்வரும் காலங்களில் பாதணி மற்றும் தோற்பொருட்துறைக்கான ஏற்றுமதி வாய்ப்புகளுக்கான அடித்தளம் உள்ளதாக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு கண்டறிந்துள்ளது. தற்போது இத்துறையில் 30,000 நேரடி ஊழியர்களும் 5000 மறைமுக ஊழியர்களும் பணியாற்றுகின்றனர். இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் தோல் மற்றும் பாதணி தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தினை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதுடன், இதன் இரண்டாவது நிகழ்ச்சி 2013ம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வருடம் அவசியமான பொறிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு, இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தின் தோல் மற்றும் பாதணி பயிற்சி அலகு நிறுவப்பட்டது. முதலாவது குழுவில் 11 மாணவர்கள் தோல் மற்றும் பாதணி தொழில்நுட்ப சான்றிதழ் கற்கைநெறியினை பயின்றனர். அவர்களுக்கான சான்றிதழ் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில், ஏப்பிரல் 2013இல் வழங்கப்பட்டது.

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு**

2013ம் ஆண்டு ஜுன் மாதம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு நிறுவப்பட்டதுடன், ஆலோசனையாளின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பித்தல், ஊக்குவித்தல், மற்றும் பங்குபற்றல் மூலம் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு புடவை மற்றும் ஆடை கைத்தொழிற்துறையில் உள்ள தொழிற்சாலைகளுக்கு அறிவினை வழங்குதல் ஆரம்பத்தில், இவ்வலகு இலங்கை முழுவதிலுமுள்ள புடவை, கைத்தறி மற்றும் ஆடை கைத்தொழிற்துறைகளிடமிருந்து தரவுகளைப் பெற்று, தரவுத் தளமொன்றை இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனத்தினுள் நிறுவி, அலுவலகத் தேவைக்கான புள்ளி விபரங்களைப் பெற்றுக்கொள்ளும்

**திவிநெகும' தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

களுத்துறை மற்றும் மன்னார் மாவட்டங்களில் குடிசைக் கைத்தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியதன் மூலம் இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் திவிநெகும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றியது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்டச் செயலாளரின் வழிகாட்டலுடன், 08 நிகழ்ச்சித்திட்டங்களை களுத்துறையிலும் 09 நிகழ்ச்சித்திட்டங்களை மன்னாரிலும் நடத்தியது. ஆடை தயாரிப்பின் போது வடிவமைப்பு வெட்டல், வகைப்படுத்தல், மற்றும் அழகூட்டல் அபிவிருத்தி என்பவற்றை பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் கொண்டிருந்தது. புடவையில் பற்றிக் அச்சிடுதல் மற்றும் பாதணி தயாரிப்பு என்பவற்றிற்கான வடிவமைப்பு என்பன குடிசைக் கைத்தொழிலின் நிலைத்திருப்புக்காகவும், 308 பயன்பெறுநர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்தவதற்காகவும் வழங்கப்பட்டது.

திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வசதிகளைப் பெற்றுக்கொள்ளமாறு இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவனம் பங்குபற்றுபவர்களை ஊக்குவித்தது. திவிநெகும பயன்பெறுநர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் மன்னாரில் 2013 செப்டெம்பர் நடைபெற்றதுடன், இதில் 280 நன்மையாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

# வணிகப் பிரிவு

# வணிகத் திணைக்களம்

## அறிமுகம்

- வர்த்தக திணைக்களமானது இருதரப்பு, பிராந்திய மற்றும் பல்தரப்பு மட்டங்களில் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக கொள்கையினை வகுத்தல் மற்றும் அமுலாக்குதல் தொடர்பில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சிற்கான மதியுரை வழங்கும் நிறுவனமாக தொழிற்பட்டு வருகின்றது. இந்தப் பொறுப்புடமையானது, (அ) இலங்கையின் சுதந்திர/முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளின் பேச்சுவார்த்தைகள், தொழிற்படுத்தல்கள் மற்றும் கண்காணித்தல், (ஆ) ஏனைய நாடுகளுடன் கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுக்களை செயற்படுத்துதல், (இ) வெளிநாடுகளிலுள்ள வர்த்தக மன்றங்களுடன் தொடர்புடைய இலங்கையின் பல்வேறு வர்த்தக கொள்கைகளினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல் போன்ற உள்ளக நடவடிக்கைகளினை உள்ளடக்குகின்றது.

- ஊக்குவிப்பினை வழங்கும் நிறுவனமென்றவகையில், வர்த்தக திணைக்களமானது, இலங்கையின் கடல்கடந்த வர்த்தக மற்றும் பொருளாதார நலன்களை விரிவாக்குவதற்கு ஆதரவளிக்கின்ற வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்களினை ஒழுங்கமைப்பதில்/ வசதிப்படுத்துவதில் பிரதான பங்கினை வகிக்கின்றது. இது தொடர்பில், வியாபார தூதுக்குழுக்கள், வர்த்தக சந்தைகள், முதலீட்டு மன்றங்கள், சுற்றுலா குழுக்கள், ஊடக பிரச்சாரங்கள் ஆகியவற்றினை ஒழுங்கமைத்தல், சந்தை மதிப்பாய்வுகளை மேற்கொள்ளுதல், வர்த்தக பிணக்குகளுக்குத் தீர்வு காணுதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

- மேற்படி நடவடிக்கைகள், “மஹிந்த சிந்தனை – எதிர்கால நோக்கு” எண்ணக்கருவில் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி நோக்கங்களை அடைவதில் பெறுமதிமிக்க பங்களிப்பினை வழங்கி வருகின்றன.

**31 டிசம்பர் 2013 வரையிலான முன்னேற்றம்**

**பல்தரப்பு விவகார பிரிவு**

**உலக வர்த்தக நிறுவனம் (உவறி)**

- உலக வர்த்தக நிறுவன நெறியாளர்களினால் நெறிப்படுத்தப்படுகின்ற பல்தரப்பு வர்த்தக முறைமையினுள் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக நலன்களை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தலானது, உலக வர்த்தக நிறுவனத்திற்கான இலங்கையின் நிரந்தர தூதரகத்தின் (ஜெனிவாவினைத் தளமாக கொண்டுள்ள உத்தியோகத்தர்களின்) அதி முக்கியமானதும் முதன்மையானதுமான பொறுப்புடமையாகும்.

- பிரதான செயற்பாடுகள், வர்த்தக பேச்சுவார்த்தைகளின் (டோஹா அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல்) கீழ் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளில் அக்கறையுடன் கூடிய பங்குபற்றுதல் உள்ளடங்கலான பல்தரப்பு விடயங்களில் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் 9 ஆவது உலக வர்த்தக நிறுவன அமைச்சர்கள் மட்டத்திலான மாநாட்டுக்கான (MC-9) ஆகக்குறைந்தது சிறிய பொதியினையாவது பூர்த்தி செய்வதில் அங்கத்தவர்களின் எதிர்பார்ப்புக்களை வளர்த்தெடுக்கும் பொருட்டு இந்தோனேசியா, பாலியில் 2013 டிசம்பர் 5 – 7 வரையில் நடாத்தப்பட்டது..

- ஜெனிவாவிலுள்ள நிரந்தர தூதரகமானது, இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான சந்தை அணுகு முறைகளை தடுக்கின்ற நடவடிக்கைகளை விபரிக்கும் நோக்குடன் சந்தை அணுகுமுறை, விவசாயம், பாதுகாப்பு, சுகாதார மற்றும் சுகாதாரம் பேணல் நடவடிக்கைகள்(SPS),வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப தடைகள், வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி போன்ற விசேட உலக வர்த்தக

நிறுவன குழுக் கூட்டங்களில் அக்கறையுடன் பங்குபற்றியது.

- இலங்கையில் வர்த்தகத்துடன் தொடர்புடைய திறன் விருத்திகளைக் கட்டியெழுப்புவதற்கான தொழில்நுட்ப உதவுகையினை பாதுகாக்கும் பொருட்டு UNCTAD மற்றும் ITC போன்ற ஏனைய பிரதான சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுகின்றது.

- உலக வர்த்தக நிறுவனம் நிறுவப்பட்டதில் இருந்து இன்று வரை மேற்கொண்டவற்றில் , டோஹா அபிவிருத்தி நிரலின் தெளிவற்ற பிற்போடப்பட்ட பேச்சுவார்த்ததைகள் மற்றும் பாலிப் பொதியானது முதலாவது வெற்றிகரமான வர்த்தக உடன்பாடாக பதிவுசெய்யப்படுகின்றது. அப்பொதியின் ஒரு பகுதியாக அங்கத்தவர்கள் 2014ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலை அமைப்பதற்கு உடன்பட்டனர்

**வர்த்தக ஒருங்கிணைப்பு**

- டிடிஏ பேச்சுவார்த்தைகளின் உள்ளடக்கமாக, பொதியின் பிரதான வெளியீடாக வர்த்தக ஒருங்கிணைப்பு தொடர்பான ஒப்பந்தத்தை இணைத்துக்கொண்டமை, எல்லைப் வசதிகளில் அங்கத்தவர்களின் ஒருநிலைக்கு வருதல் மற்றும் சுங்கத்துடன் அதன் கட்டணம் மற்றும் அறவீடுகள், வெளிப்படுதன்மை தொடர்பாக நெருக்கமாக உசாவுதல்களை மேற்கொள்ளுதல் உள்ளடக்கிய ஒரு புதிய உவறி ஒப்பந்தம் ஆகும். பாலியில் அங்கத்தவர்கள் இவ்வொப்பந்தத்தில் கீழ்வரும், உடனடியாக அமுல்படுத்தக்கூடிய தங்கள் மேல்வரும் ஈடுபாடுகளுக்கான தனிப்பட்ட அட்டவணையை 2014 ஜூலையில் சமர்ப்பிப்பதற்கு உடன்பட்டனர்.

**கன்குன் S&D பொதி**

- தூதரகமானது, வேறுபட்ட உலக வர்த்தக நிறுவன உடன்படிக்கைகள் கொண்டிருக்கின்ற விசேட மற்றும் வேறுபட்ட முறையிலான ஏற்பாடுகளின் கீழ் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான நெகிழ்வுத்தன்மைகளை விரிவாக்குவதனை நோக்கமாக கொண்ட 28 பிரேரணைகளைக் (கன்குன் S&D பொதி)கொண்ட பொதியொன்றினையும் ஆதரவளித்துள்ளது.

- தலைமை அலுவலகம் மற்றும் வர்த்தக மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக் கொள்கை திணைக்களத்தின் உதவுகையுடன் தூதரகமானது, 2012 நவம்பரில் பால் மா உற்பத்திகள் மீதான அதன் இறக்குமதி வரியினை அதிகரிப்பது தொடர்பான இலங்கையின் தீர்மானத்திற்கெதிராக விவசாய மற்றும் சந்தை அணுகுமுறை மீதான உலக வர்த்தக நிறுவன குழுக்களில் நியூசிலாந்தினால் எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி இலங்கையின் நலன்களினை பிரதிநிதித்துவம் செய்துள்ளது. இந்த வரி அதிகரிப்பானது உலக வர்த்தக நிறுவனத்தில் அதன் திரட்டிய வரியிலும் பார்க்க பால்மா உற்பத்திகளுக்காக இலங்கையினால் விதிக்கப்பட்ட வரிகளை உயர்த்தியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் சமரசமான தீர்வினைக் காணும் நோக்குடன் கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- ஏனைய பாதிக்கப்பட்ட நாடுகள் (துருக்கி, அவுஸ்திரேலியா போன்ற) மற்றும் உலக வர்த்தக நிறுவனத்தின் சட்டம் தொடர்பான மதியுரை மையம் ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்து, தூதுக்குழுவில் முக்கிய பங்கினை ஆற்றி வரும் இந்தோனேசிய அரசாங்கத்தினை இலற்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கோதுமை மா தொடர்பில் அது ஆரம்பித்துள்ள பாதுகாப்பு விசாரணைகளை நிறுத்துமாறு அழுத்தம் கொடுத்துள்ளன. நுண்ணயாவுக் காலப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கயின் ஏற்பாடாக இந்தோனேசிய அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட அதிஉயர் தீர்வையானது இந்தோனேசியாவுக்கான இலங்கையின் கோதுமை ஏற்றுமதியினை கடுமையாகப் பாதித்துள்ளது. 2012 இல் இந்தோனேசியாவுக்கான இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளான 87.01 மில். அ.டொலரில் 82% (71.44மில்.அ.டொ.) இற்கும் அதிகமானவை கோதுமை மாவின் ஏற்றுமதிகளாகும்.

- இந்தியா பாதுகாப்பு முறையாக இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும்

எம்டிஎப் பலகைகளின் இறக்குமதிக்கான தள விலையொன்றினை விதித்துள்ளது. இத் திணைக்களத்தின் தலையீட்டினையடுத்து இந்திய அதினாரிகள் தொழிற்படக்கூடிய மட்டத்தில் தள விலையினை நிர்ணயித்துள்ளார்கள்.

- மீளாய்வின் கீழான காலப்பகுதியில், வியடனாம் அரசாங்கம் வியட்னாமுக்கான இலங்கைத் தேயிலைக் கெதிராக சுகாதார மற்றும் சுகாதார பாதுகாப்பு நடைமுறையினை விதித்துள்ளது. இராஜதந்திர வழிமுறைகளினூடாக திணைக்களம் மேற்கொண்ட பிரதநிதித்துவத்தின் பயனாக சுகாதார மற்றும் சுகாதார நடைமுறைகளுக்கமைவாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு இலங்கையின் அதகிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன் அதற்காக இலங்கைக்கு கருணை காலத்தினையும் வழங்கியிருந்தனர்.

- இலங்கையின் வர்த்தகத்துடன் தொடர்புடைய திறன்களைக் கட்டியெழுப்புவதற்கான தொழில்நுட்ப உதவுகையினை வழங்கும் சாத்தியப்பாட்டினை கண்டறவிதற்காக உலக வர்த்தக நிறுவனம், அங்ராட் நிறுவனம் மற்றும் சர்வதேச வர்த்தக நிலையம் ஆகியவற்றுடன் நெருங்கிய பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. திறன்களைக் கட்டியெழுப்புவதற்காக கவனத்தில் கொள்ளப்பட்ட முன்னுரிமை விடயங்கள் எஸ்பிஎஸ் உள்ளக கட்டமைப்பு, ஏற்றுமதி தர உறுதிப்படுத்துகை முறைமை மற்றும் இலத்திரனியல் சந்தைப்படுத்தல் ஆகியவற்றினைக் கொண்டுள்ளது.

**வர்த்தக முன்னுரிமைகளின் பூகோள முறைமை (GSTP)**

அபிவிருத்திடைந்துவரும் நாடுகளுக்கிடையிலான வர்த்தக முன்னுரிமைகளின் பூகோள உடன்படிக்கையானது, 1989 இல் தாபிக்கப்பட்டது. வர்த்தக முன்னுரிமைகள் மீதான பூகோள முறைமையானது தெற்கு – தெற்கு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை அதிகரிக்கும் நோக்குடன் வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாட்டின் (UNCTAD) ஆதரவளிக்கக்கூடிய கேடயத்தின் கீழ் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்ட ஓர் வரி முன்னுரிமை முறையாகும். GSTP செயல்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் மெக்ஸிக்கோ மற்றும் பெரு நாடுகளுக்கு 19,173,709.96. அ.டொலர் பெறுமதியுடைய பொருட்கள் இலங்கையினால் ஏற்றுமதி செய்யப்பட்டன.

**பொதுவான முன்னுரிமை முறைமை (GSP)**

**(அ) EU GSP திட்டம்**

ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றமானது புதிய பொதுவான முறைமையினை 2012 ஜூன் 13 ஆம் திகதி அங்கீகரித்துள்ளதுடன் அது 2014 ஜனவரி 1 ம் திகதயிலிருந்து அமுலுக்கு வரும். இலங்கையானது இத்திட்டத்தின் பயனாளியாக தொடர்நதும் இருக்கும்.

**(ஆ) நோர்வே GSP+ திட்டம்**

நோர்வே அரசாங்கமானது 2013 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் குறைந்த நடுத்தர வருமானத்தினைப் பெறும் நாடுகளுக்கான வகையீடாக புதிய ஜிஎஸ்பி பிளஸ் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் இத்தகைய வசதியினைப் பெறும் பதினேழு நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இலங்கையானது 1972 இலிருந்து நோர்வேயின் ஜீஎஸ்பி வசதிகளைப் பெற்று வருகின்றதுடன், இந்த ஆண்டிலிருந்து புதிய ஜிஎஸ்பி பிளஸ் நிலையினையும் அநுபவிக்கக்கூடியதான வகையீட்டினையும் அடைந்துள்ளது. ஜீஎஸ்பி பிளஸ் நாடுகள் சாதாரண ஜீஎஸ்பியின் அத்தகைய சலுகைகளை பெறும் அதேவேளையில் சாதாரண ஜிஎஸ்பியிலிருந்து விலக்களிக்கப்பட்ட புடவை வகையீட்டுக்கும் (HS chapter 61, 62 and 63. ) தீர்வை விலக்களிப்பினைப் பெறுகின்றது. இத்தகைய நாடுகள் சாதாரண ஜிஎஸ்பி இல் நிரல்படுத்தப்படாத குறித்த சில விவசாய உற்பத்திகளுக்கு 50 மற்றும் 100% வரி விலக்களிப்பினைப் பெறுவதற்கும் உரித்துடையவையாகின்றன. ஆகையால், ஜீஎஸ்பி பிளஸ் உற்பத்தி உள்ளடக்கம் மற்றும் வரி சலுகைகள் என்பன சாதாரண ஜிஎஸ்பி இனைக் காட்டிலும் விரிவானவையாகும்

**(இ) US GSP செயல்திட்டம்**

T US GSP நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தகுதிவாய்ந்த பொருட்களுக்கான தீர்வையல்லா நடைமுறையானது ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் அத்திட்டத்தினை நீடிக்காமையினால் 2013 ஜீலை 31 ஆம் திகதி காலாவதியானது. 1974 இல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து கடந்த காலங்களில் 12 தடவைகள் US GSP நிகழ்ச்சித்திட்டம் காலாவதியகியுள்ளது. எவ்வாறாயினும், ஐக்கிய அமெரிக்க ஏற்றுமதியாளர்கள் ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் அங்கீகரிக்கின்ற GSP. அடிப்படையிலான GSP பயன்களை கோரக் கூடியதாக இருந்த்து.

**இருதரப்பு விவகார பிரிவு**

**இந்திய இலஙகை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)**

**(அ) விசேட பொருளாதார பங்குடமை**

2013 ஜனவரியில் கூட்டு ஆணைக்குழுவில், இரண்டு நாடுகளுக்குமிடையில் விசேட பொருளாதார பங்குடமையொன்றிற்கான வழியொன்றினை காண்பதற்கான முந்திய திகதியில் இலங்கையின் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கும் இந்திய வர்த்தக செயலாளருக்குமிடையில் பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது.

இலங்கையின் நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்கும் இந்திய வர்த்தக செயலாளருக்குமிடையில் கொழும்பில் 2013 ஜுன் 24 இலிருந்து 25 வரையில் உத்தியோகபூர்வமான பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. இஸ்ப்ரா இன் கீழ் நிறைவேற்றப்படாத விடயங்களும் கலந்துரையாடப்பட்டதுடன் இரண்டு தரப்புக்களும் இரண்டு நாடுகளுக்குமிடையிலான நெருக்கமான வர்த்தகத்தின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தியுள்ளன. கூட்டத்தில் இஸ்ப்ராவின் கீழ் இரண்டு நாடுகளுக்குமிடையில் நிலுவையாயுள்ள கவனிக்கத்தக்க பயன்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது. இருதரப்பு வர்த்தகத்தின் முக்கியத்துவத்தினை மேலும் அதிகரிக்கும் பொருட்டு பின்வருவனவற்றில் கவனம் செலுத்துவதற்கு இணங்கிக் கொண்டன.

i. இறுதிக்கட்டத்திலுள்ள எதிர்மறைப் பட்டியல்களை மீளாய்வு செய்தலும் உள்நாட்டு நெகழ்வுத் தன்மைகளை பொறுத்துக் கொள்ளுதலும்

ii. வரியல்லா தடைகளை நீக்குதல்

iii. வர்த்தக பிணக்குகளை தீர்ப்பதற்கான முறைமையொன்றினை தாபித்தல்

iv. வர்த்தக பற்றாக்குறையினை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தும் அதேவேளையில் 3 வருட காலப்பகுதியில் 10 பில்லியன் அ.டொலர் பெறுமதிக்கு இருதரப்பு வர்த்தகத்தினை விரிவாக்குதல்.

இலங்கையானது இந்தியாவுடனான வளர்ந்து வரும் வர்த்தக பற்றாக்குறையின் முக்கியத்துவம் குறித்து கவனம் செலுத்தியுள்ளதுடன் எவ்வித கட்டுப்பாடுமின்றி இந்திய சந்தைக்கு பெறுமதி சேர்த்த பொருட்களுடன் தொடர்புடைய தைத்த ஆடைகள், மலைநாட்டு தேயிலை, பெறுமதி சேர்த்த இறப்பர் உற்பத்திகள், மலர்ச்செடிகள் மற்றும் வாசனைத்திரவியங்கள் என்பனவற்றினை ஏற்றுமதி செய்ய முடியும்.

இந்தியாவானது, நிபந்தனைகளின்றி மொத்த கோட்டா சுங்கத் தீர்வையினை உருவாக்கும் 8 மில்லியன் மொத்த தைத்தை ஆடைத் துண்டுகளில் தற்போதிருக்கும் 5 மில்லியன் துண்டுகள் மீதான துணி மூலவள நிபந்தனைகளை நீக்கியுள்ளது. முன்னதாக தைத்த ஆடைகளின் 5 மில்லியன் துணடுகளுக்கான மூலவள நிபந்தனையானது பொருத்தமானதாக அமைந்திருந்தது. கூட்டத்தின் போது இந்திய தரப்பானது, இலங்கையிலிருந்து பதப்படுத்திய இறைச்சி மற்றும் பழங்களின் இறக்குமதி தொடர்பாக விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை நிக்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

கலந்துரையாடலின் போது, 2009 ஆண்டில் சமாதனம் ஏற்பட்டதனைத் தொடர்ந்து சுற்றுலாத்துறைக்கு புத்துயிரளிக்கும் நோக்குடன் இலங்கை ஆர்வத்துடன் ஆரம்பித்துள்ள சுற்றுலாத்துறையின் முக்கிய விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டன. தொடர்பு முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு தென்னாசிய பிராந்தியத்தில் மக்கள், பொருட்கள் மற்றும் சேவைகளின் சுதந்திரமான நகர்வு மற்றும் பிராந்தியத்தில் இலங்கைகும்

இந்தியாவுக்குமிடையிலான நடைமுறை தொடர்பு மட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டதுடன் தற்போதைய நிலைபரம் மற்றும் எதிர்கால நலன்களை பிரதிபலிக்கும் வகையில் சுற்றுலாத்துறையின் ஒத்துழைப்பு தொடர்பில் காணப்படுகின்ற தற்போதைய புரிந்துணர்வு உடன்படிக்கையினை மீளாய்வு செய்வதற்கும் சந்திப்பில் உடன்பாடு காணப்பட்டது.

இலங்கையானது, கூட்டு முயற்சிகளிலிருந்து மேலும் முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, இறக்குமதிக்குப் பதிலீடான சீனி சுத்திகரிப்பு தொடர்பில் பின்பற்றப்படுகின்ற மாதிரியினைப் பயன்படுத்தி இறக்குமதிகள் தொடர்பில் இலங்கையில் தற்போது எஞ்சியிருக்கின்ற பல பிரதேசங்கள் சுட்டிக் காட்டியுள்ளது.

**(ஆ) கூட்டு செயலணி (JTF)**

இலங்கையும் இந்தியாவும் இருதரப்பு வர்த்தக மற்றும் முதலீடுகளினை மேலும் மேம்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறியும் பொருட்டு இலங்கை - இந்திய கூட்டு செயலணியொன்றினை அமைத்திருந்தன. கூட்டு செயலணியின் முதலாவது கூட்டம் 2013 ஜீன் 24 ஆம் திகதியன்று நடாத்தப்பட்டதுடன் உள்ளக விவகாரங்கள், இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் தற்போதைய நிலைபரம், எதிர்மறைப்பட்டியல்களை மீளாய்வு செய்தல், இருதரப்பு வர்த்தகத்தினை விரிவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், NTB தொடர்பில் விளைக்கமளித்தல், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறையினை மேலும் மேம்படுத்துதல் தொடர்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவின்ன் உள்ளக கட்டமைப்பு, குத்தகை மற்றும் நிதி சேவைகள் லிமிட்டட் (ILFS) வாகனங்கள், மருந்தாக்கல்கள், திறன் விருத்தி பயிற்சியளித்தல், புடவைகள், பொறியியல் உள்ளக கட்டமைப்புக்கள், சுற்றுலாக் கைத்தொழில் போன்ற அதனால் வழங்கப்படும் உள்ளார்ந்த சேவைகள் தொடர்பில் கூட்டமொன்றினை நடாத்தியது. கூட்டு செயலணியானது உரிய நாடுகளின் வர்த்தக திணைக்கங்கள் NTB கள் தொடர்பில் எழுகின்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் ஒருங்கிணைப்பதற்குமான மத்திய நிலையமாக தொழிற்படுவதனை ஏற்றுக் கொண்டது.

**(இ) ISFTA இன் கீழான ஏற்றுமதிகள்**

இலங்கையானது இஸ்ப்ராவின் கீழ் அதன் ஏற்றுமதிகளைப் பல்வேறு வகைப்படுத்தியுள்ளது. தற்போது இலங்கையின் இந்தியாவுக்கான ஏற்றுமதிப் பொருட் தொகுதியில் மின் இணைப்பு வயர்களும் தந்திகளும், தைத்த ஆடைகள், இறப்பர் ரயர்கள், கையுறைகள், தளபாடங்கள், சைக்கிள்கள், பீங்கான் உற்பத்திகள், போத்தல்கள், போத்தல் குளிரூட்டிகள், சொசேயஸ், ஸ்ரோபெரிகள் மற்றும் பிஸ்கற்றுக்கள் போன்றவையும் உள்ளடங்குகின்றன. இந்தியாவுக்கான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 2013 316 மில்லியன் அமெரிக்க டொலர்களை பதிவுசெய்தது.

**பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (PSFTA)**

T பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான 5 ஆவது தொழில்நுட்ப கூட்டமானது இலங்கையின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர் மற்றும் பாகிஸ்தானிய வர்த்தக செயலாளர் ஆகியோரின் இணைத் தலைமையில் 2013 ஏப்பிரல் 28 – 29 வரையில் இஸ்லாமபாத்தில் நடாத்தப்பட்டது.

கலந்துரையாடலின் போது, பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் தீர்வு காணப்படாதுள்ள பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் இலங்கையானது கொசுவர்த்தி சுருள்ளகள், போத்தல் குளிரூட்டும் இயந்திரங்கள், மசகு தேங்காய் எண்ணெய், வெற்றிலை மற்றும் மூலிகை அழகு சாதனப் பொருட்கள் போன்ற ஐந்து பொருட்களுக்கான சந்தை அணுகுமுறையினை வழங்கியிருந்தது. மேலும், பாகிஸ்தானிய தரப்பானது, இலங்கையிலிருந்து பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் ஏற்றுமதி செய்யப்படும் இஞ்சி சோடா மற்றும் பீங்கான் உற்பத்திகளுக்கான தீர்வை சலுகைகளை வழங்குவது தொடர்பில் கவனத்தில் கொள்வதற்கு உடன்பட்டுக் கொண்டன.

இரண்டு தரப்பும் உரிய விடயங்களின் கீழ் பேச்சுவார்த்தைகளுக்கான வசதிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு பொருள் வர்த்தகம், சுங்க ஒத்துழைப்பு, முதலீடு மற்றும் தன்னியக்க

வாகனத்துறை தொடர்பில் கூட்டு தொழிற்படு குழுக்களை தாபிப்பதற்கு உடன்பட்டுக் கொண்டன.

பாகிஸ்தான் - இலங்கையின் இணைந்த பொருளாத ஆணைக்குழுவின் 11ஆம் கட்டம் 20 – 28 நவம்பர் 2013 வரை இலங்கையில் உள்ள கொழும்பில் நடைபெற்றது, இருதரப்பினரும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை விரிவுபடுத்துவது தொடர்பாக கலந்துரையாடினர்.
கூட்டத்தின் போது இரு தரப்பினரும் கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள், சுங்கங்களின் - மின்சார தரவுத்தளம், முதலீட்டுச் சபை மற்றும் விவசாயம் தொடர்பாக ஒருங்கிணைப்பதற்கும் மற்றும் கடைசி அமர்வின் போது உடன்பட்டவற்றை தொழிற்படுத்துவதற்கும் கூட்டு தொழிற்குழுக்களை நிறுவுவதற்கு உடன்பட்டனர். அத்துடன் பாகிஸ்தாகன் PSFTA ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை ஏற்றுமதி செய்யும் வெற்றிலைக்கான தற்போதைய எம்ஒபி 35% ஐ 50 எம்ஒபிவரை உயர்த்துவதற்கு உடன்பட்டது.

பாகிஸ்தானுடனான இருதரப்பு உடன்படியின் கீழ் இலங்கை 2013 ஜனவரியில் இருந்து 2013 வரை மேற்கொண்ட ஏற்றுமதி 31 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியதுடன், இது இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு மேற்கொள்ளும் ஏற்றுமதியின் 72% வீதமாகும்.

**வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பில் இலங்கை மற்றும் பெலாரஸுக்குமிடையிலான உடன்படிக்கை**

பெலாரஸ் அரசாங்கமானது இரண்டு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக மற்றும் பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இலங்கைக்கும் பெலாரஸுக்குமிடையில் இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்தழைப்பு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கு உத்தேசித்துள்ளது. அதற்கிணங்க, அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் 2013 ஆகஸ்ட 25 இலிருந்து 28 வரையில் பெலாரஸுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது மேற்குறித்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

மேலும், புருஸெல்ஸிலுள்ள இலங்கை தூதரகத்தில் சேவையாற்றும் ஜனாதிபதி தூதுக்குழுவின் உறுப்பினரான திரு.ஆர்.டி.எஸ். குமாரரத்ன / அமைச்சர் (வர்த்தகம்), பெலாரஸில் பெலாரசிய வர்த்தக மன்றத்தில் இடம்பெற்ற இலங்கை – பெலாரஸ் வர்த்தக மன்றத்தில் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக கொள்கை குறித்து உரையாற்றியுள்ளார்.

**பிராந்திய விவகார பிரிவு**

**தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசம் (SAFTA)**

SAFTA இன் வர்த்தக விடுதலையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2016 ஆம் ஆண்டளவில் 10 வருடங்களைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ள SAFTA இன் வர்த்தக விடுதலையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், நெகிழ்வுப் பட்டியல்களில் அல்லாத உற்பத்திகள் மீதான சுங்கத் தீர்வைகள் படிப்படியாக நீக்கப்படும்/ கழிக்கப்படும். இலங்கையானது அதன் சுங்கத் தீர்வைகளை 2014 ஆம் ஆண்டளவில் ஆறு சமமான தவணைகளில் 0 – 5% வரையில் குறைத்துள்ளது. ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ், பூட்டான், மாலைதீவு மற்றும் நேபாளம் ஆகிய குறை விருத்தி நாடுகளுக்கான சுங்கத் தீர்வைகளை 2016 ஆம் ஆண்டளவில் 8 சம தவணைக்கட்டணங்களில் 0 – 5% குறைத்துள்ளதுடன் 2013 ஆம் ஆண்டளவில் இந்திய மற்றும் பாகிஸ்தானுக்கு 5 சம தவணைக்கட்டணங்களுக்கு 0 – 5% குறைத்துள்ளது. இலங்கையானது குறைவிருத்தியல்லா நாடாக காணப்பட்ட போதிலும் வழங்கப்பட்ட அதன் அளவு மற்றும் பொருளாதாரத்தின் நலிவடைந்த தன்மையினால் இறக்குமதி தீர்வைகளை படிப்படியாக நீண்ட காலத்திற்கு குறைக்க முடிந்துள்ளது.

இலங்கையானது, 2013ம் ஆண்டில், SAFTA இன் கீழ் இந்தியா, மாலைதீவு மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு 1.85 மில்.அ.டொலர் பெறுமதியான பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. உலர்த்திய தேங்காய், தேங்காய் பால் மா, கொப்பரா, தேங்காய் எண்ணெய், மிளகு, பீங்கான் உற்பத்திகள், துஒள வகைகள், மீன் சுற்று கடதாசி உற்பத்திகள், தும்பு உற்பத்திகள், மரத்தளபாடங்கள், முலாமிடப்பட்ட கல்சியம் காரபனேற், துணி வகைகள் மற்றும் தரை

ஓடுகள் என்பன ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களினுள் உள்ளடங்குகின்றன.

இலங்கை தவிர்ந்த 20% மான அங்கத்துவ நாடுகளின் நெகிழ்வுப் பட்டியல்கள் பூர்த்தி செய்யப்பட்டன. வர்த்தக திணைக்களமானதுஇலங்கையின் பாதகமான பட்டியலிலிருந்து நீக்கப்பட வேண்டிய உற்பத்திப் பொருட்களின் பட்டியலினை தயாரித்து அதனை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்துள்ளது.

**நெகிழ்வுப் பட்டியல் குறைப்பு - 2013**

பின்வரும் கூட்டங்கள் 2013 ஜனவரியிலிருந்து செப்ரெம்பர் வரையில் நடாத்தப்பட்டன.

1. 2013 ஜீலை 30 ஆம் திகதி, சார்க் செயலகம் காத்மண்டுவில் நடாத்தப்பட்ட சப்ரா இன் கீழான நெகிழ்வுப் பட்டியல்லைக் குறைப்பது தொடர்பான தொழிற்படு குழுவின் இரண்டாவது கூட்டம் (கட்டம் III)

2. 2013 ஜுலை 31 இலிருந்து ஆகஸ்ட் 1 ம் திகதி வரையில் சார்க் செயலகம், காத்மண்டுவில் நடாத்தப்பட்ட வரியல்லா அளவீடுகள் மற்றும் துணை வரி அளவீடுகள் மீதான சப்ரா நிபுணர் குழுவின் விசேட கூட்டங்கள்

3. 2013 ஆகஸ்ட் 21 – 22 ஆம் திகதி வரையில் கொழும்பில் நடைபெற்ற சப்ரா நிபுணர் குழுவின் எட்டாவது கூட்டம்

4. 2013 ஆகஸ்ட் 23 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற சப்ரா அமைச்சர்கள் மட்டத்திலான பேரவையின் ஏழாவது கூட்டம் வர்த்தக திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சப்ரா நிபுணர் குழுவின் எட்டாவது கூட்டமும் சப்ரா அமைச்சர்கள் மட்டத்திலான பேரவையின் எட்டாவது கூட்டமும் கொழும்பில் நடாத்தப்பட்டன.

மேற்படிக் கூட்டங்களில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.

சப்ராவின் கீழ் கைச்சாத்திட்ட மீளாய்வு செய்யப்பட்ட நெகிழ்வுப் பட்டியல்கள் வழங்குகையின் அமுலாகத்திலுள்ள முன்னேற்றம். (கட்டம் 11)

- சப்ராவின் கீழான நெகிழ்வுப் பட்டியல்களில் மேலும் குறைப்புக்காக கடைப்பிடிக்கப்படவேண்டிய

| அங்கத்துவ அரசு | 20% குறைப்புக்கு முன்னர் நெகிழ்வுப் பட்டியல்கள் | | 20% குறைப்புக்கு பின்னர் நெகிழ்வுப் பட்டியல்கள் | |
|---|---|---|---|---|
| | LDCs | NLDCs | LDCs | NLDCs |
| ஆப்கானிஸ்தான் | 1072 | | 850 | |
| வங்காளதேசம் | 1233 | 1241 | 987 | 993 |
| பூட்டான் | 150 | | 150 | |
| இந்தியா | 480 | 868 | 25 | 614 |
| மாலை தீவு | 681 | | 152 | |
| நேபாளம் | 1257 | 1295 | 998 | 1036 |
| பாகிஸ்தான் | 1169 | | 936 | |
| ஸ்ரீலங்கா | 1042 | | 837 | 963 |

வரையறைகள் மற்றும் கால எல்லைகள் (கட்டம் III)

- அங்கத்துவ நாடுகளிலிருந்து பெறப்பட்ட வரியல்லா நடைமுறைகள்/ துணை வரி நடைமுறைகள் ஆகியவற்றின் மீதான அறிவத்தல்களின் சோதனை மற்றும் வரியல்லா நடைமுறைகள்/ துணை வரி நடைமுறைகளுடன் தொடர்புடைய விடயங்கள்

- சப்ராவின் கீழ் மற்றும் சப்ராவுக்கு வெளியேயான சார்க் வர்த்தக பாய்ச்சல்களுக்கிடையில் தொடர்புடைய லிடயங்கள்.

- EU GSP இன் கீழான சுப்பர் பிராந்திய ஒன்றிணைப்பு தொடர்பான விடயங்கள், SAPTA மற்றும் SAFTA இன் கீழான உறுதிப்படுத்தல் பொறிமுறையின் நிறுவனமயமாக்கல் மற்றும் சப்ரா முறைமையின்

பிணக்குத் தீர்வு மற்றும் வர்த்தக வசதிப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

- சப்ரா உடன்படிக்கையின் நிருவாக மற்றும் அமுலாக்கலுடன் தொடர்புடைய விடயங்கள்

**சேவைகள் வர்த்தகம் மீதான சார்க் உடன்படிக்கை (SATIS)**

பூட்டானில் 2010 ஏப்பிரலில் இடம்பெற்ற 16 ஆவது சார்க் மாநாட்டின் போது, அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள், சேவை வர்த்தகம் மீதான சார்க் சட்டரீதியான உடன்படிக்கையினை உறுதிப்படுத்தும் வகையில் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்கள்.

அங்கத்துவ நாடுகள் சேவைகள் வர்த்தகம் மீதான சார்க் உடன்படிக்கையின் கீழான இணக்கப்பாடுகளின் அட்டவணைகளை பூர்த்தி செய்யும் செயல் முறையில் ஈடுபட்டு வருகின்றன. இலங்கையின் இணக்கப்பாடுகளின் அட்டவணையானது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

**சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (SAPTA)**

1993 ஆம் ஆண்டு ஏப்பிரல் 11 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட ஞுயூவுயு 1995 ஆம் டிசம்பர் 7 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்தது. இந்த உடன்படிக்கையானது, சலுகைகளின் பரிமாற்றத்தினூடாக சார்க் பிராந்தியத்தினுள் பரஸ்பர வர்த்தகத்தினை நிலைநிறுத்துதல் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பினை ஊக்குவிப்பதற்கான அங்கத்துவ நாடுகளின் விருப்பத்தினைப் பிரதிபலிக்கின்றது.

SAPTA ஆனது சுங்க சங்கத்தினை நோக்கி முன்னெடுக்கும் தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசமொன்றின் நிலைமாற்றத்திற்கான முதலாவது படிமுறையாக முதன்மையாக உணரப்பட்டது. எனவே, எதிர்காலத்தில், தென்னாசிய சுதந்திர வர்த்தக பிரதேசத்தினால் படிப்படியாக நீக்குவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் SAPTA இன் கீழான முன்னுரிமை வரியின் பயன்பாடு படிப்படியாக குறைவடைகின்றது. 2013 ஆம் ஆண்டில் இலங்கையானது ஞுயூவுயு இன் கீழ் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு 2.2 மில். அ.டொலர் பெறுமதியான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. SAPTA இன் கீழ் ரெசின் இறப்பர் சீற்கள், முலாமிடப்பட்ட இறப்பர், இறப்பர் பட்டிகள், தேங்காய் எண்ணெய், கறுப்பு தேயிலை மற்றும் கழிவு கடதாசி என்பன ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களினுள் உள்ளடங்குகின்றன.

**ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (APTA)**

ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் நிலையியல் குழுவின் 41 மற்றும் 42 ஆவது கூட்டங்கள் முறையே 2013 ஜுன் மற்றும் நவம்பர் மாதங்களில் நடாத்தப்பட்டன. 4 ஆவது சுற்றில் அனைத்து அங்கத்தவர்களினதும் மீளாய்வு செய்யப்பட்ட சலுகைப்பட்டியல்களின் அடிப்படையில் 4 ஆவது சுற்று பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்வதற்கு அங்கத்தவர்கள் 2014 மார்ச் மாதம் நடைபெற்ற கூட்டத்தில உடன்பட்டுக் கொண்டார்கள். இந்த 04ம் சுற்றில் தீர்வை சலுகைகளை அதிகரித்தல், மூல விதிகளிலிருந்து விலக்களிப்புகளை வழங்குதல் மற்றும் வர்த்தக வசதியளிப்பு, முதலீடு மற்றும் சேவைகள் உடன்பாட்டு சட்டகத்திற்குள் நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்துதல் என்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மோங்கோலியா மற்றும் ஏனைய ஏபிடிஏ நாடுகளைச் சேர்ந்த பங்குபற்றுனர்களுடனான இருதரப்பு பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிவுக்கு வந்தது. அதன் விளைவாக 2013 நவம்பரில் இருந்து மொங்கோலியாக ஏபிடிஏ வின் உத்தியோகபூர்வ அங்கத்தவராகியது.

APTA இன் கீழ் தும்பு நார், தைத்த ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், பீங்கான் உறபத்திகள் மற்றும் தேயிலை போன்றவற்றினை உள்ளடக்கும் இலங்கையின் ஏற்றுமதிகள் 2013 ஜனவரியிலிருந்து ஜுன் வரையிலான காலப்பகுதியில் 34.6 மில். அ.டொலரினை பதிவு செய்துள்ளன.

**பிராந்திய ஒத்துழைப்புக்கான இந்து சமுத்திர றிம் கூட்டமைப்பு**

IORA வின் 13வது குழுக்கூட்டம் 30 ஒக்டோபர் இல் இருந்து 1 நவம்பர் வரை அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் நடைபெற்றது. IORA நாடுகளின் அங்கத்தவர்களின் கூட்டத்தில் PTA ஆக பங்குபற்றுவதற்கு இலங்கை தன் விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தது.


கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ ரிசாட் பதியுதீன் அவர்கள் மொரிஸியஸ் நாட்டில் 2013.07.04 ஆம் திகதியலிருந்து 5 ஆம் திகதிவரையில் நடைபெற்ற இடம்பெற்ற முதலாவது IOR-ARC அமைச்சர்கள் மட்டத்திலான பொருளாதார மற்றும் வர்த்தக மாநாட்டில் (பொதுநலவாய வர்த்தக பேரவை) கலந்து கொண்டுள்ளார். கௌரவ அமைச்சர் அவர்களுடன் வர்த்தக திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் 5 இலங்கை கம்பனிகளின் பிரதிநிதிகளும் உடன் பயணமாகியிருந்தனர்.

**வர்த்தக ஊக்குவிப்பு பிரிவு**

**சர்வதேச வர்த்தகம் 2013 – ஒரு கண்ணோட்டம்**

2013 ஆம் ஆணடு காலப்பகுதியில் ஏற்றுமதி சம்பாத்தியமானது 9,180 மில்லியன் அ.டொலர்களிலிருந்து 10,009 மில்லியன் அ.டொலராக அதிகரித்தது. இது 2012 ஆம் ஆண்டின் ஒத்திசைவான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 829 மில்லியன் அ.டொலர் அல்லது 8.28%. நேர்மறை வளர்ச்சியினைக் காட்டியள்ளது.

**வெளிநாட்டு வர்த்தக மார்க்கம் 2013**




**உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை வழங்குதல்**

(அ) வர்த்தக திணைக்களமானது பரஸ்பர மற்றும் பரஸ்பரமல்லா முன்னுரிமை வர்த்தக ஏற்பாடுகளின் கீழ் உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை வழங்குவதற்கான அதிகாரத்தினை கொண்டுள்ளது. இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, பாகிஸ்தான் இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை, ஆசிய பசுபிக் சுத்தந்திர வர்த்தக உடன்படிக்கை (APTA) தென்னாசிய முன்னுரிமை வர்த்தக ஏற்பாடுகள்) (SAFTA) மற்றும் வர்த்தக முன்னுரிமைகளின் பூகோள முறைமை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (GSTP) என்பன பரஸ்பர முன்னுரிமை வரத்தக உடன்படிக்கைகளாக இருக்குகையில் முன்னுரிமைகளின் பொதுவான முறைமையானது (GSP) பரஸ்பரமற்ற முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கயாக அமைந்துள்ளது. நடைமுறை முன்னுரிமைகளின் பொதுவான முறைமை(புளீ), வழங்கப்படும் நாடுகளினுள் ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா, யப்பான், துருக்கி, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து,

சுவிற்சலாந்து, கனடா, நோர்வே மற்றும் ரஷியா என்பன உள்ளடங்குகின்றன.

உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை வழங்குகையானது வேறுபட்ட வர்த்தக ஏற்பாடுகளின் கீழான உரிய மூல விதிகள் தொடர்பான ஆழமான அறிவினை தேவைப்படுத்துகின்ற உயர் தரத்திலான தொழிற்பாடாகும். (அ) வரிச்சலுகைகளுக்கான உற்பத்திப் பருளின் தகமையினை மதப்பாய்வு செய்தல், (ஆ) ஏற்றுமதியாளர்களின் விபரங்களைப் பதிவு செய்தலும் பேணுதலும், (இ) தகமையினை மதிப்பீடு செய்வதற்கு ஏற்றுமதியாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் கிரய கூற்றுக்கள் மற்றும் ஆதரவு ஆவணங்களை மதிப்பாய்வு செய்தல், (ஈ) உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை வழங்கியதன் பின்னர் நாடுகளின் முன்னுரிமை வழங்கும் கோரிக்கைகளை ஆய்வு செய்தல் (உ) உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களுடன் தொடர்புடைய தரவு பகுப்பாய்வு அறிக்கைகளுடன்இணங்குதல் என்பன இதுதொடர்பில் வர்த்தக திணைக்களத்தின் பொறுப்புடமையாகும்.

(ஆ) சலுகைகளுக்கான உற்பத்திப் பொருளின் தகமையின் மதிப்பாய்வானது, உற்பத்தி செயல்முறைகளின் பௌதீக ரீதியான பரிசோதனைகளுக்காக தொழிற்சாலை விஜயங்களை தேவைப்படுத்தலாம். மீளாய்வின் கீழான காலப்பகுதியில், திணைக்களமானது 20 கிரய கூற்றுக்களை மதிப்பாய்வு செய்துள்ளதுடன் 10 தொழிற்சாலை விஜயங்களையும் மேற்கொண்டுள்ளது.

(இ) 2013 டிசம்பர் 30ஆம் திகதியிலுள்ளவாறு, வர்த்தக திணைக்களமானது, உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களினை வழங்குவதற்காக 4,186 ஏற்றுமதியாளர்களினை பதிவு செய்துள்ளது. இலங்கை சுங்கத் திணைக்களத்தின் தகவல்களின்படி, வர்த்தக திணைக்களத்தினால் வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்களின் கீழ் 2013 ஜனவரியிலிருந்து ஜீன் வரையிலான காலப்பகுதியில் 1,627 மில்லியன் அ.டொலர் பெறுமதியுடைய பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளதுடன் இது குறித்த காலப்பகுதியில் உலகுக்கு ஏற்றுமதி செய்த இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் 37% மாகும். கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது 2013 ஆம் ஆண்டு திணைக்களத்தினால் உரிய முன்னுரிமை வர்த்தக ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட உற்பத்தி நாட்டுச் சானறிதழ்களினைக் காட்டுகின்றது.

**விநியோகிக்கப்பட்ட மூலச் சான்றிதழ்கள் - 2013**

| உடன்படிக்கை | உற்பத்திநாட்டு சான்றிதழ்களின் எண்ணிக்கை |
|---|---|
| EU GSP | 79,454 |
| GSP – Other Countries | 13,410 |
| GSP – CIS Countries | 929 |
| ISFTA | 11,088 |
| PSFTA | 8,190 |
| APTA | 3,482 |
| SAFTA | 74 |
| SAPTA | 243 |
| GSTP | 147 |
| Total | 117,017 |

*மூலம் - வணிகத் திணைக்களம்*

(ஈ) சராசிரியாக நாளொன்றுக்கு 470 உற்பத்தி நாட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

(உ) 2013 ஜனவரி 01 இலிருந்து டிசம்பர் 31 வரையில் முன்னுரிமை வழங்கும் நாடுகளிலிருந்தான கோரிக்கையின் பேரில் 45 உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

**விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்**

**(அ)ஐக்கிய அமெரிக்க உணவு மற்றும் ஔடத நிருவாகத்தின் புதிய உணவு பாதுகாப்பினை நவீனமயப்படுத்தல் சட்டம் மற்றும் குனுயு இன் பரிசோதனை நடைமுறை தொடர்பான கருத்தரங்கு – 2013 ஆகஸ்ட் 24 ஆம் திகதி**

வர்த்தக திணைக்களமானது வொஸிங்டனிலுள்ள இலங்கை தூதரகத்துடன் இணைந்து குனுயு இன்

தனியார் துறை நிபுணர் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் உணவு கைத்தொழில் அகியவற்றுடன் இலங்கையின் தற்போதிருக்கும் மற்றும்உள்ளார்ந்த மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏற்றுமதியாளர்களுக்காக, 55 பங்குபற்றுனர்களுடனான கருத்தரங்கொன்றினை ஏற்பாடு செய்தது. கருத்தரங்கின் நோக்கம் என்னவெனில், ஐக்கிய அமெரிக்க உணவு நவீனமயப்படுத்தல் சட்டம் மற்றும் இந்த வருடத்தின் இறுதிப்பகுதியில் இலங்கையில் நடாத்தப்படவுள்ள குனுயு இன் பரிசோதனை செயல்முறை தொடர்பிலும் விழிப்புணர்வினை எற்படுத்துவதேயாகும்.

**(ஆ) நோர்வே ஜிஎஸ்பி செயல்திட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் 2013 ஆகஸ்ட் 8 ஆம் திகதி**

வர்த்தக திணைக்களமானது இலங்கை வர்த்தக மன்றத்தின் அனுகுமுறையிலான ஆதரவுடன் புதிய நோர்வே ஜீஎஸ்பி திட்டத்தின் கீழ் நோர்வேக்கான ஏற்றுமதிகளை விரிவாக்குவதற்கான உள்ளார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமொன்றினை 50 பங்குபற்றாளர்களின் பங்குபற்றுதலுடன் ஏற்பாடு செய்திருந்தது.

**இலங்கையளினைத் தளமாக கொண்டுள்ள தொழில்முயற்சியாளர்களுக்கான வதிவிட விசாக்களை வழங்குதல் மற்றும் புதுப்பித்தலுக்கான பரிந்துரை**

2013ஆம் ஆண்டு திணைக்களம் 204 விசா சிபாரிசுகளை வழங்கியது.

**முதலாவது இலங்கை - செக் பொருளாதார மன்றம் 2013**

முதலாவது இலங்கை - செக் பொருளாதார மன்றமானது செக் குடியரசின் பிரேக்கில் ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஸ அவர்கள் அரசாங்க அதிகாரிகள் மற்றும் 40 இலங்கை கம்பனிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட கொண்ட தூதுக்குழுவுக்கு தலைமை வகித்தார். இத்தகைய வியாபார ஒத்துழைப்பு நிகழ்வில் ஏறக்குறைய 160 செக் கம்பனிகள் பங்குபற்றியிருந்தன. வர்த்தக திணைக்களமானது வியாபார தூதுதுக்குழுக்களை ஏற்பாடு செய்தல் மற்றும் ஒழுங்கமைத்தலுக்கு அப்பால் தள வேலைகள் தொடர்பான அனைத்து விடங்களையும் கையாண்டுள்ளது.

**கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ ரிசாட் பதியுதீன் அவர்களின் ஈராக்குக்கான விஜயம் – 2013, பெப்ரவரி 19 – 23**

வர்த்தக திணைக்களமானது கௌரவ கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரின் ஈராக்குக்கான விஜயத்தினை ஏற்பாடு செய்திருந்தது. இரண்டு தரப்பும் இலங்கையினால் ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் தரக் கட்டுப்பாட்டு விடயங்கள் உள்ளடங்கலான இலங்கை மற்றும் ஈராக்குக்கு இடையிலான இருதரப்பு வர்த்தகத்தினை விரிவாக்குவதற்கு தேவையான புதிய வழிகளைக் கண்டறிவது குறித்து கலந்துரையடியுள்ளன.

**துருக்கி, இஸ்மிரில் 2013 ஆகஸ்ட் 29 ஆம் திகதியலிருந்து செப்ரெம்பர் 02 ஆம் திகதி வரையில் நடாத்தப்பட்ட 82 ஆவது இஸ்மிர் சர்வதேச வர்த்தக சந்தையில் இலங்கையின் பங்குபற்றல்**

வர்த்தக திணைக்களமானது, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ.ரிசாட் பதியுதீன் அவர்களின் தலைமையிலான இலங்கைத் தூதுக்குழு 82 ஆவது இஸ்மிர் சர்வதேச வர்த்தக சந்தையில் பங்குபற்றுவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

**2013, ஜீன் 06 ஆம் திகதியலிருந்து 10 ஆம் திகதி வரையில் சீனா, குன்மிங்கில் இடம்பெற்ற முதலாவது தென்னாசிய எக்ஸ்போவில் இலங்கையின் பங்கேற்பு**

இலங்கையின் பிரதம மந்திரி மாண்புமிகு டி.எம்.ஜயரத்ன அவர்கள் 2013 ஜீன் 06 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரையில் குன்மிங்கில் நடாத்தப்பட்ட முதலாவது சீன தென்னாசிய எக்ஸ்போவிற்கு இலங்கையிலிருந்து சென்ற 120 ஏற்றுமதியாளர்களைக் கொண்ட தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கினார்.

பிரதம மந்திரி எக்ஸ்போ திறப்பு விழா வைபவத்தில் சிறப்புரையாற்றினார். சீனாவுக்கான இலங்கைத் தூதுவர், பிரதம மந்திரியின் செயலாளர், கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரின் செயலாளர், வர்த்தக பணிப்பாளர் நாயகம்

ஆகியோரும் இச்சிறப்பு சநிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்கள்.

இலங்கை ஏற்றுமதி சபையுடன் கூட்டுச்சேர்ந்து பெஜ்ஜிங்கிலுள்ள தூதரகம் எக்ஸ்பொவில் இலங்கை பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தது. இலங்கையின் தூதுக்குழுவானது இரத்தினக்கற்களும் ஆபரணங்களும், தேயிலை, பற்றிக், கைப்பணிப் பொருட்கள், பீங்கான் உற்பத்திகள், தும்பு உற்பத்திகள், ஆயுர்வேத உற்பத்திகள் மற்றும் பரிசுப் பொருட்கள் போன்ற உற்பத்தி துறைகளிலிருந்தான 120 இலங்கை கம்பனிகளினைக் கொண்டிருந்தது. இது சீனாவில் இடம்பெற்ற கண்காட்சியில் இலங்கையினால் கலந்து கொண்ட மிகப்பெரிய பங்கேற்பாகும். அத்துடன், பெறுமதிவாய்ந்த வர்த்தக தொடர்புகளையும் உடன் விற்பனைகளையும் வெற்றிகரமாக பாதுகாக்கக்கூடியதாகவும் அமைந்திருந்தது. மாண்புமிகு இலங்கை பிரதம மந்திரியும் உத்தியோகபூர்வ துதுக்குழுவும் சீனாவின் துணை பிரதம மந்திரியான , மா காய் மற்றும் ஜுன்னான் மாகாண ஆளுநர் லீ ஜிஹெங் ஆகியோருடனும் உத்தியோகபூர்வ சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தனர்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் செயலாளர், சீன – தென்னாசிய வர்த்தக மன்றத்தில் சிறப்புரையாற்றியுள்ளார். ஊஊீஜவு இன் ஜுன்னான் உப பேரவையின் அதிகாரிகளுடனுடனும் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தார். வர்த்தக பணிப்பாளர் நாயகமும் சீன – தென்னாசிய சிரேஸ்ட பொருளாதார மற்றும் வர்த்தக அதிகாரிகளுடனான சந்திப்புகளில் கலந்து கொண்டிருந்தார்.

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் செயலாளர் சீன – தெற்காசிய வியாபார மன்றத்தில் உரையொன்றை நிகழ்த்தினார். அத்துடன் CCPIT யின் உப கவுன்சிலான யுனான் உப கவுன்சில் அங்கத்தவர்களுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டார். வர்த்தகப் பணிப்பாளர் தெற்காசிய சிரேஸ்ட பொருளாதார மற்றும் வர்த்தக அலுவர்களின் கூட்டத்தில் பங்குபற்றினார்.

**“இலங்கையின் பிரதிபலிப்பு” எனும் சர்வதேச வியாபார, சுற்றுலா மற்றும் முதலீட்டுக் கண்காட்சி 2013 நவம்பர் 13 – 17**

தூதரகங்களின் வர்த்தகப் பிரிவுகள் ‘இலங்கையின் பிரதிபலிப்பு’ கண்காட்சி தொடர்பான உச்சளவு பிரபல்யப்படுத்தலை தங்கள் நாடுகளில் மேற்கொண்டன. பங்குபற்றிய வியாபார வல்லுனர்கள் கண்காட்சியில் ஒழுங்குசெய்யப்பட்ட செயற்பாடுகள் மற்றும் இலங்கையில் வியாபாரத்தை மேற்கொள்வதற்கான விருப்பு தொடர்பாக தங்கள் விருப்பத்தினை வெளிப்படுத்தினர்.

**கடல் கடந்த வர்த்தக பிரதிநிதித்துவம்**

திணைக்களமானது, “மஹிந்த சிந்தனை – எதிர்கால நோக்கு” எண்ணக்கருவிற்கிணங்க “பொது – தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தின்” கீழ் வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரகங்களினூடாக சர்வதேச சந்தைக்கு இலங்கை கம்பனிகளை அறிமுகம் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களைப் பொறுத்தவரையில் அவை ஒரு சிலவற்றினை மட்டுமே கருத்தில் கொள்வதால், வர்த்தக திணைக்களமானது, வெளிநாட்டு தூதரகங்களிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்கள் மற்றும் இலங்கையிலுள்ள வியாபார அதரவு நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் சர்வதேச சந்ரகளுக்கான இலங்கையின் எற்றுமதிகளை விரிவாக்குவதற்கும் பல்வகைப்படுத்துவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளினை எடுத்துள்ளது. புதிய ஏற்றுமதி தளங்களின் அறிமுகப்படுத்தலினூடாக சர்வதேச சந்தையில் அவற்றின் சந்தைப் பங்கினை விரிவாக்குவதில் முன்னணி ஏற்றுமதியாளர்கள் கவனம் செலுத்தும் அதேவேளையில் தற்போதிருக்கும் சந்தைகளில் இயல்பான நிலைகளை தோற்றுவிப்பதிலும் அக்கறை செலுத்துகின்றன. வர்த்தக உத்தியோகத்தர்கள் சிறிய மற்றும் நடுத்தரளவிலான ஏற்றுமதியாளர்களுக்கு அவர்களின் ஏற்றுமதிப் பொருட்களுக்கு குறிப்பாக தனியார் – பொது பங்குடமை நிகழ்ச்சித்திட்டதினூடாக வெளிநாட்டு சந்தைகளைப் பெற்றுக் கொடுப்பதில் தொடர்ந்தும் உதவியளித்து வருகின்றனர்.

வெளிநாடுகளிலுள்ள வர்த்தக உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட்ட பிரதான

தொழிற்பாடுகள் பின்வருவனவந்நினை உள்ளடக்குகின்றன

- இலங்கை உற்பத்திகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புக்களை இனங்காண்பதற்கான சந்தை மதிப்பாய்வுகள்/நுண்ணய்வுகளை நடாத்துதல்

- உதவி வழங்கும் நாட்டின் வர்த்தக கொள்கை மாற்றங்கள் விசேடமாக வரி மற்றும் வரியல்லா நடவடிக்கைகள் தொடர்பில் கண்காணித்தலும் அறிக்கையிடலும்.

- முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச வர்த்தக கண்காட்சிகள் /நிகழ்வுகளில் இலங்கையின் பங்குபற்றுதலினை ஏற்பாடு செய்தல். இப்பணியானது இலங்கையின் ஏற்றுமதிகளை மேம்படுத்துவதில் அதிக பயனுறுதி வாய்ந்த நடவடிக்கைகளில் ஒன்றாக கருதப்படுகின்றது.

- இலங்கையில் நடைபெறும் கண்காட்சிகள்/நிகழ்வுகளில் வெளிநாட்டு வியாபார தூதுக்குழுக்களை பங்குபற்றுவதற்கு ஏற்பாடு செய்தல்

- அனுசரணை வழங்கும் நாடுகளில் இலங்கை தொடர்பான விசேட ஊக்குவிப்பு பிரச்சாரங்களை அரங்கேற்றுதல்.

- வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலா தூதுக்குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான எற்பாடுகளையும் வியாபார வாய்ப்புக்களை கண்டறிவதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுதல்.

- வியாபார வாய்ப்புக்களை கண்டறிவதற்கு இலங்கையிலிருந்தும் இலங்கைக்குமான தனிநபர் வியாபார விஜயங்களை ஏற்பாடு செய்தல்

- அனுசரணை நாடுகளிலுள்ள வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலா துறை ஆகியவற்றுடன் தொடர்புடைய அதிகாரிகளுடன் வலையமைப்பினை ஏற்படுத்துதல் மற்றும் இலங்கையின் வர்த்தக மற்றும் பொருளாதார நலன்களுடன் தொடர்புடைய பிரச்சனைகள் மற்றும் விடயங்கள் தொடர்பில் பல்வேறுபட்ட அரசாங்க மற்றும் சர்வதேச நிறுவனங்களினை பிரதிநிதித்துவப்படுத்துதல்.

- - வெளிநாட்டு வியாபாரத்திற்கான வர்த்தக, முதலீடு மற்றும் சுற்றுலாவுடன் தொடர்புடைய விசாரணைகளுக்காக விளக்கமளித்தல் வெளிநாட்டு வர்த்தகர்களுடன் விஜயங்கள் மற்றும் கூட்டங்களை எற்பாடு செய்தல், வர்த்தக பிணக்குகளை தீர்த்தல் மற்றும் இலங்கையின் ஏற்றுமதியாளர்களுக்கான தொழில்நுட்ப உதவுகையினை வழங்குதல் போன்றன.

**பேச்சுவார்த்தைகள் மற்றும் விஜயங்களின் எண்ணிக்கை**

| செயற்பாடுகள் | Number of exhibitions/ delegations | Number of participants / delegates |
|---|---|---|
| வெளிநாடுகளில் நடைபெற்ற கண்காட்சிகள்/ நிகழ்வுகளில் இலங்கை பங்குபற்றுவதற்கு ஒழுங்குசெய்தல் /உதவுதல் | 242 | 2,813 |
| இலங்கையில் நடைபெற்ற நிகழ்வுகளில் வெளிநாட்டவர்கள் பங்குபற்றுவதற்கு ஒழுங்குசெய்தல் /உதவுதல் | 100 | 604 |
| இலங்கையின் இல் வெளிநாட்டு வியாபார வருகையாளர்கள் பங்குபற்றுவதற்கு ஒழுங்குசெய்தல் | 1 | 1,160 |
| ஆதன் ராஜதந்திர நாடுகளில் இலங்கையின் குறித்துரைக்கப்பட்ட ஊக்குவிப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல். | 460 | - |
| வெளிநாட்டு வியாபார பங்களிப்புகளை இலங்கைக்கு பெற்றுத்தருவதற்கு ஒழுங்குசெய்தல் | 234 | 1,702 |
| இலங்கையின் வியாபார பங்களிப்புகளை வெளிநாடுகளுக்கு பெற்றுத்தருவதற்கு ஒழுங்குசெய்தல் | 215 | 1,899 |
| தனிப்பட்ட இலங்கையர்கள் வியாபார விஜயங்களை வெளிநாடுகளுக்கு செல்லுவதற்கு உதவல் | - | 687 |
| தனிப்பட்ட வெளிநாட்டவர்கள் வியாபார விஜயங்களை இலங்கைக்கு செல்லுவதற்கு உதவல் | - | 751 |

*மூலம் - வணிகத் திணைக்களம்*

# கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

**அறிமுகம**

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம், தனியான திணைக்களமாக்கப்பட்டு 61 வருடங்களைத் தாண்டி கம்பனிகளை பதிவுசெய்தல் உள்ளிட்ட அதன் நாடு தழுவிய சேவையை 1861 ஆம் ஆண்டு தொடக்கம் கம்பனிகள் தொடர்பான கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வழங்கிவருகின்றது. திணைக்களத் தலைவர் என்ற வகையில் கம்பனிகள் பதிவாளர் அதிபதி, கம்பனிகள் சட்டத்தின் தத்துவங்களையும் ஏனைய சட்டங்களையும் உருவாக்குவதற்கும் மேற்பார்வை செய்வதற்குமான தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

**சங்கங்கள் கட்டளைச் சட்டம் - அத்தியாயம் 123**

இலங்கையில், கட்டளைச் சட்டத்தின் 123ம் அத்தியாயம் சங்கங்களைப் பதிவுசெய்தல் மற்றும் நாட்டிலுள்ள சங்கங்களைப் பதிவுசெய்வதற்கான விதிமுறைகளை வழங்குகின்றது. அதன் கீழ் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் பதிவுசெய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை 12,120 ஆகும்.

- **1935 ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க சீட்டுக் கட்டளைச் சட்டம்**

சீட்டுக் கட்டளைச் சட்டம், சீட்டுகளைப் பதிவுசெய்தல் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கான ஏற்பாடுகளை வழங்குகின்றது.

- **1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டம்**

1987 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இச்சட்டத்தின் நோக்கமானது, ரூபா 5 மில்லியனை விஞ்சுகின்ற ஒரு பொது ஒப்பந்தத்திற்கான ஏதேனும் வழங்குனரின் முகவர்கள், துணை முகவர்கள், பிரதிநிதிகள் அல்லது நியமனம் பெற்றவர்களாக செயற்படுகின்ற நபர்களை பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளை வழங்குகின்றது. 2013 ஜனவரி 01 திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை 4,455 பொது ஒப்பந்த விண்ணப்பங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

**பிரிவுகளும் அவற்றின் செயற்பாடுகளும்**


**தகவல் பிரிவு**

பதிவுசெய்வதற்காக அல்லது வேறு நோக்கங்களுக்காக கம்பனிகளால் அனுப்பப்படுகின்ற அனைத்து ஆவணங்கள் மற்றும் விடயங்களும், அவை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பாக, முதலாவதாக திணைக்கள உத்தியோகத்தர்களால் நுணுக்கமாக பரிசீலிக்கப்படும். இந்நடவடிக்கை முறையானது, அவசியமற்ற தொடர்பாடல், தாமதம் மற்றும் முறையற்ற ஒழுங்கில் ஆவணங்கள் கோப்பிடப்படுதன் மூலம் ஏற்படுகின்ற அசௌகரியங்களை குறைக்க உதவியாக அமைகின்றது. அத்துடன் பதிவு செயன்முறையை விரைவாக மேற்கொள்ளவும் குறிப்பாக உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஆவணங்களை விரைவாக வழங்குவதற்கு உதவியாக அமைகின்றது. இப்பிரிவு 3 அனுபவம்வாய்ந்த உத்தியோகத்தர்களால் நிருவகிக்கப்படுகின்றது.

- **பெயர்கள் அங்கீகாரமளித்தலும் புதிய கம்பனிகளை கூட்டிணைத்தலும்**

எப்போதும் முன்னுரிமையளிக்கப்பட்டு மேற்கொள்ளப்படுகின்ற ஒரு செயன்முறையாகும். நேரடியாக கம்பனிகள் பதிவாளர் அதிபதியுடன் தொடர்புபடுகின்ற, மிக அனுபவம்வாய்ந்த இரண்டு உத்தியோகத்தர்களே, கம்பனிப் பெயர்களின் இலக்கங்களை தேடல் மற்றும் புதிய கம்பனிகளை கூட்டிணைப்பதற்கான ஆவணங்களை பரீட்சித்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக பணியாற்றுகின்றனர். ஒரு கம்பனிப் பெயர் சாதாரணமாக, விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு மறு தினம் அதற்கான அங்கீகாரம் வழங்கப்படுவதுடன், கூட்டிணைத்தல் தொடர்பில், ஆவணங்கள் கிடைக்கப்பெற்று மறு தினம் அதற்கான சான்றிதழ் வழங்கப்படுகின்றது. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட புதிய கம்பனிகளின் எண்ணிக்கை 2013 டிசம்பர் 31 ஆம் திகதியில் 39,125 ஆகும்.

**2007 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்**




| | Jan | Feb | mar | Apr | May | Jun | Jul | Aug | Sep | Oct | Nov | Dec |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2007 | | | | | 105 | 444 | 576 | 397 | 340 | 351 | 380 | 370 |
| 2008 | 395 | 436 | 460 | 378 | 334 | 399 | 397 | 342 | 395 | 332 | 354 | 310 |
| 2009 | 316 | 252 | 346 | 273 | 270 | 374 | 421 | 365 | 416 | 389 | 436 | 365 |
| 2010 | 357 | 436 | 523 | 334 | 394 | 470 | 595 | 576 | 585 | 630 | 625 | 816 |
| 2011 | 668 | 737 | 798 | 520 | 541 | 694 | 680 | 666 | 689 | 616 | 618 | 678 |
| 2012 | 685 | 616 | 682 | 469 | 619 | 567 | 563 | 645 | 547 | 629 | 532 | 630 |
| 2013 | 540 | 471 | 497 | 482 | 503 | 522 | 540 | 440 | 438 | 562 | 495 | 482 |

- **பதிவுசெய்தல் பிரிவு**

ஒவ்வொரு பிரிவும் ஒரு உதவிக் கம்பனிப் பதிவாளரின் பொறுப்பின் கீழ் 4 பிரிவுகள், 15 அபிவிருத்தி அவுலர்கள் மற்றும் 25 பொது முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர்களினால் நிருவகிக்கப்படுகின்றன. இப்பிரிவு பதிவுசெய்தல் மற்றும் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்கள் என்பன சாட்டப்பட்ட கடமைகளாகும். திணைக்களத்தின் பணிகளில் பெரும் பகுதி இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

- **முடிவுறுத்தல் பிரிவு**

கம்பனிகளை முடிவுறுத்துவது முக்கியமான விடயம் என்றவகையில், ஒரு உதவிப் பதிவாளரின் மேற்பார்வையின் கீழ் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ளது. தற்போது 642 கம்பனிகளின் முடிவுறுத்தல் செயன்முறை நடைபெறுவதுடன், 2013 டிசம்பர் 31 வரை 471 கம்பனிகள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருப்பதன் காரணமாக, பதிவேட்டிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது

**2013 சனவரி 01 ஆம் திகதி முதல் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் கம்பனிகள் களைத்தலும் முடிவுறுத்தலும்**

| | | |
|---|---|---|
| அங்கத்தவர்கள் தன்னார்வத்தில் முடிவுறுத்தல் | -- | 45 |
| கடன் கொடுத்தோர் தன்னார்வத்தில் முடிவுறுத்தல் | -- | 15 |
| நீதிமன்றத்தின் மூலம் ஒடுக்கல் | -- | 05 |
| சட்டத்தின் 394 ஆம் பிரிவின் கீழ் நீக்கல் | -- | 565 |
| சட்டத்தின் ஒன்றிணைத்தல் (பிரிவு 245) கீழ் நீக்கல் | -- | 12 |
| **மொத்தம்** | **--** | **642** |

- **மீள் பதிசெய்யும் பிரிவு**

மீள்பதிவுச் செயன்முறை தற்போது பெரும்பாலும் முடிவடைந்துள்ளதன் காரணமாக, இப்பிரிவு தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

- **வழக்குத் தொடுத்தல் பிரிவு**

திணைக்களத்தின் வழக்குத்தொடுத்தல் நடவடிக்கைகளை 4 பரிசோதனை உத்தியோகத்தர்கள் நிரந்தர நியமனத்தினடிப்படையில் திணைக்களத்தில் மேற்கொள்கின்றனர். இச்சட்டத்திற்கு முரண்படுகின்ற கம்பனிகள் மற்றும் பணிப்பாளர்களுக்கெதிராக சட்ட நடடிவக்கைகளை மேற்கொள்ளல், பரிசோதனைகளை முன்னெடுப்பதுடன் தேவையான போது உதவிகளை, வழிகாட்டல் ஆலோசனைகளையும் வழங்குகின்றனர். ஓய்வுபெற்றமை மற்றும் பதவி விழகல் காரணமாக ஏற்பட்ட மூன்று வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2013 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட வழக்குத் தொடுத்தல் நடவடிக்கைகள் 35 ஆகும். வழக்குத் தொடுத்தல் இன்றி 1267 குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளன. தண்டப் பணத்தின் மொத்த பெறுமதி ரூபா 10,692,927 ஆகும்.

- **கணக்குகள் மற்றும் தாபனப் பிரிவுகள்**

இவ்விரு பிரிவுகளினதும் கணக்கியல் நடவடிக்கைகள் மற்றும் நிருவாக செயற்பாடுகள் என்பன முறையே கணக்காளர் மற்றும் நிருவாக உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 201. டிசம்பர் 31 ஆம் திகதியில் திணைக்களத்தின் மொத்த வருமானம் ரூபா 406.8 மில்லியனாகும். மொத்தச் செலவு ரூபா 45.3 மில்லியனாகும்.

- **முன்னுரிமைப்படுத்தல்கள்**

- **திணைக்களத்தை தன்னியக்கமயப்படுத்தல்**

கொள்வனவுக் குழுவினால் ஈ.டபில்யூ தகவல் முறைமை தனியார் நிறுவனம் மென்பொருளை உருவாக்குவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

# இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

**அறிமுகம்**

2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் இலங்கையில் தேசிய புலமைச் சொத்து முறைமையை நிருவகிப்பதற்கான ஆணையை இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம் பெறுகின்றது. 1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க புலமைச் சொத்துச் சட்டக் கோவையின் ஏற்பாடுகளின் கீழ் அதே ஆணையுடன் 1980 ஆண்டில் முதன்முதலாக உருவாக்கப்பட்டது.

**புத்தாக்கங்களுக்கான ஆக்கவுரிமைகள்**

புலமைச் சொத்து அலுவலகம், ஆக்கவுரிமைக்கான விண்ணப்பங்களை (உள்நாடு, வெளிநாடு) நன்கு பரிசீலனை செய்து தகுதியான புத்தாக்கங்களுக்கு ஆக்கவுரிமைக் காப்புகளை வழங்குகின்றது. ஆக்கவுரிமை வழங்கப்பட்டதும், அலுவலகமானது, புதுப்பித்தல், ஆவண ஒப்படைப்புகள், உத்தரவுபெற்ற ஒப்பந்தங்கள் உள்ளிட்ட பதிவின் பின்னரான பல்வேறு நடவடிக்கைகளை நிருவகிக்கின்றது. மேலும் விஞ்ஞான மற்றும் வர்த்தக சமூகங்கள், ஆர் ரூ டீ நிறுவனங்கள் ,கைத்தொழில் நிறுவனங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்டோர் பயன்படுத்துவதற்காக ஆக்கவுரிமை மற்றும் தொழில்நுட்ப தகவல்களை (தேசிய , சர்வதேச) சேகரிப்பதும் பரப்புவதும் அதன் பொறுப்பாகும். *குறித்த காலப்பகுதிக்குள்* கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் அக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு

**புத்தாக்கங்களுக்கான விண்ணப்பங்கள் - 2013**

| செயற்பாடுகள் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் | பூரணப்படுத்தப் பட்டவை |
|---|---|---|
| விண்ணப்பங்கள் | 516 | 236 |
| கிடைக்கப்பெற்றமைக் கான அறிவித்தல்கள் | - | 656 |
| ஆரம்பத் தேடல்கள் | - | 17 |
| திருத்தங்கள் | - | 152 |
| தேடுதல்கள் மற்றும் பரீசோதனை அறிக்கைகள் | - | 52 |
| வர்த்தமானி அறிவித்தல்கள் | 550 | 1,002 |
| அதனோடு இணைந்த வேலை ஆவணங்கள் | - | 2,048 |
| செல்லுபடியாக்கல்கள் மற்றும் நாணவிதப் பணிகள் | 09 | 15 |
| மதிப்பீடுகள் | 06 | 06 |
| மதிப்பீடுகள் மற்றும் முகவரி மாற்றம் | 518 | 472 |
| புதுப்பித்தல்கள் | 17 | 51 |

**வியாபாரச் சின்னங்கள்**

அலுவலகம், விண்ணப்பிக்கப்பட்ட குறிகளின் - வியாபாரக் குறிகள், சேவைக் குறிகள், கூட்டுக் குறிகள், சான்றிதழ் குறிகள் - தன்மை, உள்ளடக்கம் மற்றும் சட்டநிலை என்பவற்றை நன்கு பரிசீலனைக்குட்படுத்தி அவற்றின் தகுதிநிலை பார்த்து பதிவை வழங்குவதுடன், புதுப்பித்தல், ஆவணங்கள் ஒப்படைத்தல் மற்றும் அதிகாரம்பெற்ற ஒப்பந்தங்கள் உள்ளிட்ட பதிவின் பின்பான நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்தும். அத்துடன் சின்னங்கள் தொடர்பான தகவல்களை சேகரித்தல் மற்றும் பரப்புதலும் அதன் பணியாகும்

| செயற்பாடுகள் | 2013 பூரணப்படுத்தப்பட்ட பணிகள் |
|---|---|
| வியன்னா வகைப்படுத்தல் | 4,810 |
| பரீட்சித்துப் பார்தல் மற்றும் தேடுதல் அறிக்கைகள் | 20,289 |
| வியாபாரக் குறியீடுகளை வெளியிடுதல் தொடர்பான நடவடிக்கைகள் | 2,656 |
| வர்த்தமானி அறிவித்தல்களைத் தயாரித்தல் | 2,380 |
| வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுதல் | 2,169 |
| பதிவுக்கு அனுப்பப்பட்டவை | 1,459 |
| பதிவுச் சான்றிதழை வழங்குதல் | 1,487 |
| புதுப்பித்தல் சான்றிதழ்கள் | 1,458 |
| ஒருபக்க விசாரணைகள் | 522 |
| எதிர் விசாரணைகள் | 23 |
| கைவிடப்பட்டவை | 4,159 |
| வெளியீடுகள் | 38,800 |
| மதிப்பீடுகள் மற்றும் முகவரி மாற்றம் | 3,675 |

**வியாபாரச் சின்னக் கோரிக்கைகள் - 2013**

**ஏனைய ஆவணங்கள் – 2013**

| | Type of Document | Applications / Documents Received | Number of Completed Applications |
|---|---|---|---|
| 01. | விண்ணப்பங்கள் | 8,825 | 20,289 |
| 02. | வர்த்தமானி அறிவித்தல்களுக்கான கொடுப்பனவுகள் | 3,257 | 2,656 |
| 03. | பதிவுகளுக்கான கொடுப்பனவுகள் | 2,052 | 1,487 |
| 04. | புதுப்பித்தல்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் | 1,993 | 1,458 |
| 05. | மதிப்பீடுகள் மற்றும் முகவரி மாற்றம் | 757 | 3,657 |

**கைத்தொழில் வடிவமைப்புகள்**

கைத்தொழில் வடிவமைப்புகளுக்கான விண்ணப்பங்களை அலுவலகம் நன்கு பரிசீலனை செய்து தகுதி பெற்ற விண்ணப்பங்களை பதிவு செய்வதுடன் புதுப்பித்தல், ஆவண ஒப்படைத்தல், உத்தரவு பெற்ற ஒப்பந்தங்கள் உள்ளிட்ட பதிவின் பின்னரான செயற்பாடுகளிலும் ஈடுபடும். கைத்தொழில் வடிவமைப்புகள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதிலும் அவற்றை பரப்புவதிலும் அலுவலகம் ஈடுபடும்.

**கைத்தொழில் வடிவமைப்புகள் 2013**

| செயற்பாடுகள் | 2013 | |
|---|---|---|
| | கிடைத்த விண்ணப்பங்கள் | பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் |
| விண்ணப்பங்கள் | 346 | 130 |
| கிடைக்கப்பெற்றமைக்கான அறிவித்தல்கள் | - | 229 |
| ஆரம்பத் தேடல்கள் | - | 361 |
| தேடுதல் அறிக்கைகள் ( கண்டுபிடிப்புகளுடன்) | - | 497 |
| தேடுதல் அறிக்கைகள் ( கண்டுபிடிப்புகள் நிராகரிக்கப்பட்டவை) | - | 177 |
| பதிவுசெய்தல் கட்டணத்திற்கான அழைப்பு | - | 419 |
| வர்த்தமானி அறிவித்தல்கள் | 445 | 459 |
| அதனோடு இணைந்த வேலை ஆவணங்கள் | 419 | 696 |
| செல்லுபடியாக்கல்கள் மற்றும் நாணவிதப் பணிகள் | - | 1,627 |
| மதிப்பீடுகள் | 01 | 01 |
| புதுப்பித்தல்கள் | 95 | 140 |
| ஆவணப்பிரதிகள் | 14 | 14 |

**பதிப்புரிமையும் அது தொடர்பான உரிமைகளும்**

அலுவலகம் பதிப்புரிமை மற்றும் அது தொடர்பான உரிமைகளை பாதுகாப்பதனை ஊக்குவிக்கின்றதுடன் உரிமைகள் பாதுகாக்கப்பட்டவர்களால் முன்வைக்கப்படுகின்ற பிணக்குகளை தீர்ப்பதில் கவனம் செலுத்துகின்றது. பிணக்குகளைத் தீர்ப்பதற்கான 04 வேண்டுதல்கள் கிடைக்கப்பெற்றதுடன் அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

**உட்கட்டமைப்பு மேம்படுத்தல்**

புலமைச் சொத்து நிருவாகமுறைமையை தன்னியக்க முறைமைக்கு மாற்றுவது பிரதான செயற்பாடாகும். இம்முறைமையானது தற்போது வியாபாரச் சின்னங்கள், ஆக்கவுரிமைகள் மற்றும் கைத்தொழில் வடிவமைப்புகள் தொடர்பான நடவடிக்கைகள் இம்முறையினூடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. காசு கொடுக்கல் வாங்கல் கருமபீடத்திற்கு கணணி முறைமையை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அலுவலகப் பணிக்காக அலுவர்களுக்கு மின் அஞ்சல் முகவரி வழங்கப்பட்டுள்ளது.

**விழிப்பூட்டலை வலுவூட்டலும் ஆற்றலைக் கட்டியெழுப்பலும்**

புலமைச் சொத்து பயன்பாட்டாளர்கள் மற்றும் உரிமையாளர்கள் இரு தரப்பினரிதும் நலன்கருதி புலமைச் சொத்து தொடர்பான பொது மக்களின் விழிப்பூட்டலை மேம்படுத்துவது தொடர்ந்தேர்ச்சையான கவனத்தைப் பெற்று இருக்கின்றது. புலமைச் சொத்து அலுவலகம் அரச துறை மற்றும் தனியார் துறை இரு துறையிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பல்வேறு குழுக்களுக்கு கருத்தரங்குகள் போன்ற 07 நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தது அல்லது செயற்படு பங்களிப்பை வழங்கியது. கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு, ஏற்றுமதி விவசாய அமைச்சு, இலங்கை நீதிபதிகள் அமைப்பு, வெளிவிவகார அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், சட்ட வரைஞர் திணைக்களம், அட்டனரி ஜனரால் திணைக்களம், தேசிய இரத்திரனக்கல் மற்றும் ஆபரணச் சபை, இலங்கை வர்த்தக சம்மேளனம்,விவசாயத்துறை அமைச்சு, சிறு ஏற்றுமதிப் பயிர் ஊக்குவிப்புத் திணைக்களம், இலங்கை வாசனைத் திரவியங்கள் சபை, இலங்கை கஜு கூட்டுத்தாபனம், இலங்கை சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் சம்மேளனம் மற்றும்

தனியார் துறையைச் சோ்ந்த பல்வேறுபட்ட நிறுவனங்கள் என்பன பயன்பெறும் நிறுவனங்களாகும் பணியிடத்தில் பயிற்சி எப்போதும் ஊக்குவிக்கப்படுவதுடன், இத்திணைக்களத்தின் 15 அலுவலர்களுக்கும் வெளித்திணைக்களத்தை சேர்ந்த 10 அலுவலர்களுக்கும் வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் வெளிநாட்டு கூட்டங்களில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது..

**புதிய சட்டங்கள் உருவாக்கம்**

புதிய தாவர இன வகைகளை (புதிய தாவர இன விருத்தி செய்பவர்களின் உரிமைகள்) பாதுகாப்பதனை நோக்கக் கொண்டு சாத்தியமான ஒரு சட்டத்தினை உருவாக்குவதற்காக, எங்களால் தயாரிக்கப்பட்டு, கமத்தொழில் அமைச்சும் புலமைச் சொத்து அமைச்சும் இணைந்து பரீட்சித்த செயல் ஆவணம் பூர்த்தியடைந்துள்ளதுடன் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பதிப்புரிமைகள் உறுதிப்படுத்த தன்னார்வப் பதிவு , பூலோகக் காட்டிகளைப் பதிவுசெய்தல் மற்றும் பாரம்பரிய அறிவினைப் பாதுகாப்பது தொடர்பான சட்ட வரைபிகை மேற்கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**சர்வதேச உறவுகள்**

உலக புலமைச் சொத்துக்கள் அமைப்புடனும் ஜப்பான் பதிப்புரிமைக் காரியாலயம், கொரியா சர்வதேச புலமைச்சொத்துக்கள் பயிற்சி நிறுவனம், சுவீடன் அரசாங்கம் போன்ற ஏனைய நாடுகளின் புலமைச் சொத்து அலுவலகங்களுடன், உள்நாட்டு புலமைச் சொத்து முறைமையை மேம்படுத்தும் நோக்கில் நெருக்கமான உறவைப் பேணப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் சர்வதேச புலமைச் சொத்து நிறுவனங்களின் உதவியுடன் இலங்கையில் புலமைச் சொத்து தொடர்பான அறிவினை ஊக்குவிக்கவும் ஒருங்கிணைப்பதற்காகவும் அமுல்படுத்தப்பட்டது.

**தகவல் மற்றும் ஆலோசனை சேவை**

தொழில் முயற்சிகள், கைத்தொழில்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்பாளர்கள் தொடர்பில் அவற்றின் பாவனைக்கான புலமைச் சொத்தின் அனைத்து பிரிவுகள் தொடர்பான தகவல்களை அலுவலகம் சேகரித்து, பேணி வருவதோடு அவைகளை பரப்பியும் வருகின்றது. நிபுணத்துவ ஆலோசனை சேவைகள் வேண்டுகோளுக்கிணங்க, கண்டுபிடிப்பாளர்கள், கைத்தொழில்கள், கலை இலக்கிய படைப்பாளர்கள்,ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் என்பவற்றுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். முழுமையாக பயன்படுத்தக் கூடிய வகையிலான வெப்தளம் (www.nipo.gov.lk) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த 'தகவல்கள்' எனும் தலைப்பின் கீழ் பொது மக்கள் இந்த நிகழ்ச்சிதிட்டம் தொடர்பாக அறிநிதுகொள்வதற்கு தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தை தொடர்புகொள்ள முடியும். இந்த நிகழ்சிகளை பங்குபற்ற விரும்புவர்களின் விண்ணப்பங்கள் மின்னஞ்சல் ஊடாக கோரப்படுகின்றா். இந்த தகவல் மேசை அதன் தொழிற்பாட்டின் மூலம் மிக விரைவாக தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்து. இவ்வருடத்தினுள் 8703 பொது மக்கள் தேட்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 9893 நபர்களுக்கு ஆலோசகை சேவைகள் வழங்கப்பட்டுள்ளது.

**அரசாங்க மற்றும் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களுடனான கூட்டு**

இக்காரியாலயம், பல்வேறுபட்ட அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கயுக்கு, புலமைச் சொத்துக்கள் தொடர்பாக உதவிகளை வழங்கியது. கைத்தொழில் மற்றம் வணிக அமைச்சு, ஏற்றுமதி விவசாய அமைச்சு, இலங்கை நீதிபதிகள் அமைப்பு, வெளிவிவகார அமைச்சு, குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், சட்ட வரைஞர் திணைக்களம், அட்டனரி ஜனரால் திணைக்களம், தேசிய இரத்திரனக்கல் மற்றும் ஆபரணச் சபை, இலங்கை வர்த்தக சம்மேளனம், விவசாயத்துறை அமைச்சு, சிறு ஏற்றுமதிப் பயிர் ஊக்குவிப்புத் திணைக்களம், இலங்கை வாசனைத் திரவியங்கள் சபை, இலங்கை கஜூ கூட்டுத்தாபனம், இலங்கை சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் சம்மேளனம் மற்றும் தனியார்துறையைச் சேர்ந்த பல்வேறு நிறுவனங்கள் இச்செயற்பாட்டில் பங்குபற்றின

புலமைச் சொத்து முகவர்கள்

24 முகவர்களின் பதிவுகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 18 புதிய முகவர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

**நிதி நடவடிக்கைகள்**

இத்திணைக்களம் கட்டணங்களை அறிவிடுவதன் மூலம் வருமானம் ஈட்டும் ஒரு திணைக்களமாகும். அத்துடன் புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட புலமைச் சொத்து நிதியத்தினை நிருவகித்து வருகின்றது. வழங்கப்பட்ட சேவைகளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் பின்வருமாறு.

**வருமானம்**

| 2012 | 2013 |
|---|---|
| ருபா. 78,384,984.24 | ருபா 78,176,424.13 |

*மூலம்– NIPO 2013*

# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

### 2013 டிசம்பர் 31 வரையிலான முன்னேற்றம் ஏற்றுமதி செயற்பாடுகள்

புள்ளிவிபரத் தரவுகளின் படி, இலங்கையின் ஏற்றுமதி வருமானம் வீதத்தனால் 6.27 % அதிகரித்ததுடன் வருமானம் 10.38 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்தது. இதே காலப்பகுதியில் சென்ற 2012ம் ஆண்டு வருமானம் ரூபா 9.77 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். 2013ஆம் ஆண்டு டிசம்பர் மாத ஏற்றுமதி வருமானம் கடந்த வருட டிசம்பர் மாதத்தைக் காட்டிலும் 25.16% வீதத்தினால் அதிகரித்திருந்தது. 2013 ஜனவரி – டிசம்பர் மாதம் வரையிலான செயற்பாடுகளை நோக்கினால், விவசாயம், மீன்பிடி மற்றும் கைத்தொழில் துறை முறையே 24%, 2.3% மற்றும் 73% வீத பங்களிப்பினை வழங்கியுள்ளதுடன் இது முறையே 10.3%, 4.61% மற்றும் 19.14% என நேர்கணிய வளர்ச்சியைக் காட்டியது.

2013 ஜனவரியிலிருந்து ஒகஸ்ட் மாதம் வரையிலான ஏற்றுமதி வருமானம் தொடர்பாக, கடந்த ஆண்டு இதே காலப்பகுதியோடு ஒப்பிடுகையில் விவசாயத் துறையைச் சேர்ந்த தேயிலை [(9.22%)]; வாசனைத் திரவியங்கள் [39.87%]; மரக்கறிகள் [30.81%], பழங்கள் [118.35%], வெட்டு மலர்கள் மற்றும் அலங்கார இலைகள் [36.12%]; சாற்று எண்ணைகள் [33.47%]; வளர்ச்சியைக் காட்டிய போதிலும் இயற்கை இறப்பர் (-42.75%) மற்றும் தெங்குப் பொருட்கள் வீழ்சியைக் கொண்டிருந்தன.

மீன்பிடித்துறைக்குள் வரும் அனைத்து உபதுறைகளும் நேர்மறையான செயற்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளது. அவை அலங்கார மீன்கள் (41.35%), crustaceans (51.04%) மற்றும் உணவுக்கான மீன் (12.6%) எனும் வளர்ச்சியைக் கொண்டிருந்தது.

கைத்தொழில்துறையினுள் புடவை மற்றும் தைத்த ஆடைகள் 42.3% வீத பங்களிப்பை நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் கொண்டிருந்தன. மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் இது 13.31%. வீதத்தினால் அதிகதிருந்ததுடன் தோல் பொருட்கள் (13.98%), இறப்பர் பொருட்கள் (3.59%), உலோகமல்லாத மின்சார, மின்னிலத்திலத்திரனியல் மற்றும் பொறிகள் (5.21%), படகுக்கட்டுமானம் (44.9%), பிளாஸ்டிக் பொருட்கள் (5.7%), மற்றும் பாதணி (139.13%) என்பன கைத்தொழிற்துறைக்கு தமது நேர்கணிய பங்களிப்பை வழங்கியிருந்தன. எனினும் இரத்தினக்கல், ஆபரணம் மற்றும் வைரம் (-21.72%), உணவுப் பொருட்கள் மற்றும் குடிபானம் (-22.7%), மரம் சார்ந்த பொருட்கள்(-1.48%), காகிதம் மற்றும் காகிதப் பொருட்கள் (-19.33%), இரசாயனப் பொருட்கள் (-3.93%), போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் (-49.41%) and பெற்றோலியப் பொருட்கள் (-7.98%) மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் வீழ்சியைக் காட்டுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவிற்கான ஏற்றுமதி 4.13% மற்றும் 17.85% வீதத்தினால் 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்திருந்ததுஇ

### பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் ஆலோசனைக் குழுக்களை அமைத்தல்

ஏற்றுமதி அபிவிருத்தி சபை, 1979 ஆம் ஆண்டின்ஆம் 40 இலக்க ஏற்றுமதி அபிவிருத்தி சபைச் சட்டத்தின் கீழ் 2013 ஜுன் 11ஆந் திகதிய1814/14 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் ஊடாக 26 ஆலோசனைக் குழுக்களைத் தாபித்துள்ளது. முக்கிய உற்பத்தித் துறைகளையும் தொடர்புடைய ஏனைய விடயப் பரப்புக்களையும் உள்ளடக்கிய வகையில் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுக்களின் அங்கத்தவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கைத்தொழில், வர்த்தக அமைச்சர் கௌரவ ரி'ாத் பதியூதின் அவர்களால் 2013 ஜுலை 10 ஆந் திகதி கையளிக்கப்பட்டன.

அத்துடன், பொது நலவாய அரச தலைவர்களின் மாநாட்டுடன் இணைந்த வகையில் கண்காட்சியொன்றை நடாத்தும் பொறுப்பும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்கண்காட்சியின் குறிக்கோள் சுமார் 200-300 உள்நாட்டு ஏற்றுமதியாளர்களின் தரம்வாய்ந்த

ஏற்றுமதிப் பொருட்களை ஒரே இடத்தில் காட்சிப்படுத்துவதாகும். இக்கண்காட்சியை ஏற்பாடுசெய்வதற்கு, ஆலோசனைக் குழுக்களின் அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபை அனுசரணை வழங்கியது.

**சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

ஏற்றுமதி அபிவிருத்தி சபை மீள அமைக்கப்பட்ட சந்தைப்படுத்தல் உபாயத்தின் ஊடாக BRICS நாடுகளுக்கான ஏற்றுமதிகளை விரிவாக்குவது தொடர்பில் கவனம் செலுத்தி வருக்கின்றது. ஏற்றுமதி அபிவிருத்தி சபை, ஆபிரிக்க நாடுகளிலும், பொது நலவாய சுதந்திர அரசு நாடுகளிலும் (CIS) உள்ள சந்தை வாய்ப்புக்களைப் பயன்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது.ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள இதற்கு முன்னர் கவனத்திற் கொள்ளப்படாத துருக்கி போன்ற நாடுகளும் இதன் போது கவனத்திற் எடுக்கப்படும். உற்பத்திப் பொருட்கள் விடயத்திலும் சந்தை பல்வகைப்படுத்தல் விடயத்திலும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இத்துறையில் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்காகவும் உற்பத்திப் பொருட்களுக்கு வர்த்தகப் பெயர் குறிப்பதற்காகவும் பல்வேறுபட்ட கொள்கைச் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன.

**சந்தை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

இலங்கையின் உற்பத்திப் பொருட்களும் சேவைகளும் தற்போதுள்ள சந்தைகளிலும் புதிய மற்றும் வளர்ந்துவரும் சந்தைகளிலும் சிறப்பான சந்தை வாய்ப்பினைப் பெறுவதை உறுதிப்படுத்தும் நோக்கில், மீளாய்வுக் காலப்பகுதியில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் பின்வரும் சந்தை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இந்த மீளாய்வுக் காலப்பகுதியில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் பின்வரும் சந்தை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இந்த மீளாய்வுக் காலப்பகுதியில் பின்வரும் வர்த்தகக் கண்காட்சிகளில் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

**ஐரோப்பிய ஒன்றியப் பிராந்தியம்**:

| | |
|---|---|
| ஐரோப்பியக் கடலுணவுக் கண்காட்சி | 06 ஏற்றுமதியாளர்கள் |
| IPMEssenகண்காட்சி 2013 | 04 ஏற்றுமதியாளர்கள் |
| BIO FACH 2013 | 03 ஏற்றுமதியாளர்கள் |
| கடதாசி உலகம் 2013 | 07 கம்பனிகள் |
| CEBIT 2013 - நெதர்லாந்து | 05 ICT/ BPOகம்பனிகள் |
| லண்டன் புத்தகக் கண்காட்சி 2013 | 07 புத்தக வெளியீட்டுக் கம்பனிகள் |
| தேசிய வர்த்தகப் பெயரிடல் சர்வதேச கண்காட்சி, நெதர்லாந்து | 04 ஏற்றுமதியாளர்கள் |
| சர்வதேச உணவு மற்றும் பான நிகழ்வு – ஐக்கிய இராஜ்ஜியம் 2013- | 05 ஏற்றுமதியாளர்கள் |
| அனுகா, ஜேர்மனி | 15 ஏற்றுமதியாளர்கள் |

**அமெரிக்க வலயம் :**

| | |
|---|---|
| F&Bதயாரிப்பாளர்களுக்கான SIAL கனடா வர்த்தக் கண்காட்சி மற்றும் வெளிப்படுத்தல் | 07 ஏற்றுமதியாளர்கள் |
| IFT 2013, சிக்காகோ, ஐக்கிய அமெரிக்கா நாடு | 08 ஏற்றுமதியாளர்கள் |
| IFEAT 2013, சான் பிரான்ஸிஸ்கோ, யுஎஸ்ஏ | 04 ஏற்றுமதியாளர்கள் |
| சர்வதேச நவநாகரீக கண்காட்சி, லாஸ் வெகாஸ், யுஎஸ்ஏ | 09 ஏற்றுமதியாளர்கள் |

**ஆசிய வலயம்:**

| | |
|---|---|
| Aquarama International Fish போட்டி மற்றும் கற்கை பயண நிகழ்ச்சித்திட்டம் and Study Tour Programme | 17 ஏற்றுமதியாளர்கள் |
| இந்திய இறப்பர் r EXPO 2013 | 06 ஏற்றுமதியாளர்கள் |
| ஹோங்ஹொங் House Ware Show 2013 | 06 ஏற்றுமதியாளர்கள் |
| தொழில்நுட்ப மற்றும் சந்தை வெளிப்படுத்தல்கள் நிகழச்சித்திட்டம் - டுபாய் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் | 07 கம்பனிகள் |
| தொழில்நுட்ப வெளிப்படுத்தல்கள் நிகழச்சித்திட்டம் - சீனா | 10 ஏற்றுமதித் தயாரிப்புக் கம்பனிகள் |
| China PLAS 2013 | 08 ஏற்றுமதியாளர்கள் |
| வர்த்தக பிரதிநிதிகளின் பங்களிப்பு – பிஜிங் சீனா [CIFTFS] | 07 ஏற்றுமதியாளர்கள் |
| இந்தியாவில் SOLO ஸ்ரீலங்கா நிகழ்வு | 15 ஏற்றுமதியாளர் கம்பனிகள் |
| புட் எக்ஸ் 2013 | 04 ஏற்றுமதியாளர்கள் |
| 1st China South Asia Exposition,SACTF, குங்மிங், சீனா | 114 ஏற்றுமதியாளர்கள் |
| IFEX சந்தை, ஜப்பான் | 12 ஏற்றுமதியாளர்கள் |

**மத்திய கிழக்குப் பிராந்தியம்**

| | |
|---|---|
| Gulf Food UAE 2013 | 15 ஏற்றுமதியாளர்கள் |
| SAITEX 2013, தென் ஆபிரிக்கா | 6 ஏற்றுமதியாளர்கள் |

எமது ஏற்றுமதிகளைப் பல்வகைப்படுத்தி, ஒரு சில பாரிய ஏற்றுமதிச் சந்தைகளில் எமது ஏற்றுமதிகள் தங்கியிருப்பதைக் குறைக்கும் நோக்கில் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் சந்தை ஆய்வுகள் இரண்டு நடாத்தப்பட்டன. இந்த வகையில், பிரேசில், தென்னாபிரிக்கா ஆகிய இரு நாடுகளிலும் சந்தைவாய்ப்பைப் பெறும் நோக்கில் அந்நாடுகள் தொடர்பான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. பிரேசில், தென்னாபிரிக்கா ஆகிய இரு நாடுகளும், எதிர்காலத்தில் அதிகரித்த பொருளாதார வளர்ச்சியின் மத்திய நிலையமாக அடையாளம் காணப்பட்டுள்ள BRICS குழுமத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

- “இலங்கைக்கான உத்தேச சந்தையாக பிரேசிலின் பொருளாதாரம்” என்ற தலைப்பிலான பகுப்பாய்வு
- “தென்னாபிரிக்கச் சந்தையில் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான வாய்ப்புக்களைக் கண்டறிதல்” என்ற தலைப்பிலான பகுப்பாய்வு

**முக்கிய சந்தை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்**

**பெலாருஸ் நாட்டுக்கான வியாபார ஊக்குவிப்பு செயலணி**

பெலாருஸ் நாட்டுக்கு வர்த்தக ஊக்குவிப்புத் தூதுக்குழுவின் விஜயம் 2013 ஆகஸ்ட் 26 முதல் திகதி வரை ரஸ்யாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தினதும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினதும் வேண்டுகோளின் பேரில், இலங்கையின் ஏற்றுமதியாளர்கள் 16 பேரைக் கொண்ட தூதுக்குழுவொன்று, பெலாருஸ் குடியரசில் 2013 ஆகஸ்ட் 26 முதல் 28 ஆந் திகதி வரை நடைபெற்ற வர்த்தக மன்றம் ஒன்றிலும் டீ2டீ கூட்டங்களிலும்

பங்கேற்பதற்காக பெலாருஸ் குடியரசுக்கு விஜயம் செய்தது.

இருநாடுகளுக்குமிடையிலான உறவுகளைப் பலப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்புக்களுக்கு வலுவூட்டும் நோக்கில் இந்த வர்த்தகத் தூதுக்குழு அதிமேதகு ஜனாதிபதி அவர்களுடன் இணைந்து இவ்விஜயத்தை மேற்கொண்டது

இந்த வெளிநாட்டு விஜயத்தின் பயனாக, மின்ஸ்க்கிலுள்ள வர்த்தக சம்மேளனத்தின் 10 பேர் அடங்கிய தூதுக் குழுவொன்று இவ்வருடத்தின் நவம்பர் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. கடந்த வாரம், இலங்கைக்கு விஜயம்செய்த மின்ஸ்க் ட்ரக்டர் கூட்டுத்தபானத்தின் பணிப்பாளர் நாயகம், இலங்கையில் ட்ரக்டர் பொருத்தும் தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கான சாத்தியங்கள் பற்றி ஆராய்ந்தார். இக்கம்பனி ”இலங்கையின் பிரதிபலிப்பு” கண்காட்சியில் தனது ட்ரக்டர் வகைகளைக் காட்சிப்படுத்தும்

இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான தகவல்களைப் பரிமாற்றம் செய்துகொள்வதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கும் சந்தைப்படுத்தல் மற்றும் விலை ஆய்வுகளுக்கான பெலாருஸ் தேசிய நிலையத்துக்கும் (NCMPS) இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

**துருக்கியில் நடைபெற்ற 82 ஆவது இஸ்மிர் சர்வதேச கண்காட்சியில் இலங்கையின் பங்கேற்பு**

2013 ஆகஸ்ட் 29 ஆந் திகதி முதல் செப்டம்பர் 02 ஆந் திகதி வரை துருக்கியில் நடைபெற்ற 82 ஆவது இஸ்மிர் சர்வதேச கண்காட்சியில் இலங்கையின் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து மேற்கொண்டது.

ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இலங்கையின் பங்காளர் நாட்டு பங்கேற்பானது, ஏற்றுமதி வளர்ச்சியின் ஊடாகத் தேசிய பொருளாதாரத்தை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது. இந்நிகழ்வின் குறிக்கோள் இலங்கையின் வர்த்தகம், முதலீடு, சுற்றுலாத் துறை என்பவற்றை ஊக்குவித்து மீள உருவாக்குவதையும் சர்வதேச கொள்வானவர்கள் மத்தியில் நாட்டின் உயர்தரமான உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான நம்பிக்கைக் வளர்ப்பதுமாகும்

**தென்னாசிய வர்த்தகக் கண்காட்சி**

சீனாவின் குங்க்மின் நகரத்தில் நடைபெற்ற தென்னாசிய வர்த்தகக் கண்காட்சியில் முதன் முறையாக 130 காட்சிக் கூடங்களுடன் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளை சீனாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் ஒத்துழைப்புடன் ஏற்றுமதி அபிவிருத்தி சபை செய்தது. இம்முயற்சியானது குறிப்பிட்டத்தக்க வர்த்தக ரீதியான பெறுபேறுகளைப் பெற்றுத் தந்தது.

தென்னாசிய நாடுகளிலிருந்து சீனாவுக்கான இறக்குமதிகளை விரிவாக்கும் நோக்கில் வர்த்தக அமைச்சும் யுனான் மாகாண அரசாங்கமும் கூட்டாக இணைந்து இக்கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தன. இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் (77), தேயிலை (12) கைப்பணிப் பொருட்கள் (12), நார் உற்பத்திகள் (3)இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் (2)மூலிகை உற்பத்திகள் (1) சுற்றுலா (3)என்பன போன்ற துறைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் 113 தனியார் துறைக் கம்பனிகள் இலங்கைக் கூடாரத்தின் கீழ் தங்கள் உற்பத்திகள் காட்சிப்படுத்தின.

இதில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணம், தேயிலை, கைப்பணி உற்பத்தி, நார் உற்பத்தி ஆகிய துறைகள் மிகச் சிறப்பான செயலாற்றுகையை வெளிப்படுத்தின. இக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்ட துறைகள் மூலம் சுமார் 1.3 ஐக்கிய அமெரிக்கா டொலர் பெறுமதியான கொள்வனவுக் கட்டளைகள் கிடைகப் பெற்றன.

இலங்கையின் தென்னைநார்களை அடிப்படையாகக் கொண்ட சூழல் நட்புறவான மட்பாண்ட உற்பத்தியாளர்களுக்கு, சீனாவின் மிகப்பெரிய சூழல் நட்புறவான பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியாளரான சென்னொங் குழுமத்தின் முகாமைத்துவத்தைச் சந்திப்பதற்கான வாய்ப்பினை ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஏற்படுத்திக் கொடுத்தது.

**அக்குவாராமா 2013, சர்வதேச மீன் வளர்ப்புப் போட்டிகள் - இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு 30 விருதுக்ள கிடைத்தமை**

சிங்கப்பூரில் நடைபெற்ற 2013 அக்குவாராமா சர்வதேச மீன் கண்காட்சியில் ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஏற்பாடுசெய்த

"இலங்கைக் கூடாரத்தில்" 17 ஏற்றுமதியாளர்கள் பங்கேற்றனர்

உலகின் மிகப்பெரிய அலங்கார மீன் வளர்ப்புப் போட்டியான "அக்குவாராமா 2013" இல் இலங்கையின் மீன் வளர்ப்பாளர் 30 விருதுகளை வென்றனர்

